
# பொன்மலர்



TB-9

## கணேச வித்தியாசாலை

ஊரெழு

1981

With the Best Compliments

of

**MASCONS LIMITED**

175, Sri Sumanatiss Mawatte,

COLOMBO 12.

*Telephone:*
**25561, 25562, 25563**

*Cable:*
**"Mascons" Colombo**

*Telex:* **21630**
**Masconsce**

*Branch:*
**STANLEY ROAD,**
**JAFFNA.**

TB-9

உ

சிவமயம்

# பொன் மலர்

## ஊரெழு கணேச வித்தியாசாலை

## ஐம்பதாண்டு நிறைவு விழா

## 1981

# சமர்ப்பணம்

அரை நூற்றுண்டு
காலத்துக்கு முன்பே
அறிவுக்கண் திறக்கும்
எண்ணக் கருக் கொண்டு
முன்னின்றுழைத்த
பெரியார்களதும்
அறிவூற்றை அகழ்ந்து
அளித்த ஆசிரியர்களதும்
திருவடிக் கமலங்களுக்கு
இம்மலர் சமர்ப்பணம்

# K. R. SIVALOGANATHAN & CO.

*DEALERS IN:*

**RICE MILL MACHINES**

**ELECTRIC MOTORS & OTHER ACCESSORIES**

*DISTRIBUTORS FOR*

SRI LANKA STATE TRADING CORPORATION

IN SCOOTER & MOTOR SPARES

6, STANLEY ROAD, JAFFNA.

அன்பளிப்பு

மாத்தற பேக்கவுஸ்

சுன்னுகம்.

கல்யாண கேக்

விஸ்கற்

தயாரிப்பாளர்கள்.

**Matara Bake House**

K. K. S. ROAD,

CHUNNAKAM.

**Durga Electricals**

*DEALERS IN:*

ELECTRICAL GOODS

& WIRING

CONTRACTORS

K. K. S. ROAD,

CHUNNAKAM.

Prop: P. NANTHAKUMAR

## ஊரெழு கணேச வித்தியாசாலை

# பொன் விழாச் சபை

| | |
|---|---|
| காப்பாளர் : | திரு. ஆ. வ. தங்கராசா |
| தலைவர் : | திரு. ச. கதிரவேலு |
| துணைத் தலைவர்கள் : | திரு. பே. பரமேஸ்வரநாதன்<br>திருமதி இ. தர்மலிங்கம் |
| செயலாளர் : | திரு. சி. பாலசுப்பிரமணியம் |
| உப செயலாளர் ; | திரு. அ. க. த. கிருஷ்ணராசா<br>திரு. க. வை. தனேஸ்வரன் |
| பொருளாளர் : | திரு. மு. சங்கரப்பிள்ளை |
| உப பொருளாளர் : | திரு. சு. செல்லப்பா<br>திருமதி பு. வைத்தியலிங்கம் |

உறுப்பினர் :

திரு. இ. பொன்னுத்துரை
திருமதி ம. தம்பித்துரை
திருமதி ச. ஜெயராசா
திரு. மு. வீரசிங்கம்
திருமதி ம. முருகையா
திருமதி த. லோகநாயகம்
திருமதி ம. கந்தசாமி
திரு. அ. கனகசூரியர்

### அலங்காரம், ஒழுங்குகள் குழு

திரு. க. பஞ்சலிங்கம்
திரு. ஆ. சபாநாயகம்
திரு. சி. பாலசிங்கம்
திருமதி க. பூலிங்கம்
திரு. செ. செல்வராசா
திரு. ம. மகேந்திரம்
திரு. செ. நடராசா
திரு. ஆ. கணேசு
திரு. அ. காராளசிங்கம்
திரு. பொ. தர்மராசா

### கலைநிகழ்ச்சிக் குழு

திரு. ச. குலோத்துங்கமுதலியார்
திரு. ந. கந்தசாமி ஐயர்
திரு. ந. சிதம்பரேஸ்வரன்
செல்வி ரூபி கந்தவனநாதன்
செல்வி பத்மினி இராசரத்தினம்
திருமதி பு. குலேந்திரநாதன்
செல்வி கீதா நவரத்தினம்
திரு. ச. கந்தசாமி

### உபசரணைக் குழு

திரு. ந. துரைராசா
திரு. மு. வாமதேவன்
திருமதி மு. சங்கரப்பிள்ளை
திரு. பொ. சற்குணநாதன்
திரு. ப. பரமநாதன்
திரு. ந. சின்னத்தம்பி
திரு. இ. பத்மநாதன்
திருமதி தெ. தெய்வேந்திரம்
திருமதி பு. இராமநாதன்
திரு. அ. சிவஞானம்

### மலர்க் குழு

திரு. சி. பாலசுப்பிரமணியம், B. Ed.
திரு. கை. சண்முகநாதன், M. A.
திரு. வே. பரமநாதன்
பண்டிதர் ச. குமரேசையா
வித்துவான் க. ந. வேலன், B. O. L.
திருமதி பொன். கிருஷ்ணபிள்ளை

உள்ளம் மகிழும்
உயர்ந்த தங்கப்பவுண் நகைகளுக்கு
உத்தரவாதத்துடன்கூடிய வியாபாரத்தலம்

# தங்கநகை மாளிகை

நம்பிக்கை — நாணயம்

பலாலி வீதி,
உரும்பிராய்ச் சந்தி,
உரும்பிராய்.

# என். எஸ். ஆர். இன்டஸ்ரீஸ்

பலாலி வீதி, புன்னாலைக்கட்டுவன்.

நவீன டிசைன்களில் கேற், கிறில் வேலைகள்,
மின்சார ஒட்டு, டிரக்ரர் பெட்டி,
லொறி வேலைகள், விவசாய உபகரணங்கள்
சிறந்தமுறையில் செய்துகொடுக்கப்படும்

உரிமையாளர் :

இ. சின்னராசா




ஆரம்பம் முதல்,
35 வருடங்கள் அதிபராக அரும்பணி புரிந்த
**அமரர் திரு. ந. கந்தையா அவர்கள்**

# உள்ளே...


| | | பக்கம் |
|---|---|---|
| ஊரெழு வீரகத்தி விநாயகர் கீர்த்தனைகள் | ... | i |
| வணக்கம் | ... | ii |
| குவலயங்கள் கேட்பதற்கு | ... | 1 |
| ஊரெழு சு. சரவணமுத்துப்பிள்ளை—ஒரு மதிப்பீடு | ... | 2 |
| வெளிச்சம் | ... | 8 |
| ஆசிரியன் வகுப்பறையின் கதாநாயகன் | ... | 9 |
| படிச்சு முடியவில்லை | ... | 12 |
| ஈழத்து நாவல்களும் சமுதாயச் சார்பும் | ... | 14 |
| கண்ணன் பாட்டில் அணிநயம் | ... | 16 |
| சிறந்த மாணவனே இலட்சிய மனிதன் | ... | 21 |
| சிவதி புராணம் | ... | 22 |
| தமிழிலக்கியத்தில் கல்விக் கொள்கை | ... | 26 |
| அழியாப் பணி | ... | 35 |
| காலைக் கதிரவன் | ... | 37 |
| Education and Modern Society | ... | 38 |
| My Village | ... | 59 |
| பொன் விழாப் பொலிந்து வாழி ! | ... | 40 |
| துள்ளித் திரியும் பள்ளிப் பருவம் | ... | 42 |
| ' ஆசா நிகளம் ' | ... | 43 |
| நன்றி நாகரிகம் | ... | 47 |
| உலக வங்கியும் குறைவிருத்தி நாடுகளும் | ... | 49 |
| ஊரெழு காண்பீரே ! | ... | 57 |
| தொழிற் கல்வியும் நாட்டின் அபிவிருத்தியும் | ... | 61 |
| நன்றி மறப்பது நன்றன்று | ... | 64 |




# ஆசிச் செய்தி



திரு. க. சிவநாதன்,

கல்விப் பணிப்பாளர்

வடமாநிலம்

ஊரெழு கணேச வித்தியாசாலை பொன்விழா எடுப்பதறிந்து பெரு மகிழ்வடைகின்றேன். கல்வித்துறையில், ஐம்பதாண்டுகள் அருந்தொண்டாற்றிய ஒரு கல்வி நிறுவனம் விழாக் காண்பது பெரிதும் வரவேற்கக் கூடியதாகும். வளர்ந்துவரும் கிராமப்புறப் பாடசாலைகளின் வரிசையில் 'ஊரெழு கணேசா' சேர்ந்துகொண்டதும் மகிழ்ச்சிக்குரியதே. கிராமப் பாடசாலைகளின் வளர்ச்சி கல்விப் பணியைப் பூரணப்படுத்துவதில் பெரும் பங்காற்றும்.

இவ்வித்தியாசாலையின் ஆக்கத்தில் இதன் அதிபர், ஆசிரியர், பெற்றோர், பழைய மாணவர் ஆதியோர் கருத்தொருமைப்பாட்டுடன் கருமமாற்றுவது, இதன் வளர்ச்சிக்கு வாய்ப்பான அறிகுறியாகும்.

ஆரவாரம் எதுவுமின்றி அமைதியாகத் தன்பணியை ஆற்றிக்கொண்டிருக்கும் இவ்வித்தியாசாலை நாடெங்கும் கல்வி நறுமணம்வீசி, அறிவுத்தேன் சொட்டி ஐம்பதாண்டுகளுக்கு முன்னர் இத்தாபனத்தை நிறுவியவர்களின் நல்ல நோக்கம், மேலும் வலுவடைய இறை துணைபுரியவேண்டுமென வணங்கி, ஆசீர்வதிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

ஊரெழு
கணேச வித்தியாசாலை

# பொன்விழா
# ஆசிச் செய்தி



யோகேந்திரா துரைசுவாமி
மாவட்ட அமைச்சின் செயலாளரும்,
யாழ் அரசாங்க அதிபரும்.

ஊரெழு கணேச வித்தியாசாலையின் பொன் விழாவிற்கு வாழ்த்துச் செய்தி அளிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். யாழ்ப்பாண மாவட்டக் கல்வி வரலாற்றில் கிராமப் பாடசாலைகள் பெரும் பங்களிப்பினைச் செய்திருக்கின்றன. கிராமப்புற சமுதாய, கலாச்சார மறுமலர்ச்சியைத் தோற்றுவிப்பதில் இப்பாடசாலைகள் பெரும் தொண்டாற்றியுள்ளன, என்பது வரலாறு. கணேச வித்தியாசாலை அவ்விதமே சிறந்த கல்விமான்களையும், நற்பிரஜைகளையும் உருவாக்கியுள்ளது ; உருவாக்கி வருகிறது. இக்கல்வியாலயம் மென்மேலும் தன் சேவையால் இப்பகுதி மக்களுக்கும், நமது தேசத்திற்கும் பெரும் புகழையும், நற்பயனையும் விளைவிக்கவேண்டி இறைவனை வேண்டி இக்கணேச வித்தியாலயத்தை வாழ்த்துகின்றேன்.

# பொன் விழா—வெற்றி விழா

நா. திருநாவுக்கரசு,
கணக்காளர், கல்வித்திணைக்களம்
யாழ்ப்பாணம்

**ஊ**ரெழுவின் தூண்டாமணியாக அறிவொளி பரப்பி வரும் கணேச வித்தியாசாலை ஒழுங்கான—தரமான சிறிய பாடசாலைகளில் ஒன்ருகும். ஒழுக்கமும், அறிவும், பண்பாடும் நிறைந்த ஒரு சமுதாயத்தை உருவாக்குவதில் கணேசா தன் பங்கைச் சிறப்பாக ஆற்றிவருகிறது. ஐம்பதாண்டுகள் தொடர்ந்து ஆக்கப்பணிகள் செய்வதென்பது சர்தாரண காரியமன்று. ஒரு தாபனத்தை வழிநடாத்திச் செல்வதில் தலைவனுக்கே முக்கிய பங்குண்டு. மரக்கலத்தைச் செவ்வனே செலுத்தும் தகைமை மாலுமியிடமேயுண்டு. கணேசா பெற்றிருக்கும் தகுதிவாய்ந்த அதிபரும், தரமான ஆசிரியர்களும் இப்பாடசாலையை மேலும் உயர்ந்த தாபனமாக வளர்த்தெடுப்பார்கள் என்பதில் எனக்கு உறுதியான நம்பிக்கையுண்டு. மேலும் பெற்ருேரும், பழைய மாணவர்களும் என்றும் உறுதுணையாக இருக்கிருர்கள் என்பதை நான் அறிவேன். எமது நம்பிக்கைக்குப் பாத்திரமாகவே இன்றைய பொன்விழா—வெற்றி விழாவாக அமைகிறது. இவ்வெற்றிவிழாக் கணேசாவுக்கு மேலும் பல வெற்றிகளை ஈட்டிக் கொடுத்து, வைரவிழா, நூற்ருண்டு விழாக்களைக் காணும்போது சகலதுறைகளையும் பூரணப்படுத்தி மகாவித்தியாலயமாகத் திகழவேண்டுமென இறைவனை வேண்டி வாழ்த்தி வணங்குகின்றேன்.


# வாழ்த்து

ஏ. வி. தங்கராசா, B. A., C. E. S.
கோப்பாய் வட்டாரக்
கல்வி அதிகாரி

மனித வாழ்விலே ஐம்பது ஆண்டுகள் அளப்பரிய காலமாகும். இக்கால எல்லையிலே சைவமும் தமிழும் கமழுகின்ற ஊரெழுக் கிராமத்தின் கண்ணெனத்தகும் கணேஷ வித்தியாலயம் ஆற்றிய சேவை மகத்தானது. ஊருக்கொரு வித்தியாலயம் என்ற நோக்கிலே தோற்றுவிக்கப்பட்ட ஊரெழு கணேஷ வித்தியாலயம் இவ்வூர் மக்களுக்கு அரிய சேவை செய்துள்ளமை பாராட்டுதற்குரியது. இங்கு கல்விகற்ற மாணவர்கள் பல துறைகளிலும், பலநாட்டிலும் சிறப்புற்று இருப்பதை நாம் காணக்கூடியதாக இருக்கின்றது.

இன்று இவ்வூர் வள்ளல்களால் இவ்வித்தியாலயத்திற்கு வழங்கப்பட்ட கட்டிடங்களைக் காண்கின்றோம். இங்கு கல்வி கற்று மிளிரும் பழைய மாணவர்களைக் காண்கின்றோம்.

இன்று இவ்வித்தியாலயம் ஆற்றல்சால் அதிபர் திரு. ச. கதிரவேலுஅவர்களின் தலைமையில் அரைநூற்றுண்டைக் கடக்கின்றது. அவர்களின் காலத்திலேயே இவ்வித்தியாலயம் மகா வித்தியாலயத்தின் தரத்திற்கு உயர்த்தப்பட்டுத் தொடர்ந்து சிறந்த சேவை ஆற்றவேண்டுமென இறைவனை வேண்டி வாழ்த்துகின்றேன்.



# வாழ்த்து

ந. துரைராசா,
முன்னுள் அதிபர்.

ஊரெழுவின் பெயரை உலகெல்லாம் மிளிர வகைசெய்த கணேச வித்தியாசாலே, இன்று பொன் விழாக் கோலம் பூண்டுள்ளமை கண்டு, பூரிப்படைகின்றேன். யான், ஏழு வருடங்களுக்குமேல் அதிபராகப் பணியாற்றிய இப்பாடசாலேயில், கல்விபயின்ற பலர் இலங்கையிலும், உலகின் பல்வேறு பகுதிகளிலும் உயர்நிலேயில் இருக்கிருர்கள். அமைதியான சூழலில் கோலாகலமாகப் பொன்விழாக் காணும் இப்பாடசாலேயின், அதிபர், ஆசிரியர், மாணவர், பழையமாணவர், பெற்ருேர் ஆதியோர் கருமமாற்றுவதைப் பார்க்கும்போது கிராமம் என்றும் காணுத வகையில் இந்திரவிழாவொன்றினேக் காணப் போகிறதே யென்ற, மனக்கிளர்ச்சி ஏற்படுகிறது.

பொன்விழா சிறப்புடன் அமைவதுடன், இத்தாபனம் மேலும் நன்மக்களே உருவாக்கிப் பண்பான சமுதாயமொன்றினேக் கட்டி எழுப்பக்கூடிய, பெருந்தாபனமாகத் திகழ எல்லோரும் கைகொடுத்து உதவவேண்டுமென்று வேண்டி வாழ்த்துகின்றேன்.

வாழ்க கணேச வித்தியாசாலே.

# ஊரெழு வீரகத்தி விநாயகர் கீர்த்தனைகள்

இயலிசைவாரிதி, ஸாசித்ய சிரோமணி
பிரம்மஶ்ரீ மா. த. ந. வீரமணி ஐயர்

ராகம் : அமிர்தவர்ஷனி தாளம் : ஆதி

பல்லவி

சீரெழு செழும்பதி ஊரெழுத்தலம் வளர்
காரெழு வண்ணனே கணபதியே சரணம்

அனுபல்லவி

ஏரெழும் ஓசையும் ஏடெழும் ஓசையும்
பாவெழும் ஓசையும் பரந்துசூழும் எழில்

சரணம்

வாரணனேபரி பூரணனே மூல
காரணனே அருள்வாய் வீரகத்தி தேவா
தாரணிதனிலே உன்தாளிணை தருவாயே,
பூரணி பாலகனே நாரணன் மருகோனே.

ராகம் : காபி தாளம் : ஆதி

பல்லவி

ஊர்திரு வோங்கிடும் ஊரெழுப் பதியமர்
சீர் வீரகத்தி பதம் சேர்ந்திடுவாய்—மனமே

அனுபல்லவி

பார்புகழ் பைந்தமிழ்ப்பாடல் இசைத்து அவன்
தார்மலர்த்தாள் சூட்டித் தரணியில் அனுதினம்

சரணம்

சண்முகன் சோதரன் சதாசிவன் பாலகன்
பண்முறை பாடிடந் பரிந்தருள் நல்குவன்
கண்மணி கணபதி கழலிணை நாடுவாய்
மண்ணதில் ஸகல ஸௌபாக்யம் அருள்வான்.

✶

## விவசாயிகளுக்கு ஒரு நற்செய்தி

உங்கள் பயிர்களில் பூச்சித் தொல்லையா?
பூஞ்சணத் தொல்லையா?

என்றும் உங்களை வரவேற்று உங்கள் திருப்தியில்
எங்கள் மகிழ்ச்சியைக் காண்பதற்கும்,
தகுந்த ஆலோசனையுடன் தகுதிவாய்நத மருந்துகளை
மலிவு விலையில் பெற்றுத் திருப்தியடைவதற்கும்
உங்களை அழைக்கும் ஒரே ஸ்தாபனம்

# "முருகன் ஸ்ரோர்ஸ்"

புன்னாலைக் கட்டுவன்
தெற்கு சந்தி,
சுன்னாகம்.

---

## நவீன

## தளபாட உற்பத்தித் தொழிற்சாலை

யாழ்ப்பாணப் பாணியில் தயாரிக்கப்படும்
தரமான மரத்தளபாடங்களை
உடனடியாகச் செய்து தரத் தயாராக இருக்கின்றோம்.

உரிமையாளர்:

**கே. நடராசா.**

மல்லாகம் வீதி,
ஏழாலை.

அதிபர்



திரு. ச. கதிரவேலு B. A.

# வணக்கம்

**வணக்கம், வாருங்கள்.**

ஊரெழு கணேசவித்தியாசாலையின் ஐம்பதாண்டு நிறைவையொட்டி, நன்றியுள்ளம் படைத்த ஊரெழுமக்கள், ஆனந்தத்துடனும் மனநிறைவுடனும் பொன்விழாக்காணும் இந்நாளில் கணேச வித்தியாசாலையை ஒருமுறை திரும்பிப் பார்த்துவிட்டு, உள்ளேவாருங்கள்.

யான் இந்தப்பாடசாலையில் அ-ஞப்படித்தவன். அறிஞர் அப்புக்குட்டி அவர்கள், எனக்கு அ-ஞச் சொல்லி ஏடுதொடக்கி வைத்ததாக அப்பு அடிக்கடி சொல்லுவார். அவர்கள் இந்தப்பாடசாலையின் ஆரம்பகால ஆசிரியர். கணேச வித்தியாசாலை முதலில் ஆரம்பிக்கப்பட்ட தலம் அன்றைய சிற்றம்பலம் வீடு. தொடர்ந்து நடந்த இடம் திரு. வி. வீரவாகு வீடு. இங்கு சிலமாதங்களைக் கழித்ததாக ஞாபகம். சின்னஞ்சிறிய வாங்குகளைக் காவிக்கொண்டு இன்று கணேச வித்தியாசாலை அமைந்து நிலைகொண்டு, வளர்ந்து வரும் இத்திருத்தலத்திற்கு வந்த காட்சியும் கண்முன்னே நிற்கிறது. இந்நிலம் பிரம ஸ்ரீ பொன்னையர் சந்ததியினல் வீரகத்தி விநாயகருக்குத் தர்மசாதனம் செய்யப்பட்ட ஆதனமாகும்.

ஐம்பதாண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த ஊரெழுவார் சிலருடைய சிந்தனையின் ஊற்ருகவே இன்றையபாடசாலை திகழ்கிறது என்பதை நாம் மனத்தில் இருத்தி அவர்களுக்கு நன்றி தெரிவிக்கவேண்டியது நமதுகடன்; சின்னவர்களுக்கும் பழக்கவேண்டியது. இந்த வித்தியாதானத்தில் தம்மை அர்ப்பணித்தவர்களின் சந்ததி சிறப்பாகவே இருக்கிறது.

> '' தக்கார் தகவிலர் என்பது அவரவர்
> எச்சத்தால் அறியப்படும் ''

என்ற வள்ளுவர் வாக்கு, இப்பணியில் ஈடுபட்ட அத்தனைபேருக்கும் ஏற்புடைத்ததாகவே காணப்படுகிறது. 1931-2-9-ல் சைவவித்தியா விருத்திச் சங்கச் செயலாளர் இராசரத்தினம் அவர்கள் தலைமையில் புதியகட்டிடத் திறப்புவிழா இடம்பெற்றபோது 5 ஆசிரியர்களும் 127 மாணுக்கர்களும் கணேச வித்தியாசாலையை அலங்கரித்தனர்.

திருவாளர்கள் வி. ஆர். தம்பையா அவர்களே முதல் அதிபர் ஆசனத்தை அலங்கரித்தார். அவர்கள் தெல்லிப்பளை யூனியன் கல்லூரியில் பயிற்சி பெற்ற ஆசிரியராவர். அவர்களை அன்றுதொடக்கம் இன்றுவரை அதிபர் என்றோ தலைமையாசிரியர் என்றோ யாரும் அழைப்பதில்லை. அவர் அன்றும் இன்றும் மனேச்சர்தான். அவரின் உருவம் சற்றுச் சிறிதாஞலும் அன்னரின் ஆளுமை மிக விழுமியது. மனேச்சர் வித்தியாசாலைக்குள் நுழையும்போது பாடசாலையில் காணப்படும் அமைதி, உயர் நீதிமன்றத்தினுள் நீதியரசர் புகும்போதுள்ள நிலைமையை ஒத்ததாக இருக்கும்.

சிலகாலம் மனேச்சர் இருந்துபார்த்த ஆசனத்தை ஒருசந்ததி காலத்துக்கு மேலாக அலங்கரித்தவர்தான் எனது ஆசிரியப் பெருந்தகை திரு. ந. கந்தையா அவர்கள். கந்தையா ஆசிரியர் முதல்வாத்தியார், குப்பிழான் வாத்தியார் என்ற பெயர்களால் பிரபல்யம் அடைந்தவர், இவர்கள் தலைமை ஆசிரியராகவே பிறந்தவர். கணேசாவின் சிம்மாசனத்தை முப்பத்தைந்து வருடங்களுக்கு மேலாக அலங்கரித்தவர். அவர்களின் வெள்ளைவேட்டியும், கறுப்புச் சுருட்டும்; கைப்பிரம்பும், றலிசயிக்கிலும் என்றும் கண்முன் நிற்பவை. எல்லோரும் சேர்ந்து சத்தமிட்டால், மேசையில் சுட்டுவிரலால் ஒருதட்டு. அங்குமிங்கும் நின்று துள்ளிக்குதித்தால் தெற்குவாசல் நிலைப்படியில் கையைத் தொங்கப் போட்டுக்கொண்டு ஒரு உரப்பு.

இவர்களின் தலைமையில்தான் திருமதி பவளம்மா, திருமதி பொன்னம்மா, திருமதி அமுது, திருவாளர்கள் இராசசிங்கம், சதாசிவம் என்று ஒரு ஆசிரியர் கூட்டம். தொடர்ந்து திருமதி இ. தர்மலிங்கம், திரு. ச. குலோத்துங்க முதலியார், பிரம்ம ஸ்ரீ தங்கசாமி ஐயர், திரு. சி. வைத்திலிங்கம் இப்படிப்பலர். நீண்ட ஆசிரியர் பட்டியல். இக்கிராமத்தின் நாகரிக வளர்ச்சிக்குப் பொறுப்பாகக் கடமையாற்றியுள்ளனர். பழைய ஆசிரியர்பலர் கணேசாவின் பொன்விழாவைக் கண்டுகளிக்கும் வாய்ப்பினைப் பெற்றுள்ளார்கள் என்பதில் எமக்குப் பெருமிதம். கணேசாவை உருவாக்கியவர்கள்' நிர்வகித்தவர்கள் சிலரும் விழாக்கண்டு குளிரக் கொடுத்து வைத்துள்ளார்கள்.

தொடர்ந்து சிலஆண்டுகள் இவ்வரியணையில் அமர்ந்தவர்கள் திருவாளர்கள் இராசசிங்கமும் சிவக்கொழுந்துமாவர். இருவருமே அக்காலத்தில் அரசாங்க பாடசாலைகளில் சேவையாற்றி இங்குவந்து சேர்ந்த பெருவீரர்கள். நிர்வாகத் திறனுடன், நிமிர்ந்தபோக்கும் சீரிய பண்புமுடையோராவர்.

இப்பீடத்தினைத் தொடர்ந்து அணிசெய்தவர்தான் திரு. ந. துரைராசா அவர்கள். கணேசாவின் வளர்ச்சிப்படியில் அன்னாரின் காலம், குறிப்பிடத்தக்க காலப் பகுதியாகும். இக்காலப்பகுதியில் கட்டிடங்கள் அமைந்தன. கல்வி தரமானது. வகுப்புகள் வளர்ந்தன.

இம்மாண்புசால் ஆசனம், எனது எண்ணத்திற்கு எதிராக எனக்குவந்து சேர்ந்தது. திரு. தி. மாணிக்கவாசகரினால் வழங்கப்பட, நண்பன் நா. இராசநாயகத்தால் கொண்டுவந்து சேர்க்கப்பட்டது. இதுவும் தவப்பயனே. ''எனது பொன்விழாவும் உன்காலத்தே'' எனப் பணிக்கப்பட்டது. இதுவும் நற்பேறே எல்லாம் எப்பவோ முடிந்த காரியம். யான் செய்யத்தக்கது ஒன்றில்லை, எல்லாம் அவன்செயல். இன்னும் மூன்றாண்டுகள் பூர்த்தியில்லை. ஆயினும் அலுவலகம் அமைத்தும், குழாய்நீர் வசதி செய்தும், மின்னொளி அமைத்தும் அழகான நுழைவாயில் அமைத்தும் கணேசாவின் வளர்ச்சியைக் காணத்துடிக்கும் கிராமத்தவர்பலர் மலர்ந்தமுகத்துடனும் அலர்ந்த கரத்துடனும் எமக்கு ஆதரவளித்துக் கொண்டே யிருக்கின்றார்கள். இவர்களின் ஆதரவு எவர்காலத்திற்கும் தொடரும். இன்று பொன்விழாக்காண்பதிலும் நன்றியுள்ளம் படைத்த ஊரெழு

மக்கள் நான்முந்தி, நீமுந்தி என்று உதவுகின்றார்கள், தொடர்ந்தும் வித்தியாலயத்தின் தேவைகளை நிறைவேற்றவும், குறைகளை நிவர்த்தி செய்யவும் நம்மூரவர்கள் தயார்என்பதை அறிவோம். அவை பயன்படுத்தப்படும்.

சகலவிதமான பயன்பாடுகளுக்கும் செயற்றிறனுக்கும் அணி செய்பவர்கள் எனதருமை ஆசிரியர்கள். வயது கிழமானவர்கள் உள்ளத்து இளமையோடும், வயது இளையவர்கள் உள்ள முதிர்வோடும், துள்ளிக் குதித்தும், ஆற அமர்ந்தும் கடமைசெய்யும் அழகு தனித்துவமானது. இவற்றிற்குமேலாக கல்வித்திணைக்களம் எமக்கு வேண்டிய கட்டிடம், தளபாடம் என்பன உதவி அணி செய்கிறது. பெற்றார், ஆசிரியர், அதிகாரிகள் என்போரின் ஒருங்கிணைந்த உழைப்பே கணேசாவின் பொன்விழாக்கோலம். கணேசாவைப் பொன்விழாக் கோலத்தில் காணவைத்த—உழைத்த—உதவிய—ஆதரித்த, ஊரவர், ஆசிரியர், அதிகாரிகள் அத்தனை பேரையும் கனிந்த நன்றியுடன் கணேசா வரவேற்கின்றது. அதனருமை மாணவர்கள் ' சீர்பதினாறுஞ் சிறப்புடன் பெற்று பார்புகழ வாழ்க பல்லாண்டு' என வாழ்த்துகிறது.

வாருங்கள், வணக்கம்.

அதிபர்.



உ

பலசரக்கு வியாபாரம்

உங்கள்
வீட்டுக்குத் தேவையான

சகல உணவுப் பொருட்களையும், சில்லறைப் பொருட்களையும்
பெறுவதற்குரிய ஒரே இடம்,

# அம்மன் ஸ்ரோர்ஸ்

உரிமையாளர் :

சோ. விக்னேஸ்வரன்

புலாலி வீதி,
ஊரெழு.

# குவலயங்கள் கேட்பதற்கு....

பண்டிதர் ச. குமரேசையா

ஆனை முகத்தான் அருளமிழ்தின் ஐம்ப தாட்டை அன்னாய்!முந்
தானை மடியில் தமிழமிழ்தம் தருவாய் வாழி! தாயே நீ!
வானை வரம்பாய் வகுத்தாள்செந் தமிழர் வழியேம் அம்மா!வுன்
சேனைச் சிறார்நின் சேவடிகள் சென்னி சேர்த்துத் தொழுவோமால்.

எந்தை தாயர் முகம்கிள்ளி எடுத்தே உச்சி மோந்துகலை
தந்தாய் வாழி! தயாபரியே! தாம்தேய்ந் தாலும் தளர்வோர்தம்
சிந்தை மலர்த்தும் செந்தமிழ்ச் சிறாருக் கருளல் செவ்விதம்மா,
எந்தம் இறைவி! எமதுயிர்நீ! ஏத்தி வருவேம் இனிதருளே!

பண்பா டெங்கள் பழஞ்சொத்து, பழியே அறியாப் பழங்குடியேம்
புண்பா டொருவர் பொருந்துதலைப் பொறுக்கா மரபின் புதல்வர்யாம்
எண்பா டெழுத்து நினதருளால் எழுத்தெ ழுத்தாய்க் கற்றவினம்
கண்பா டிலையாய்க் கடைக்கணியே! கணேச நாமக் கலைக்கரும்பே!

அழகார் முகச்செந் தாமரைகள் அலரும் அதிபர் ஆசிரியர்
பழகுந் திறத்தர் பயன்சுரக்கும் பான்மை நினக்குப் பால்யமுதல்
வழமை; அருள்வாய் வாழ்வெமக்கு வைதார் தமக்கும் வாழ்வளிக்கும்
பழமை யோமப் பண்புகலைத் தாயர் அளித்த பரிசலவா!

'யாதும் ஊரே யாவரும்நற் கேளிர்' எனப்பல் யாண்டுகள்முன்
ஓதும் எந்தைக் கெந்தைவழி உணர வைத்தாய் ஒளிர்விளக்கே!
ஏதம் அதற்காய் இடைவருதல் ஏற்கா வுளத்தோம்; உணர்விப்பாய்
சீதத் தரள வுருச்செல்விச் சேவ டிக்கீழ்ச் சிறுவர்களே

அல்லி மலர்கள் ஆயிரமாய் அலரும் அழகை அணைத்தெடுத்துப்
புல்லி மகிழ்ந்தே பூரிப்பாய்ப் புத்தம் புதிய கலைத்தேனைக்
கல்விப் பெருக்கார் ஆசிரியக் கமல மலர்கள் கட்டவிழ்ந்து
சொல்லி அள்ளிச் சொரிந்து நிற்கும் சுவர்க்கமாமே நின்சுகமே

கால மெல்லாம் கலைஞானம் கனிந்தே அருள்வாய் கலைச்செல்வி
சீலந் தருவாய், சிவஞானச் செல்வஞ் சேர்த்தெம் சிந்தையிலே
சாலக் கொலுவீற் றிருந்தொன்று சாற்றக் கேள்செந் தமிழென்னும்
கோல மொழியிற் பேசம்மா! குவலயங்கள் கேட்பதற்கே.

★ ★ ★

# ஊரெழு சு. சரவணமுத்துப்பிள்ளை — ஒருமதிப்பீடு

கலாநிதி க. கைலாசபதி
(கலைப்பீடாதிபதி, பல்கலைக் கழகம், யாழ்ப்பாணம்.)

ஆறுமுக நாவலர் (1822—1879), இலங்கையிலும் தமிழ் நாட்டிலும் தமிழ்ப் பணி சைவசமயப்பணி என்பவற்றைச் செய்தபொழுது அவருக்குப் பக்கபலமாகச் சில தொண்டர்கள் இருந்து வந்தனர். நாவலர் அவர்களின் ஆளுமையாலும் செயலூக்கத்தாலும் ஈர்க்கப்பட்ட தொண்டர்கள் பலதரப்பட்டவர்கள். சுன்னுகம் முருகேசு பண்டிதர். மு. கார்த்திகேயப்புலவர், நீர்வேலி சிவ-சங்கர பண்டிதர் போன்ருேர் ஏறத்தாழ நாவலருக்கு ஒத்த வயதுடையோர். அம்பலவாண நாவலர், நா. கதிரைவேற்பிள்ளை முதலியோர் நாவலரின் சிடர்கள் எனக் கூறத்தக்கவர்கள். இவ்விரு திறத்தினருக்கும் இடைப்பட, நாவலரவர்களுக்குச் சிறிது இளையவர்களாய் நண்பர்களென்றோ, சீடர்களென்றோ கூறவியலாத வகையில் சிலரிருந்தனர். இவர்கள் நாவலரை நேரேயறிந்தவர்கள்; அவரது பல்வேறு பணிகளாற் கவரப்பட்டவர்கள்; நாவலர் மறைந்ததன் பின் அவர் காட்டிய வழியிற் சென்று சில பல காரியங்களைச் சாதித்தவர்கள். சு. ஏரம்பையர், சி.வை. தாமோதரம்பிள்ளை, சுன்னுகம் குமாரசுவாமிப்புலவர், காசிவாசி செந்திநாதையர், சபாபதிநாவலர், ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை ச. சபாரத்தின முதலியார் முதலியோர் இப்பிரிவில் அடங்குவர். இவர்களுடன் வைத்து எண்ணப்பட வேண்டியவரே ஊரெழு சு. சரவணமுத்துப்பிள்ளை அவர்கள் **(1848-1916).**

நாவலர் காலத்திலும் அவருக்குப் பின்னரும் தமிழ்ப்பணியிலும், சமயப்பணியிலும் ஈடுபட்ட பலர் அப்பணிகளையே தமது முழுநேர வாழ்க்கை முயற்சிகளாகக் கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கதொன்ருகும். சிற்-கைலாசபிள்ளை, சி. வை. தாமோதரம்பிள்ளை, சபாரத்தின முதலியார் முதலியோர் சிலகாலம் அரசாங்க சேவையில் இருந்துவிட்டுப் பின்னர் பொதுப் பணிக்கு வந்தனர். ஆ.முத்துத்தம்பிப்பிள்ளை போல வேறு சிலர் வணிக முயற்சிகளிலும் ஈடுபட்டு வந்தனர். ஆயினும் நாவலர்பரம்பரையினர் என்று விவரிக்கத் தக்கவர்கள் பலர், தமிழ் கற்பித்தல், சொற்பொழிவுகள் நிகழ்த்துதல், பத்திரிகைகள் நடத்துதல், சமய சம்பந்தமான வாதப் பிரதிவாதங்களில் பங்குபற்றல், சமய சீர்திருத்த முயற்சிகளில் முன்னின்றுழைத்தல் என்பனவற்றையே ஊதியங் கருதாத் தொண்டுகளாகச் செய்துவந்தனர். தற்காலத்திலே சிற்சில அரசியல் கட்சிகளைச் சார்ந்தோர் கொள்கைப்பற்று, இலட்சிய வேட்கை காரணமாகக் கட்சியின் முழுநேர ஊழியராகக் கடமையாற்றுவது போலவே நாவலரது ஞான பரம்பரையில் வந்த பலர், லோகோபகாரமான பல பணிகளைக் கஷ்டநஷ்டங்களையும் பொருட்படுத்தாது செய்து வந்தனர். அது அவர்களுக்கு ஒருவிதமான ஆத்மதிருப்தியை அளித்திருக்க வேண்டும்.

ஊரெழு சுப்பிரமணியபிள்ளை சரவணமுத்துப்பிள்ளை நாவலரின் ஞானபரம்பரையைச் சேர்ந்தவர். இளமையிலே புன்னாலைக் கட்டுவன் ச. கதிர்காமையரிடம் தமிழிலக்கியம் கற்ருர். (கதிர்காமையர் தமது இளமைக் காலத்திலே ஊரெழுவிலிருந்த மயில்வாகனப்புலவர் என்பவரிடத்திற் சில இலக்கியங்களைக் கற்றவர்). பின்பு சரவணமுத்துப்பிள்ளை சுன்னுகம் பூ.முருகேச பண்டிதரிடம் (1829-1900) இலக்கண இலக்கியங்களைக் கற்றுத் தெளிந்தார். முருகேச பண்டிதர் இலக்கணத்திற் பெரிதும் பாண்டித்தியம் வாய்க்கப் பெற்றமையினல், 'இலக்கணக் கொட்டன்' என்று அழைக்கப்

பட்டவர். இவர் யாழ்ப்பாணத்தில் மட்டுமன்றி, தமிழ்நாட்டிலே சிதம்பரம், கும்பகோணம், சென்னை, திருப்பற்றூர் முதலிய இடங்களிலும் மதிக்கப்பெற்ற தமிழாசிரியராக இருந்தவர். முருகேச பண்டிதரிடம் சரவணமுத்துப்பிள்ளை கற்ற காலத்திலேயே உடன் மாணுக்கராகச் சுன்னுகம் அ.குமாரசுவாமிப்புலவரும், ஆ. முத்துத்தம்பிப்பிள்ளையும் பாடங் கேட்டனர் என்பர். 1898ல் யாழ்ப்பாணத்திலே தாபிக்கப்பெற்றதமிழ்ச் சங்கத்து வித்துவ உறுப்பினர்களாக வீற்றிருந்த ஐவருள் இம்மூவரும் விளங்கினர். வட்டுக்கோட்டை ஆறுமுக உபாத்தியாயர், நல்லூர் வே.கனகசபாபதிக் குருக்கள் ஆகியோர் மற்றிருவருமாவர். த.கைலாசபிள்ளை தலைவராக இருந்த தமிழ்ச்சங்கத்திற்கு குகதாசர் ச. சபாரத்தின முதலியார் செயலாளராய்க் கடமையாற்றினுர்.

சரவணமுத்துப்பிள்ளை இளமையிலே ஆங்கிலமும் கற்றுக் கொண்டார். சைவசித்தாந்த சாத்திரநூல்களிலும் நிரம்பிய பயிற்சியுடையவராயிருந்தார். இதனுல்இவரைச் சுத்தாத்துவித சைவசித்தாந்தப் பிரசாரகர் எனப்பலர் புகழ்ந்து பேசியுள்ளனர். இவ்விடத்திலே 'பிரசாரகர்' என்னும் பதப்பிரயோகம் கவனிக்கத் தக்கதாகும். ஆங்கிலத்திலே (Publicist) என்னும் பதத்திற்குச் சமமானது இது. ஆறுமுகநாவலர் காலத்திலே இப்பதப்பிரயோகம் பெருவழக்குற்றது. ''சைவப்பிரசாரகர்'' என்னும் புனைபெயரிலே '' **நல்லூர்க் கந்தசுவாமி கோயில்**'' என்னும் பிரசுரத்தை 1875ல் நாவலர் வெளியிட்டார். அது இரு பகுதிகளாய் அமைந்தது. அவற்றிற்கு எதிராக தூஷணைகளே மிகவும் பொதிந்த ''**பிரதி கண்டனம்**'' என்னும் பிரசுரம் நான்கு பகுதிகளாய் கோயிலதிகாரிகளால் வெளியிடப்பட்டது. அதற்கு உத்தரமாக ''**மித்தியாவாத நிரசனம்**'' என்னும் நீண்ட—வைரம்பாய்ந்த—கட்டுரை நாவலர் பேனையிலிருந்து புறப்பட்டது. அதிலே சைவப்பிரசாரகர் என்னும் தொடரினுலேயே நாவலர் குறிப்பிடப்படுதல் கவனிக்கத் தக்கது. ''தமிழ் விருத்தி கைம்மாறு கருதாது செய்யுஞ் சுவாதீனபதியாகிய சைவப்பிரசாரகர்'' என்று நாவலர் குறிப்பிடப்படுவது சுவைபட உள்ளது. பரமதகண்டனமும், சுயமதஸ்தாபனமும் செய்வதில் முழுமூச்சாக உழைத்த நாவலரவர்கள் வாழ்நாள் முழுவதும் பிரசாரகராக இயங்கினுர். பிரசங்கங்கள், உரைநூல்கள், பாடநூல்கள், துண்டுப்பிரசுரங்கள், பத்திரிகைக் கட்டுரைகள் முதலியனவெல்லாம் ஏதோ ஒரு விதத்தில் கருத்துக்களைப் பிரசாரஞ் செய்வனவாகவே இருந்தன. வைதீக சைவப்பிரசாரகராக நாவலர் விளங்கியமை வரலாறு அறிந்த செய்தியாகும். நாவலரது ஞான பரம்பரையில் வந்தவர்கள் அனைவரும் ஏதோ ஓர் அளவில் பிரசாரகர்களாகவும் இயங்கினர். சரவணமுத்துப்பிள்ளை, அம்பலவாண நாவலர், நா. கதிரைவேற்பிள்ளை, ச.சபாரத்தின முதலியார் ஆகியோர் முனைப்பான பிரசாரகர்களாகப் பெயர் பெற்றனர்.

நாவலருக்குப் பின் வந்தவர்கள் தமது ஞானகுருவிடமிருந்து பெற்றுக்கொண்ட திறமுறைகளில் ஒன்று கண்டன நோக்கு ஆகும். மாறுபடும் கருத்துக்களைத் துவம்சம் செய்யும் மனப்போக்கும் அதற்கேற்ற மொழிநடையும் சிறந்த கண்டனத்திற்கு அடிப்படை. நாவலரின் சகாக்களான கார்த்திகேயப் புலவர், சிவ-சங்கரபண்டிதர், கா. சபாபதிக்குருக்கள் முதலியோர் ஆற்றல் நிரம்பிய கண்டனவாதிகளாய்த் திகழ்ந்தனர். இளைய தலைமுறையைச் சேர்ந்தவர்களில், நர்க்கருடாரதாலுதாரி எனப் பலராலும் அழைக்கப்பட்ட திருஞானசம்பந்தப்பிள்ளை, *(1849-1901)*, சபாபதி நாவலர் *(1844-1903)*, நா.கதிரைவேற்பிள்ளை *(1871-1907)*, சரவணமுத்துப்பிள்ளை முதலியோர் தீவிரமிக்க கண்டனகாரர் எனலாம். சில பிரபந்தங்களையும், தனிப்பாடல்களையும், பல கட்டுரைகளையும் சரவணமுத்துப்பிள்ளை எழுதினுரெனினும், சீர்தூக்கிப் பார்க்குமிடத்து அவரது கண்டன எழுத்துக்களே ஆற்றல் நிறைந்தனவாய்க் காணப்படுகின்றன. ''சரவணமுத்துப்பிள்ளையென்னுமிவர் போலிக் கொள்கைகளைத் தாக்கித்

கண்டனமெழுதுவதிலும் அதி சமர்த்தர்'' என்று பிரமஸ்ரீ சி.கணேசையர் கூறியிருப் பது மனங்கொளத்தக்கது.

கொழும்பிலே சேர்.பொன்.அருணுச லம் அவர்களின் ஆதரவிலே இயங்கிவந்த சைவபரிபாலன சபையிற் சரவணமுத்துப் பிள்ளை சில காலம் சைவப்பிரசாரகராயி ருந்தவர். யாழ்ப்பாணத்திலும் தென்னிந் தியாவிலும், கோயில்களிலும் சபைகளி லும் சொற்பொழிவுகள் நிகழ்த்திப் புகழீட் டியவர். அக்காலத்திலே வாழ்ந்த இலங் கைத் தமிழ்ப்புலவர்கள் பலரைப் போல இவரும் தமிழ்நாட்டில் சிலகாலம் வதிந்து தமிழ்கூறு நல்லுலகத்திற்குப் பொதுவான முயற்சிகளில் ஈடுபட்டனர்.

பத்திரிகைத் துறையிலே சரவணமுத் துப்பிள்ளைக்கு விசேஷ ஆர்வமிருந்தது. நாவலர் தேகவியோகமாகிய அடுத்த வரு டத்திலே *(1880)*, **சைவஉதயபானு** என் னும் பத்திரிகையைத் தொடங்கி சுமார் ஆறுவருட காலம் வரையில் அதனைப் பேரு க்கத்துடன் நடத்தினுர். அப்பத்திரிகை க்குத் தனிச்சிறப்பொன்றுண்டு. யாழ்ப்பா ணத்திலும் மதுரையிலும் அது ஏககாலத் தில் வெளியிடப்பட்டது. 1884-ம் வருடம் மே மாதம் ஐந்தாம் திகதி மதுரையிலி ருந்து வெளிவந்த **சைவ உதயபானு** இத ழில் மேல்வருமாறு எழுதினுர் சரவணமுத் துப்பிள்ளை.

> ''நமது தமிழ்ப்பாஷையை விருத்தி யாக்கத் துணிபவர் ஒருவரை நாங் காணவில்லை. நமதுதமிழர் களிலே, பணம் வந்தவுடன் கல்வியை இகழ் ந்து தள்ளிவிடுதல் வழக்கம். தங்கள் பிள்ளைகளையாதல் படிப்பிக்கின்ருர்க ளில்லை. சொல்லுதற்கஞ்சுவானென்; பெரும்பான்மை செல்வப் பிரபுக்க ளெல்லாம் கல்வியறிவிலே சூனியந் தான். பின்னர் அவர் கல்வியை விருத்தியாக்குவதெவ்வாறு? பத்திரி கைகளையே வாசிக்க நேரமில்லை என் கின்ருர்கள். தாசிகளின் நடன சங்கீ தங்களைக் கேட்க மாத்திரம் நேர முண்டு. பத்திரிகைகளுக்குக் கொடுக் கப் பணமில்லை. அவர்களுக்குக் கொடுக்கப் பணமுண்டு. இவர் விதி யிருந்தபடி என்னையோ யாமறியேம்''

நாவலரவர்களின் தர்மாவேசமும் குரலும் இவ்வாக்கியங்களிலும் ஓரளவு இடம்பெற் றிருக்கக் காணலாம். ஆறுமுகநாவலரைக் குறிப்பிடுமிடங்களில் அடிக்கடி ''ஆறுமுக நாவல சற்குருநாத சுவாமிகள்'' என்று சரவணமுத்துப்பிள்ளை எழுதுவதைப் பத்தி ரிகையிற் கவனிக்கலாம். *1883* டிஸம்பர் *24*-ம் திகதி இதழில் ''அதிபிரதான பொதுத்தருமத்துக்குக் கேடு செய்தது'' என்ற தலைப்பில் முக்கியமான கட்டுரை ஒன்று வெளிவந்துள்ளது. நாவலரவர்கள் மறைவிற்குப்பின் அவரது தரும சொத் துக்களை அநுபவித்தற்காக உறவினரும், வேறுசிலரும் செய்துவந்த அக்கிரமங்களை அக்கட்டுரை விரிவாகவும் விளக்கமாகவும் அம்பலப்படுத்துகிறது. இவற்றையெல்லாம் நோக்குமிடத்து, நாவலரவர்களின் இலட் சியங்களையும் பணிகளையும் இடையீடின்றித் தொடர்ந்து மேற்கொள்ள வேண்டிய இன் றியமையாமையைப் பிரசாரம் செய்வதற் காகச் **சைவ உதயபானு** என்ற பத்திரி கையை இரண்டாம் நான்காம் சோமவா ரங்கள் தோறும் பிரகடனம் செய்து வந் தார் எனக் கருதுதல் தவருகாது. இப்பத் திரிகை வண்ணுர்பண்ணைச் சைவப்பிரகாச யந்திரசாலையில் அச்சிடப்பட்டு வெளிவந் தது. (இவ்வியந்திர சாலையிலேயே **கந்த புராணம்** இரண்டாம் பதிப்பு 1883ல் வெளி வந்ததாய்த் தெரிகிறது) நாவலர் அவர்க ளாற் பிரசுரிக்கப்பட்ட புத்தகங்கள் பற் றிய விற்பனை விளம்பரமும் அவ்வப்போது பத்திரிகையில் வெளிவந்தன. அ.குமாரசு வாமிப் புலவர், ந.ச.பொன்னம்பலபிள்ளை, குகதாஸர் சபாரத்தின முதலியார், மதுரை இ.இராமசாமிப்பிள்ளை, செந்திநாதையர் முதலியோர் சைவஉதயபானு இதழ்களில் விஷயதானம் செய்துள்ளனர். பெரும்பா லான விஷயங்கள் புனைபெயர்களிலேயே

எழுதப்பட்டிருக்கின்றன. இவற்றிற் பல சரவணமுத்துப்பிள்ளை அவர்கள் எழுதியவை என்று ஊகித்தல் தவறுகாது. நாவலரவர்களை ஐந்தாம் சமயகுரவர் என்று சைவஉதயபானு விவரித்தது. *1883-ம்* வருடம் ஆனிமாத இதழ் ஒன்றில் பத்திராதிபர் குறிப்பாகப் பின்வருமாறு எழுதப்பட்டுள்ளது

> ''ஐந்தாஞ் சைவசமய குரவரென்று விவேகிகள் பலராலும் நன்கு பாராட்டப்பட்ட ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவல சற்குருநாத சுவாமிகளது கல்வித் திறமை, பிரசங்க நன்மை, சமய விருத்தி, தேவபக்தி, அடியார்பக்தி, பூசா நியமம், வாய்மை, பரோபகாரம், சன்மார்க்கம், நிலைதிறம்பாமை, தீரத்துவம் முதலிய சுவலட்சணங்களையும், அவர்களாலே உலகத்தவர்கள் அடைந்த இகபர சிலாக்கியங்களையும்...பாதிரிகளும் அவர் மாணுக்கர்களுமே அறிய வல்லவர்கள்''

அதே இதழிற் பிறிதோரிடத்திலே 'வாய்மைவிரும்பி' என்ற புனைபெயரில் (அது பெரும்பாலும் சரவணமுத்துப் பிள்ளையாகவே இருக்கலாம்) கடிதம் ஒன்றிலே பின்வருமாறு எழுதப்பட்டிருக்கும் பகுதியைக் காணலாம்.

> ''சிறிதேனும் சுயநலம் கருதாது தமது ஆயுளைத் தமது தேயத்தினருடைய ஆன்மவீடேற்றத்திற் கேதுவாகிய தமிழ்க் கல்வி அறிவை விருத்தி செய்வதிற் போக்கி ஈடில்லா நன்மை செய்து அநேகரைக் கலாசூரியராக்கிவிட்ட மெய்ப்புகழுடைய சற்குருநாத சுவாமிகளாகிய ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரவர்கள் யாழ்ப்பாணத்தாருக்குப் புரிந்தவைகள்........''

ஆறுமுகநாவலரவர்களின் செல்வாக்கு எந்த அளவுக்கு பத்திரிகை ஆசிரியரைப் பாதித்திருந்தது என்பதை மேற்காணும் கூற்றுக்களிலிருந்து கண்டுகொள்ளலாம். **சைவ உதயபானு** வெளிவராது நின்றபின், அது அச்சிடப்பட்ட சைவப்பிரகாச அச்சியந்திரசாலையிலிருந்தே **இந்துசாதனம்** *1889-ம்* வருடமுதல் வெளியிடப்படலாயிற்று. *1880ல்,* அதாவது நாவலர் இயற்கையெய்திய அடுத்த ஆண்டில் சைவப்பிரகாச சமாஜம் என்னும் நிறுவனத்தைத் தாபித்தவர்களே, சைவப் பிரகாச அச்சியந்திரசாலையையும் நிறுவி நடத்தி வந்தனர். ச.பொன்னம்பலபிள்ளை, வை.ஆறுமுகப்பிள்ளை, சு.சரவணமுத்துப்பிள்ளை, வி. வேலுப்பிள்ளை முதலியோர் சமாஜத்தை முன்னின்று நடத்தியவர்கள் எனலாம்.

**உதயபானு** பத்திரிகை நின்றபின்னரும் சரவணமுதுப்பிள்ளையை ''பத்திராதிபர் சரவணமுத்து'' என்றே பலரும் அழைத்து வந்தனர். அவரும் அவ்வாறு தன்னைக் குறிப்பிட்டுக் கொண்டார். உதாரணமாக *1911-ம்* வருடமுதல் யாழ்ப்பாணம் ஸ்ரீ வாலாம்பிகை அச்சகத்திலிருந்து வெளிவந்த **சண்முகநாதன்** என்னும் பத்திரிகையிலே பிள்ளையவர்கள் பல கட்டுரைகளை எழுதிவந்தார். மு.சு. மாணிக்கம் பிள்ளை என்பவர் நடாத்திய அப்பத்திரிகைக்குப் பிள்ளையவர்கள் ஏறத்தாழ ஆசிரியராகவே அமர்ந்திருந்தார் என்று கருதக் கூடியதாய் உள்ளது. சொந்தப் பெயரிலும் புனைபெயர்களிலுமாக மிகப்பல விஷயங்களை எழுதித்தள்ளினர். சொந்தப் பெயரில் எழுதியபொழுது ''சு.சரவணமுத்துப் பிள்ளை உதயபானு பத்திராதிபர்'' என்று குறிப்பிட்டார். ''செல்வமும் வறுமையும்'' *(1915),* ''சமயநூற்கல்வியும் நம்மவரும்'' *(1914),* ''இந்தியாவுஞ் செந்தமிழும்'' *(1913),* ''கலிகால விபரீதம்'' *(1915),* ''போலிப்புலவர்கள்'' *(1915)* ''சுப்பிரமணியக் கடவுளும் இந்துசாதனப் பத்திரிகையும்'' *(1915)* முதலிய கட்டுரைகள் அப்பத்திரிகையில் பிள்ளையவர்களால் எழுதப்பட்டன. ஓரிதழில் *(16-3-1914)* பின்வருமாறு எழுதினர்.

> ''இங்ஙனமாதலால், ஸ்ரீலஸ்ரீ நாவலரவர்களுடைய காலத்திலே அவர்களால் மிக்கோங்கிப் பிரபலமுற்றிருந்த நமது சுத்தாத்துவித சைவசித்தாந்த

சமய அறிவு இப்பொழுது சுருங்கி வருவதற்கேதுவாயிற்று. நாவலரவர்கள் காலத்திருந்தவர்களா யிப்பொழுதுள்ள சிலரிஞலேதான் நமது சித்தாந்த சைவஞ் சிறிது விளக்கமுற்றிருக்கின்றது. இச்சிலரும் போயொழிந்தால், நமது யாழ்ப்பாண தேசம் முழுவதும் மாயாவாதமும் நிரீச்சுரவாதமும், உலோகாயதமுமே மலிந்து நீசதேசமாக வருவதற்கு யாதுஞ் சந்தேகமில்லை. இனி நமது தேசத்தைப் பழைய நன்னிலைக்குக் கொண்டு வர வேண்டுமேயானுல் இங்கேயுள்ள செல்வப் பிரபுக்களுள்ளே அறிஞராயுள்ள சிலராவதொருங்குதிரண்டு, கோயில்களையும், மடங்களையும் கட்டுதலை விடுத்து, ஊர்கடோறும் சித்தாந்த சைவ சபைகளைத் தாபித்து நடத்திவர முயலல் வேண்டும்'' நாவலரின் குரலை மீண்டும் மீண்டும் பிள்ளையவர்களின் எழுத்திற் கேட்கக்கூடியதாய் இருக்கிறது.

தென்னிந்தியாவில் மட்டுமன்றி, சிங்கப்பூர், கோலாலம்பூர் ஆகிய இடங்களுக்கும் சென்று சைவப்பிரசங்கங்கள் நிகழ்த்திப் புகழீட்டிய பிள்ளையவர்கள், அவ்வப்போது கண்டனங்களன்றி ஆக்கபூர்வமான சிலவற்றையும் எழுதியிருக்கிருர். ''சுத்தாத்துவித சைவசித்தாந்த மகத்துவம்'' என்பது அவரின் சிறப்புமிக்க கட்டுரைகளில் ஒன்று. உவைமன் கதிரைவேற்பிள்ளை *(1829-1904)* தயாரித்த தமிழ்ப் பேரகராதியின் உருவாக்கத்திற் பங்குகொண்ட யாழ்ப்பாணத் தமிழ்ப் புலவர்களில் இவரும் ஒருவர்; சுன்ஞகம் குமாரசுவாமிப்புலவர், உடுப்பிட்டி சு. ஆறுமுகப்பிள்ளை *(1887-1955)*, ஆகியோரும் சில சில பாகங்களுக்குத் துணை புரிந்தனர். கதிரைவேற்பிள்ளையவர்களின் மரணத்தால் முற்றுப்பெருமலிருந்த அவ்வகராதியை **1910**ல் மதுரைத் தமிழ்ச் சங்கத்தினர் வெளியிட்டனர். விரைவிற்பாடும் திறன் வாய்க்கப்பெற்றிருந்த இவர் இராமநாதபுரத்து மன்னராயிருந்த பாஸ்கரசேதுபதி *(1867-1903)* பேரில் சில பிரபந்தங்கள் பாடிப் பரிசிலும் பெற்ருர். கோப்பாய்ச் சபாபதி நாவலர், உடுப்பிட்டி சிவசம்புப்புலவர் முதலிய இலங்கைப் புலவர்கள் பாஸ்கர சேதுபதிமீது பாடல்கள் இயற்றியமையும் நினைவு கூரத்தக்கதே. எனினும் பிள்ளையவர்கள் இயற்றிய பல்வகைப் பாடல்களுள்ளும், ஆறுமுகநாவலர் தேகவியோகமடைந்த வேளையிலே இயற்றிய இரங்கற்பாக்கள் கவித்துவம் பொதுளியனவாயுள்ளன. கணேசையர் கூறியிருப்பது போல 'கேட்போர் மனத்தை உருக்கு நீர்மையவாய் மிளிர்கின்றன'' அவ்விரங்கற் பாக்கள்.

அருமறையா கமமுறைக ளுலகி லோங்க
வடியனுளத் தஞ்ஞான திமிர நீங்கப்
பெருமையொடு தவவிரத முலகோர் தாங்கப்
பிடில்பர சமயகுழா மிரிந்தே யேங்க
வொருமையொடு நல்லைநக ருதித்தே வந்த
உத்தமநல் லாறுமுகப் பெம்மா னேநின்
னிருமைபெறு திருவாக்கி னருமை தன்னை
யின்பமுடன் கேட்பதினி யெந்த நாளே

என்பது அவரியற்றிய விருத்தப்பாக்களில் ஒன்று. நாவலர் மீது உருக்கமான கையறுநிலைப்பாக்கள் பாடியவர்களில் தாமோதரம்பிள்ளை, சிவசம்புப்புலவர், ச. பொன்னம்பலபிள்ளை, முருகேசபண்டிதர், குமாரசுவாமிப்புலவர் குறிப்பிடத்தக்கவர்கள். அவர்களின் வரிசையில் வைத்து எண்ணப்பட வேண்டியவர் சரவணமுத்துப்பிள்ளை.

பிள்ளையவர்களிடம் பலர் பாடங்கேட்டனர். சேர் அம்பலவாணர் கனகசபைப் பிள்ளை, நியாயதுரந்தரர் திருநாவுக்கரசு முதலிய கனவான்களும், தமிழாசிரியர் பலரும் இவரிடம் சிற்சில இலக்கிய சமய நூல்களைக் கற்றனர். இவர்களுள் தென்கோவை பண்டித ச. கந்தையபிள்ளை சிறப்பாகக் குறிப்பிடப்படவேண்டியவர். இலக்கண இலக்கியங்களும் சமய நூல்களும் சரவணமுத்துப்பிள்ளையிடம் பயின்றவர் கந்தையபிள்ளை. வித்தகம் என்னும் பத்திரிகையை நடத்தியமையால் ''வித்த

கப்பத்திராதிபர்'' எனப் பலராலும் அழைக்கப்பெற்ற கந்தையபிள்ளை இவரிடம் பேரன்பு பூண்டிருந்தார். 1916ல் பிள்ளையவர்கள் இறந்தபோது உருக்கமான சரம கவிகள் பாடியோரில் கந்தையபிள்ளை விதந்துரைக்கத்தக்கவர்.

நாவலர் தமது காலத்தில் பல காரியங்களைச் செய்யவும், அவர் மரபினை முன்னெடுத்துச் செல்லவும், சில ஞானபுத்திரர்கள் இருந்தனர். அவர்களில் சிறப்புடன் விளங்கிய ஒருவர் சரவணமுத்துப்பிள்ளை. நாவலர் வரலாற்றையும் அவரது மரபின் வரலாற்றையும் நன்கு விளங்கிக் கொள்வதற்குச் சரவணமுத்துப்பிள்ளை போன்ற தொண்டர்களின் வாழ்க்கையும் பணியும் விரிவாக ஆராயப்படுதல் அவசியம்.

★ ★ ★

வயது கடந்தபின் காமவிகாரம் ஏது?
தண்ணீர் வற்றியபின் குளம் ஏது?
செல்வம் அழிந்தபின் சுற்றம் ஏது?
தத்துவத்தை அறிந்தபின் ஸம்ஸாரம் ஏது?

— **பஜ கோவிந்தம்**

# வெளிச்சம்

—முருகையன்

வீடு முற்றும் இருட்டு மண்டிக் கிடக்கும் வேளை
விஷப்பூச்சி புழுக்களுடன் சிலந்தி பாம்பு
ஓடி அங்கு விளையாடித் திரிதல் கூடும்
ஒளி கிடைத்தால் அவற்றை எல்லாம் ஒழித்தல் கூடும்
நாடு முற்றும் இருட்டு மண்டிக் கிடக்குமானல்,
ஞாய சபை நூற்றிருந்தும் நன்மை உண்டோ?
கேடு கெட்ட அறியாமை இருள் நீங்காமற்
கிடைக்குமோ மருந்துக்கும், நீதி ஏதும்?

கண்ணுடி புகை மூடிக் கறுத்திருந்தால்
கட்டாயம் விளக்கின் ஒளி மங்கும் தானே!
சுண்ணும்பு பூசி அதைத் துடைக்க வேண்டும்
சுத்தமாய். துப்புரவாய் —
வெளிச்சம் கூடும்
தண்ணீரிற் படர்ந்திருக்கும் பாசி நீக்கிச்
சரி செய்தால் அல்லவோ தூய்மை தோன்றும்?
கல்லாமை என்கின்ற புகையை ஊதக்
கனல் வீசி ஒளி பிறக்கும்.
கல்வி மூளும்.

கல்வியினை மூட்டுகிற உபாத்தியாயர்
கட்டாயம் அறிஞராய் இருக்க வேண்டும்
பல்லுடைக்கும் பழம் பாட்டின் கருத்துச் சொல்லப்
பழகி வைத்த படிப்பு மட்டும் போதாதன்றே!
புல்லுநுனிப் பூப்போலே மொட்டவிழ்க்கும்
புதுப்பாட்டின் அருமைகளும் அறிதல் வேண்டும்
வில்லெறியும் அம்பைப்போல் இலக்கைத் தாக்கும்
விசையான சொல்லாற்றல் மிகவும் வேண்டும்.

கணக்கறிந்து, தொழில் நுட்பம் அறிந்து, சொந்தக்
கைவினையின் திறனடைந்து, கலங்கி நிற்கும்
உணர்ச்சிகளைத் தெளிவித்து, வாய்க்கால் கட்டி
ஓட வைக்கும் திறனடைந்து, விஞ்ஞானத்தைப்
பிணக்குகளுக்காக அன்றி, அமைதிக்காகப்
பேணும் ஒரு மனப்பான்மைப் பேறடைந்து
மணக்கின்ற கலைச்சுவைகள் வளர வைக்கும்
வாய்ப்புடைய அறிஞர்களே உபாத்தியாயர்.

கிளிப்பிள்ளைப் பாடத்தால் நன்மை என்ன?
கேள்விகளைச் சரியாகக் கேட்டால் தானே,
துளிப் பிழையும் இல்லாத விடை கிடைக்கும்
தூண்டினல் அல்லவோ துலக்கம் தோன்றும்?
வழிப்படுத்தத் தெரிந்தவர் தான் உபாத்தியாயர்.
மாணவர்கள் அந்த வழி நடக்க வேண்டும்.
விளக்குப்போல் ஆசிரியர் இருப்பாரானல்
விளக்குகளாய் மாணவரும் ஒளிவிடாரோ?

ஊரெழு கணேச வித்தியாசாலை
பொன்விழா சிறப்புடன் நடந்தேற வாழ்த்துகின்றோம்
வெங்காயம், மிளகாய், மற்றும் உள்ளூர் விளைபொருட்கள்
விற்பனையாளர்கள்

# ராம்சேது அன்கோ

65, நாலாம் குறுக்குத் தெரு,
கொழும்பு—11.

32, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 23686 தொலைபேசி: 415

நவீன யந்திர மரவேலைத் தொழிற்சாலை

# யூனிவேர்சல் ரேடஸ் அன் இன்டஸ்றீஸ்

த. பெ. எண் 1,
பலாலி வீதி,
உரும்பிராய்.

ஓம்

# நடராசா ஸ்ரோஸ்

எம்மிடம்

- பலசரக்குச் சாமான்களும்
- அபிடேகத் திரவியங்களும்
- கிரிகைச் சாமான்களும்

பெற்றுக்கொள்ளலாம்.

இல. 49, மார்க்கட்,
சுன்னுகம்.

உரிமையாளர் :

பொன் நடராசா

ஊரெழு, கணேச வித்தியாசாலைப் பொன்விழா
சிறப்பாக நடந்தேற வேண்டுமென
வாழ்த்துகின்றேம்

# கே. ரி. வேலுப்பிள்ளை

உரும்பிராய் தெற்கு,
உரும்பிராய்.

தொலைபேசி; 268 *Phone*: 268

# சிறீதேவி நகை மாளிகை

**நகை வியாபாரம், அடைவு பிடிப்பவர்**

1, கே. கே. எஸ். றேட், — சுன்னுகம்.

***நவநாகரீக நகைகள் விற்பனையாளர்கள்***

# SRIDEVI JEWELLERS

JEWEL MERCHANT & PAWN BROKER

1, K K S. Road, — CHUNNAKAM

*Dealers in:*

*Latest Designs Bangles & Jewels*

# எம். எம். ஏ.

# மொகமட் மொகிதீன்

மலிவான விலையில்

உயர்ந்த ரகப் பொருட்கள்

பசார் வீதி,

சுன்னுகம்.



வண்ணத் துணியுகத்து
வளமார் வகையனைத்தும்
எண்ணம்போல் தேர்ந்தெடுக்க
ஏற்றதோர் எழிற்கூடம்

# கணேசன் ஸ்ரோர்ஸ்

67, 68, கே. கே. எஸ். வீதி,

யாழ்ப்பாணம்.

தொலைபேசி; 7169
8025



சகல விதமான

புடைவை — கூறைச் சேலை

சிறுவர் உடை

# மணியம்ஸ் ரெக்ஸ்ரைல்ஸ்

இல. 16, நவீன சந்தை,

யாழ்ப்பாணம்.

தொலைபேசி; 7545



# தீபி ஜுவல்லர்ஸ்

நகைகள் — வைர வியாபாரிகள்

"R.G. பில்டிங்"

கன்னதிட்டி,

யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 282

சிந்தெட்டிக் புடவை வகைகள்
மணிப்புரி, நைலக்ஸ், வூலி சேலைகள்

தெரிவு செய்ய சிறந்த தாபனம்

# ஜி. எஸ். லிங்கநாதன்

அன் கோ

13—14, பெரியகடை,
யாழ்ப்பாணம்.

அன்பளிப்பு

# சித்த ஆயுள்வேத வைத்தியசாலை

டாக்டர் வை. கதிரவேலு, D. A. M & R. M. P.

பதிவிலக்கம் : 3553

மடத்தடி,
பலாலி வீதி,
உரும்பிராய்.

# கலா ரேடிங் சென்ரர்

# Kala Trading Centre

**General Merchants & Commission Agents**

**for Local Products**

உங்கள் உள்ளூர் விற்பனைப் பொருள்களை

விற்றுத்தரவல்ல

முகவர்கள்

111, 4-ம் குறுக்குத் தெரு,
கொழும்பு—11

Telephone: 22584



அதிபர் — ஆசிரியர்

# ஆசிரியன் வகுப்பறையின் கதாநாயகன்....

**திரு. பேரம்பலம் பரமேஸ்வர நாதன்** B. Sc., Hons. (Cey.) Dip.-in-Ed.
( விரிவுரையாளர் பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை. )

**வ**குப்பறையிலே மாணவர்களுக்கு முன்னால் போய் நின்றுகொண்டு அவர்களுக்குத் தேவையான வழிகாட்டல் முறைகளையும் உதவிகளையும் தருபவரே ஆசிரியர் என்று வர்ணிக்கப்படுகிறார். இவர் ஒரு தகுதி வாய்ந்த ஆசிரியராக இருக்க வேண்டுமாயின் அந்த இடத்தில் பயனுள்ளதும் ஆராய்வு மனப்பான்மை உள்ளதுமான ஒரு வேலைச் சூழலை எவ்வாறு அமைக்கலாம் என்பதைப்பற்றி அவர் தன்னைத் தானே கேட்டுக் கொள்வதும் மிக அவசியமானதாகும். ''வகுப்பை எவ்வாறு ஒழுங்காக வைத்துக் கொள்ளலாம்? எவ்வாறு வகுப்பு நிகழ்வுகளில் ஆர்வத்தை உருவாக்கலாம்? மாணவர்கள் தமக்குள்ளே தன்னம்பிக்கையை வளர்த்துக் கொள்வதையெவ்வாறு ஊக்குவிக்கலாம்? சுயகட்டுப்பாட்டையும், தீர்மானங்கள் எடுக்கும் பொறுப்புணர்வையும் மாணவர்கள் படித்துக்கொள்ளும் சந்தர்ப்பங்களை எவ்வாறு உருவாக்கலாம்?'' இதுபோன்ற கேள்விகளை அவர் கேட்டுக் கொள்ள வேண்டும்.

ஒவ்வொரு மாணவனும் எதைச் செய்ய முயலுகிறான் என்பதும், அவன் எதைக் கற்றுக் கொள்கிறான் என்பதும் அந்த வகுப்பறையின் மெய்ப்பாட்டுச் சூழலில் தங்கியுள்ளது. சில ஆசிரியர்கள் மாணவர்களுடன் அன்புடனும் சினேகித மனப்பான்மையுடனும் பழகுகிறார்கள். வேறு சிலர் வகுப்பு மாணவருடன் எந்த நேரத்திலும் தகராறு வைத்துக் கொள்கிறார்கள். பயப்படுத்தப்பட்ட சூழ்நிலையில் ஒருமாணவன் தனக்கு மிகவும் பாதுகாப்பானது என்று அவனால் கருதப்படுவதையே செய்வான். ஆனால் ஆர்வப்படுத்தப்பட்டதொரு சூழ்நிலையில் அவன் முயன்று கற்பான். புதிதாக ஒன்றைச் செய்யவும் முனைவான்.

மாணவர்கள் அதிகமாக உற்சாகமானவர்களாகவும் வேலை செய்வதற்கு விருப்பம் உள்ளவர்களாகவும் தமது திறமைகளை விருத்தி செய்து கொள்வதில் நாட்டம் உள்ளவர்களாகவுமே இருக்கிறார்கள். ஆனால் இயற்கையாக விடப்படுமிடத்து அவர்களது சக்தி பல திசைகளிலும் சிதறடிக்கப்படுகிறது. அதனால் தாம் புறப்பட்ட இலக்குகளைத் தவற விட்டு விடுகிறார்கள். இந்த உற்சாகமான மாணவர் குழுவின் சக்திகளை ஆக்கபூர்வமான துறைகளில் செலுத்துவது, அங்கே அவற்றை நிலை நிறுத்தி வைத்துக்கொள்வது ஆசிரியரின் கடமையாகும். அவர்கள் தமது இலக்குகளை அடைவதற்கு ஆசிரியரது அக்கறையே பெரிதும் உதவி செய்ய வேண்டும்.

ஒரு செயலைத் திட்டமிடுகிற, தொடங்குகிற செயலுடன் ஒத்துழைக்கிற மனப்பாங்கினை வகுப்புகள் பெற்றுவிட்டால் அவை ஆசிரியர் இல்லாமலே இயங்குகிற நிலையை அடைந்துவிடும். முயற்சிகள் சரியான முறையில் கோர்வை செய்யப்படாவிட்டால் எதையுமே அடைய முடியாதாதலின் மாணவர்களுக்கு அளவுக்கதிகமான சுதந்திரம் கொடுக்கப்படும்போது, அது தோல்வி மனப்பாங்கினையே தோற்றுவிக்கிறது. கட்டுப்பாடுகள் அதிகமாக இருந்தாலோ திட்டமிடுவதற்கோ, அல்லது தவறுகளைச் செய்து அதிலிருந்து இன்னும் நல்ல முறையில் திட்டமிடுவதற்கோ அந்தச் சூழ்நிலை சந்தர்ப்பம் கொடுக்காததாகையால் சில குழுக்கள் ஒரு தலைவரின் கட்டுப்பாட்டில் அடங்கி அவரது கருத்துக்களை மௌனமாக நிறைவேற்றவே பழகிக் கொள்ளும்.

நெறிப்படுத்துவதற்கு ஒருவரும் இல்லாத நிலையிலே அந்தச் செயலை மாண

வனே புரிந்துகொண்டு தானே திட்டமிட்டு முடிக்க நிற்பந்திக்கப்படுகிறுன். இவ்வாருன சூழ்நிலேயில் ஆசிரியர் அந்த இடத்தை விட்டு அகன்று விட்டால் விளேவில் முன்முனேற்றம் காணப்படும். அந்த நிலேயில் குழு அங்கத்தவரே ஓரளவு தலைமைப் பொறுப்பை ஏற்றுக் குழுவை நெறிப்படுத்துவார்.

முற்ருக ஆசிரியரின் கட்டுப்பாட்டிற்குக் கீழ் நடைபெறுகின்ற ஒரு செயலிலே தனது கட்டுப்பாட்டினைப் பேணிக்கொள்ள ஆசிரியர் எப்போதும் முயற்சிக்கிருர். ஆகவே எதைச் செய்யலாம்? யார் செய்யலாம்? எப்போது அது திறமையாகச் செய்யலாம்? எப்போது பாராட்டுதலோ அல்லது குறை கூறுதலோ தேவைப்படுகின்றது? என்பன போன்ற முடிவுகளே எடுப்பதில் ஆசிரியர் எப்போதும் தனது தீர்ப்பினையே பாவிக்கிருர். அடையப்படவேண்டிய இலக்குகளே அவரே தெரிவு செய்கிருர். வேலே எந்த வழியில் தொடரப்பட வேண்டும் என்று தீர்மானிக்கிருர். பாராட்டுதல், பரிசில் வழங்கல் போன்றவற்றையும் தானே நிர்வகித்துக் கொள்கிருர். இவர் தனது பாதையை முதலிலேயே தீர்மானித்து மதிப்பீடு செய்வதற்கான தரத்தையும் வைத்துக்கொள்கிருர். இவ்வாருன ஒரு சூழ்நிலேயில்;

அ) ஆசிரியர் தர்க்கரீதியாகச் சிந்தித்துத் தொழிற்படுபவராயின் தானும் தனது மாணவர்களும் தத்தம் தேவைகளேப் பூர்த்தி செய்து கொள்ளும் வகையில் அவர் அதனே நடத்திச் செல்வார்

ஆ) அவர் தர்க்க ரீதியான காரணம் இன்றித் தொழிற்படுகிறவராயின் தனது தேவைகளேப் பூர்த்தி செய்து கொள்வதற்காக மாணவர்களின் தேவைகளேயும் திருப்திகளேயும் தட்டிப்பறித்துக் கொள்வார்.

ஒரு ஜனநாயகத் தலேமை நிலே இருக்கும்போது ஒரு குழு தாஞகத் தன்வழியைத் தேடிக் கொள்ள ஆசிரியர் அனுமதிப்பார். ஜனநாயகச் செயற்பாடுகளே மாணவர் பயன்படுத்திக் கொள்ள உற்சாகமூட்டுவார். இதனுல் தமக்குள் உரையாடுதல், ஒருவர் தலேவராய் இயங்குதல் போன்ற செயற்பாடுகள் மாணவர் மத்தியில் நிகழும், வகுப்பறைச் செயற்பாடுகளேத் திட்டமிடுவதற்கும் அதனேக் கொண்டு நடத்துவதற்கும் உதவி செய்வார். தாம் உத்தேசித்த இலக்குகளே அடைவதற்கான பொறுப்புகளே ஏற்றுக் கொள்ள மாணவர்களே உற்சாகப்படுத்துவார். வகுப்பறை நடவடிக்கைகளுக்கான சட்டதிட்டங்களே உருவாக்கவும், புதியவற்றைப் புகுத்தவும் மார்ணவர்களே அனுமதிப்பர். தனது நேரடியான கண்காணிப்பின்றியே மாணவர் வேலே செய்ய உரிமை வழங்குவார். மொத்தப் பாடநேரத்தின் அரைப் பங்கு நேரத்திற்கும் குறைவாகவேதான் பேசுவார். மாணவர்கள் கேள்விகள் கேட்பதை வரவேற்பார். ஒரு கருத்திற்கு மேற்பட்ட கருத்துக்கள் அல்லது முரணுன கருத்துக்கள் வகுப்பில் கொண்டுவரப்படுவதை வரவேற்று உற்சாகமூட்டுவார்.

இந்தவகையில் எதனே ஆசிரியர் வகுப்பில் கையாளலாம் என்பது மற்றவர்களின் எதிர்பார்ப்பையும் பொறுத்தது. இதனே எல்லேப்படுத்தும் காரணிகளில் ஒன்று மாணவர்கள் ஆசிரியரைப் பற்றி ஏற்கனவே கொண்டுள்ள எண்ணங்களாகும். செயற்படுகிற ஆசிரியரே கட்டுப்படுத்த வேண்டும் என்னும், நியமங்களே அவரே முன்வைக்க வேண்டும் என்றும், தமது ஆலோசனைகளுக்கு அவர் வளேந்து கொடுக்கக் கூடியவராய் இருக்க வேண்டும் என்றும் மாணவர்கள் எதிர்பார்க்கிருர்கள். கற்பிக்கப்பட வேண்டிய பாடவிதானம் இன்னெரு எல்லேப்படுத்தும் காரணியாகும். ஆசிரியரின் சொந்தத் தேவைகளும் அவரது ஆளுமையும் மற்றுமொரு எல்லேப்படுத்தும் காரணியாக அமையும்.

திருப்திகரமற்ற குழப்பநிலையில் இருக்கின்ற மாணவரைவிடச் சந்தோஷமான மனநிலையில் இருக்கும் மாணவர் கற்பிக்கும் சூழ்நிலைக்கு உகந்தவர். தமது செயற்பாடுகளை ரசிக்கின்ற மாணவர்களே அதிக முயற்சிகளையும் முன்வைக்கிறுர்கள். ஆசிரியருக்கு, பாடத்திற்கு, அல்லது பாடசாலைக்கு எதிரான மனப்போக்கு இவர்களிடம் உருவாகுதல் குறைவு.

பயனுள்ள சில செயற்பாடுகளைச் செய்ய மாணவர் விரும்பக்கூடிய சூழ்நிலையை உருவாக்குபவன் நல்லாசிரியன். அவர்கள் அதனை முயன்று செய்யச் சந்தர்ப்பம் தருவதோடு அதில் வெற்றி பெறவும் உதவ வேண்டும். இதனை நடைமுறைப்படுத்த அல்லது ஒரு சிறந்த வகுப்பறைக் கதாநாயகனுக இருக்கப் பின்வரும் விடயங்களை மனதில் கொள்ள வேண்டும்.

1. மாணவர் செய்கின்ற ஒவ்வொரு செயற்பாடும் அவர்களுக்குத் தெரிந்த அவர்கள் அடைய விரும்புகிற இலக்குகளை நோக்கித் திருப்பப்பட வேண்டும்.

2. இலக்குகள் அடையப்படக் கூடியனவாய் இருத்தல் வேண்டும். அவை அடையப்படக்கூடியன என்பதை மாணவர் நம்ப வேண்டும்.

3. எந்த அளவிற்குத் தாங்கள் முன்னேறிக்கொண்டு வருகிறோம் என்பதை மாணவர்கள் மதிப்பிடக்கூடியதாய் இருக்க வேண்டும்.

4. வகுப்பறைக்கு வெளியிலும் செயற்பட விரும்புகிற அளவிற்கு இது மாணவர்களுக்குத் திருப்தியும் உற்சாகமும் அளிக்க வேண்டும்.

குழந்தையானுல் அப்போது
விளையாட்டில் பற்றுள்ளவனுகின்றுன் ;
வாலிபனுனுல் அப்போது
பருவமங்கையரிடம் பற்றுள்ளவனுகின்றுன் ;
கிழவனுனுல் அப்போது
கவலைச் சிந்தனைகளில் பற்றுள்ளவனுகின்றுன்;
பரப் பிரம்மத்தில் பற்றுள்ளவர் எவரும் இல்லை.
— பஜகோவிந்தம்.

# படிச்சு முடியவில்லை

பேனையில்லை மையில்லை
ஏடில்லை எழுத்தாணியுமில்லை
பென்சிலில்லை பேப்பரில்லை
அச்சேது அடிப் போரேது
பேச்சில்லை பேசவுமில்லை
எண்ணத்தில் எதுவுமில்லை.

அஞ்சு வயதிலே அந்த
அறியாப் பருவத்திலே
பிஞ்சு வயதிலே அன்னை
பள்ளிக்கு வைச்சாளே
புள்ளிக்கு மப்பாலே
கொள்ளச் சொன்னுர்கள்

மெள்ளப் படித்தேன்
விள்ளப்படுமோ அது
எள்ளப்படவோ இல்லை
அஞ்சு தொட்டு
ஐம்பத்தைஞ்சு வரை
பள்ளிக்குப் போறேன்.

படிச்சு முடியவில்லை
பாடமோ ஏறவில்லை --
ஆனுலென்ன எப்படிப் பதிஞ்சுதோ
எப்படி வருகுதோ ஆரறிவார்
படிக்கிறேன் நான்
படித்துக் கொண்டே இருக்கிறேன்.

எல்லையில்லாக் கல்வி
எப்படிப் படித்து முடியும்
படிப்போம் படிப்போம்
படிவோம் ஆசிரியர்க்கு
படியும் நமது மனது
அப்போதான் வாழ்வு.

படிப்பே நமது தொழில்
பாட்டாளி தொட்டு
பண்டிதர் வரைக்கும்
படிப்பதே தொழில்
உலகமே பாடசாலை
வாழ்வே வாத்தியாயர்.

அனுபவமே படிப்பு
மனச்சாட்சி தண்டனை
எனவே
படிக்கின்றேன் நான்
படித்துக்கொண்டே இருக்கிறேன் ...

'' இள பிறையாளன் ''

## ஜீவகாருண்யம்

பசியென்ற நெருப்பானது ஏழைகள் தேகத்தினுள் பற்றி எரிகின்றபோது ஆகாரத்தால் அவிக்கின்றதுதான் — ஜீவகாருண்யம்,

— வள்ளலார்

பசியென்கிற விஷக்காற்றானது ஏழைகளின் அறிவாகிய விளக்கை அவிக்கின்ற தருணத்தில் ஆகாரம் கொடுத்து ஏற்றுகின்றதே — ஜீவகாருண்யம்.

— வள்ளலார்

# ஈழத்து நாவல்களும் சமுதாயச் சார்பும்

— துரை. மனோகரன், B. A. (Hons); M. A. —
(தமிழ்த்துறை, பேராதனைப் பல்கலைக்கழகம்)

சமுதாயச் சார்பு, அல்லது சமுதாய உணர்வு என்ற பதப்பிரயோகங்கள் நவீன இலக்கிய விமர்சகர்களினுல் அடிக்கடி பயன்படுத்தப்பட்டு வருகின்றன. ஓர் இலக்கியம் இயல்பாகவே சமூக உணர்வு அல்லது சமூகச் சார்பு கொண்டிருக்க வேண்டும் என்பது அவர்களது வாதம். அப்போதுதான் இலக்கியம் மக்களுக்கான பயன்படு பொருளாகின்றது. அவ்வாருயின் சமுதாய உணர்வு அல்லது சமுதாயச் சார்பு என்பது தான் என்ன? இதற்கு விளக்கமளித்த எஸ்.ஜே.பாஸ்கல் கிஸ்பேர்ட் ''அரசியல், சட்டவியல், ஒழுக்கம், கலை, மெய்யியல், சமயக் கருத்துக்கள் ஆகியவற்றுடன் ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தில் அப்போதுள்ள விஞ்ஞான அறிவு ஆகியனவற்றின் தொகுப்பே'' இதுவெனக் குறிப்பிட்டுள்ளார்.

ஆரம்பகாலத் தமிழ் நாவல்களை நோக்குமிடத்து சமுதாய உணர்வும், ஒழுக்கமும் இணைந்தே காணப்படுகின்றன. இதற்கான காரணமொன்றைக் குறிப்பிடலாம். நீண்ட நெடுங்காலமாக அறவழி, ஒழுக்க வழிச் சிந்தனைகள் தமிழ்மரபில் ஊறித் திளைத்து வந்துள்ளன. எனவே, இம்மரபுப் பிடியினின்றும் விடுபட முடியாத ஆரம்ப காலத் தமிழ் நாவலாசிரியர், ஒழுக்கம் பற்றிய உணர்வுதான் சமுதாய உணர்வெனப் பிறழ விளங்கிக்கொண்டிருந்திருக்க வேண்டும். ஆயினும், ஆர். ஷண்முகசுந்தரத்தின் **நாகம்மாள்,** சங்கரராமின் **மண்ணுசை** முதலான நாவல்கள் முதன்முதலாகக் கிராமியச் சமுதாயச் சார்பின் அடிப்படையிற் படைக்கப்பட்டுள்ளன. மகாத்மா காந்தியின் ''மீண்டும் கிராமத்துக்கு'' ("Back to the Village") என்ற கொள்கையின் அடிப்படையிலேயே மேற்குறித்த கிராமியச் சமுதாயச் சார்பு தோன்றியது எனக் கொள்ளல் தகும். ஆயினும், சிதம்பர ரகுநாதனின் **பஞ்சும் பசியும்** *(1953)* நாவலே, தமிழ் நாவல்களில் சமுதாயச் சார்புக்கு முதன்மை கொடுத்து எழுதப்பட்ட முதற் படைப்பாகும். கைத்தறி நெசவாளர் பிரச்சினைகளை மையமாகக்கொண்டு எழுதப்பட்ட இந்நாவல், தமிழிற் சமூக நாவல் வரலாற்றிலே நல்லதொரு திருப்பு முனையாக அமைந்துள்ளது.

ஈழத்தைப் பொறுத்த வரையிலும், ஆரம்பகால நாவல்களிற் பொதுவாகச் சமுதாயச் சார்பும் ஒழுக்கம் பற்றிய உணர்வும் இணைந்தே காணப்படுகின்றன. இருப்பினும் சில நாவல்களிற் சமுதாயச் சார்பு சற்று முனைப்பாகத் தெரிகின்றது. இடைக்காடரின் **நீலகண்டன்—ஒரு சாதி வேளாளன்** *(1925)* நாவலிலே வேளாளர் குலத்தைச் சேர்ந்த புவிமன்னனுக்கும் பண்டார குலத்தைச் சேர்ந்த கமலாவதிக்கும் பிறந்த நீலகண்டனுக்குத் தந்தையின் சொத்து உரிமையாவதைத் தடுக்கச் சிலர் சூழ்ச்சி செய்தனர். அவற்றினின்றும் அவன் தப்பி கோமளாதேவி என்பவளை மணந்து இன்பமாக வாழ்ந்தாள் எனக் கதை அமைந்துள்ளது. இந்நாவலில் யாழ்ப்பாணத்துச் சாதிப் பிரச்சினை பின்னணியில் விளங்குகிறது. சங்கானை மூத்ததம்பி செல்லப்பாவின் **சுந்தர வதன அல்லது இன்பக் காதலர்** *(1938)* நாவலிற் சுந்தரமும் வதனுவும் ஒருவரையொருவர் காதலிப்பதாகவும், சமூகத்தின் எதிர்ப்புக்களை மீறி அவர்கள் மணம் புரிவதாகவும் கதை கூறப்பட்டுள்ளது. சமூக ஏற்றத்தாழ்வை மையமாகக் கொண்டதாக இதன் கதை அமைந்துள்ளது. எச். நெல்லையாவின் **சோமாவதி அல்லது இலங்கை இந்தியர் நட்பு** *(1940)* நாவலிற் சந்திரசேகரன் என்னும் இந்திய வர்த்தகனுக்கும் சோமாவதி என்னும் சிங்களஉயர் குடும்பப் பெண்ணுக்கும் இடையே காதல் ஏற்பட்டதாகவும், இனப்பிரச்சினையின் காரணமாகத் தடைகள் ஏற்பட்டபோதிலும், இறுதியிற் காதலர் இணைவதாகவும் கதை கூறப்பட்டுள்ளது. *1938, 39*ஆம் ஆண்டுகளிற் பிரச்சினையாகத் தோன்றிய

இலங்கை இந்தியர் கருத்து வேறுபாட்டுப் பின்னணியிற் கதாபாத்திரங்கள் இந்நாவலில் அமைந்துள்ளன. துரைரத்தினம் நேசமணி (1931) நாவலிலே ஒழுக்கப் பிரச்சினையோடு சீதனப் பிரச்சினையும் கதையில் இடம்பெற்றுள்ளது.

மேற்கூறியவாறு ஈழத்தின் சுதந்திர காலத்துக்கு முன்னரும் சமுதாயச் சார்பு கொண்ட நாவல்கள் படைக்கப்பட்டிருப்பினும், ஏறத்தாழ ஐம்பதுகளிலேயே இப்போக்கு வலுவடையத் தொடங்கியது. தமிழ்நாட்டிலும் இத்தகையதொருநிலையே காணப்பட்டமைக்குச் சான்ருக முன்னர் குறிப்பிட்ட **பஞ்சும் பசியும்** நாவல் உள்ளது. இவ்வாறு ஈழத்துப் புனைகதைத் துறையிற் சமுதாயச் சார்பு முதன்மை பெறத் தொடங்கியமைக்கான காரணத்தை, கலாநிதி கார்த்திகேசு சிவத்தம்பி பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

> ''1948இல் கிட்டிய சுதந்திரத்தின் பின்னர் உடனடியாக இலங்கையில் பெரு மாற்றங்களெதுவும் ஏற்படவில்லையெனினும் இலவசக் கல்வித் திட்டத்தினுல் சமுகத்தில் வாய்ப்பற்றிருந்த பலர் கல்வி கற்றனர். இவர்கள் சமூக ஏற்றத்தாழ்வு கண்டு மனம் பொங்கி அரசியல் வழியை விமோசன வழியாக மேற்கொண்டு அத்துறையில் இயங்கத் தொடங்கினர். இலக்கியத்தைச் சமுதாயத்தைத் திருத்தும் சக்தியாகக் கொள்ளவேண்டும் என்ற கருத்துடையவராய் வளர்ந்தனர்; வளர்க்கப்பட்டனர். சுதந்திரன், தேசபிமானி போன்ற பத்திரிகைகளில் எழுதினர். அரசியலைத் தத்துவநோக்குடன் பார்த்து அதே தத்துவநோக்கில் இலக்கியத்தையும் ஆராய்ந்து கூட்டாக ஆக்க இலக்கிய வேலைகளில் ஈடுபட்டனர்''.

ஈழத்து இலக்கியக்காரரின் மேற்கண்ட செயற்பாடுகள் தமிழ் நாவல்களும் சமுதாயச் சார்புடன் அமைய வழிகோலின எனலாம்.

1950ஆம் ஆண்டினையடுத்த காலப் பகுதியிலே இளங்கீரனின் **தென்றலும் புயலும்** (1956) சாதிப் பிரச்சினையையும் ஓரளவு வர்க்கப் பிரச்சினையையும் அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்ட நாவலாக வெளிவந்தது. 1959ஆம் ஆண்டிலே தினகரன் பத்திரிகையிலே தொடர்கதையாக வெளிவந்த இவ்வாசிரியரின் **நீதியே நீ கேள்** நாவலே 1950ஆம் ஆண்டின் பின்னர் வெளிவந்த தனித்துவம் வாய்ந்த முதலாவது சமுதாயச் சார்பான நாவலெனலாம். இதன் பின்னர், 1965ஆம் ஆண்டிலே வெளிவந்த செ. கணேசலிங்கனின் **நீண்ட பயணம்** நாவலையடுத்து, சமுதாயச் சார்பு ஈழத்துத் தமிழ் நாவல்களில் மிகு முதன்மை பெற ஆரம்பித்தது.

1959ஆம் ஆண்டுக்கும் 1965ஆம் ஆண்டுக்குமிடையே இத்தகைய நாவல்கள் குறைவாகக் காணப்பட்டமைக்கு ஒரு காரணத்தைக் குறிப்பிடலாம். சமுதாய உணர்வு கொண்ட செ. கணேசலிங்கன், கே. டானியல், டொமினிக் ஜீவா, என். கே. ரகுநாதன், காவலூர் ராசதுரை போன்ருேர் இக்காலப்பகுதியிற் சிறுகதைத் துறையிலேயே தம் கவனத்தைச் செலுத்தி வந்தனர். இதன் காரணமாக, இக்காலச் சிறுகதைகளிற் சமுதாயச் சார்பு காணப்பட்ட அளவுக்கு நாவல்களிலே குறிப்பிடத்தக்க முக்கியத்துவம் பெற்றிருக்கவில்லை. இக்காலகட்டத்திலே (1959-1965) எழுதப்பட்ட நாவல்களிற் கணிசமானவை தனிமனிதப் பிரச்சினைகளை அடிப்படையாகக் கொண்டவையாகும்.

1965ஆம் ஆண்டில், செ.கணேசலிங்கன் ஈழத்து யதார்த்த நாவல் இலக்கியப் போக்குக்குக் கால்கோள் செய்ததையடுத்து அவரும் கே. டானியல், சி. சுதந்திரராஜா, ஞானதரன், ஏ. ரி. நித்தியகீர்த்தி, தெணியான், செங்கை ஆழியான், சொக்கன், அ. பாலமனோகரன், க. அருள்சுப்பிரமணியம், தி. ஞானசேகரன், யோ. பெனடிக்ற் பாலன் முதலியோர் சமுதாயச் சார்பு கொண்ட நாவல்கள் படைத்தோரிற் குறிப்பிடத்தகுந்தவர். ஒப்பீட்டு ரீதியில், தமிழக நாவல்களை விட ஈழத்துத் தமிழ்நாவல்களில் பொதுவாகச் சமுதாயச் சார்பின் ''கனம்'' அதிகரித்தே காணப்படுகிறது. ஈழத்து நாவல்களிற் காணத்தகும் அழகியற் குறைபாட்டை நிவர்த்தி செய்யின், மிகச் சிறந்த சர்வதேச ரீதியிற் புகழை ஈட்டித் தரத்தக்க நாவல்கள் ஈழத்தில் தோன்ற முடியும்.

# கண்ணன் பாட்டில் அணிநயம்

கலாநிதி அ. சண்முகதாஸ்

( சிரேஸ்ட விரிவுரையாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை. )

எதனையும் அலங்கரிப்பதற்கு உதவுவது அணி. பாட்டிலே கூறவந்த பொருளை அலங்காரமுடன் புலப்படுத்தப் புலவர்கள் கையாண்ட பல்வேறு உத்திகளையே அணிகள் என்றனர். அழகான குழந்தை தூக்குதற்கு இலேசாகப் பட்டுப்போன்ற உடலுடையவளாகக் கைக்கு அடக்கமுடையவளாக இருக்கிறாள். தூக்கிவிட்டாலோ அதனால் ஏற்படும் பூரிப்பு பெருஞ்செல்வத்தினையே கையில் வைத்திருப்பது போலாகும். இவ்விரு உணர்வு நிலைகளையும் புலப்படுத்த பாரதி என்னும் புலவன் கிளி, களஞ்சியம் ஆகிய இரண்டினையும் தேர்ந்தெடுக்கிறான். கிளி பட்டுப்போன்ற உடலையுடையது; மென்மையானது; கைக்கு அடக்கமானது; அழகானது; தூக்க இலேசானது. ஆகவே குழந்தையை,

"சின்னஞ் சிறுகிளியே"

என்றான். களஞ்சியம் எல்லாச் செல்வங்களையும் சேகரித்து வைக்குமிடம். குழந்தையை

"செல்வக் களஞ்சியமே"

என்றான். இங்கு குழந்தையைக் கிளியாகவும், களஞ்சியமாகவும் உருவகப்படுத்துகிறான். கிளி, களஞ்சியம் ஆகியனவற்றின் பண்புகளை உணர்ந்துகொண்டால், அவையெல்லாம் குழந்தையிடம் காணப்படும் என்னும் நிலையினைத் தோற்றுவிக்கப் புலவன் கையாண்ட உத்தி இது. அது இலக்கண ரீதியிலே உருவக அணி எனப்பட்டது. உவமை, உருவகம், தற்குறிப்பேற்றம், என அணிகளுக்குப் பல பெயர்கள் கொடுத்துள்ளனர். பாரதியினுடைய கண்ணன் பாட்டிலே பெரும்பாலும் உவமை, உருவகம் ஆகிய இரு அணிகளே கையாளப்பட்டுள்ளன.

கருத்து வடிவிலேயுள்ள ஓர் உணர்வினை அல்லது எண்ணத்தினைக் காட்சி வடிவிலே வெளிப்படுத்துதற்கு உவமை அணி புலவர்களுக்கு நன்கு உதவுகின்றது.

தூண்டிற் புழுவினைப்போல்-வெளியே
சுடர் விளக்கினைப்போல்
நீண்ட பொழுதாக-என்
நெஞ்சம் துடித்ததடி !

என்று கண்ணன்—என் காதலன் பாட்டிலே பாடுகின்றான் பாரதி. கண்ணனை எண்ணி ஏங்கும் காதலியின் நெஞ்சம் துடிக்கின்றதாம். நெஞ்சு துடிப்பதை நாம் கண்ணாலே காணமுடியாது. ஆனால் பாரதி அதனைக் காட்சியாக்கிக் காட்டுகின்றான். தூண்டிலிலே அகப்பட்ட புழு துடிதுடித்துக்கொண்டிருப்பதை நாம் கண்டிருக்கிறோம். கை விளக்கு ஒன்றினை வெட்ட வெளியிலே கொண்டு சென்றால், அவ்விளக்கின் சுடர் ஆடிக்கொண்டிருப்பதை நாம் கண்டிருக்கிறோம். இவ்விரு காட்சிகளையும் எமக்கு எடுத்துக்காட்டி இவை போலத்தான் காதலனைப் பிரிந்த காதலியின் நெஞ்சமும் துடிக்கும் என்று விளக்குகின்றான். தூண்டிற் புழுவையும் சுடர் விளக்கினையும் உவமைகளாகக் கையாண்டு நெஞ்சத் துடிப்பினை எமக்குப் புலப்படுத்துகிறான் பாரதி.

உவமையணியிலே நுணுக்கமான வேறுபாடுகள் பல உள. அவற்றுள் கூடாவுவமை என்றொரு வகையினைத் தண்டியலங்கார ஆசிரியர் கூறுகிறார். ஒரு பொருட்கு கூடாதவனைக் கூடுவதாகக் கொள்வதை இவ்வுவமையமைப்பிலே காணலாம்.

சந்தனத்திற் செந்தழலும் தண்மதி
யில் வெவ்விடமும்
வந்தனவே போலுமா லும்மாற்றம்-
பைந்தொடியீர்
வாவிக் கமல மதிமுகங்கண் டேக்
கறுவார்
ஆவிக் கிவையோ அரண்

என்னும் பாடலிலே சந்தனத்தொடு செந்தழலையும், தண்மதியொடு வெவ்விடத்தையும் தொடர்புறுத்திக் கூறப்படுகின்றன. இதே பாணியினை வேறொரு வகையிலே பாரதி பின்பற்றுகிறான். தேனுக்கும் வண்

டுக்கும் தொடர்புண்டு; பூவுக்கும் சூரிய ஒளிக்கும் தொடர்புண்டு; பயிருக்கும் வானுக்கும் தொடர்புண்டு. ஆனுல் இவையெல்லாம் தொடர்பற்றனவாகக் காட்டி, அத்தகைய தொடர்பற்ற தன்மை உண்மைத் தன்மையல்ல என்பதையும் எடுத்துக் காட்டுகிருன். கண்ணன் என் காதலன் பகுதியிலே ஒரு பாடலிலே ''ஆசைமுகம் மறந்து போச்சே- இதை ஆரிடம் சொல்வேனடி தோழி'', என்று கண்ணனுடைய முகத்தை மறந்துவிட்டதாக எடுத்த எடுப்பிலே கூறுகின்ற காதலி, அது உண்மையாக நடந்ததல்ல; அப்படி மறப்பது இயற்கையுமல்ல என்பதைப் புலப்படுத்த,

தேனை மறந்திருக்கும் வண்டும்-ஒளிச்
சிறப்பை மறந்துவிட்ட பூவும்
வானை மறந்துவிட்ட பயிரும்-இந்த
வைய முழுதுமில்லை தோழி

என்று கூறுகின்றுள்.

உவமை வகைகளுள் இன்னென்று ஐயவுவமை. உவமையையும், பொருளையும் ஐயுற்றுரைப்பதே இவ்வலங்காரத்தின் பண்பாகும்.

தாதளவி வண்டு தடுமாறுந் தாமரை
கொல்
மாதர் விழியுலவு வான்முகங்கொல்

என்னும் தண்டியலங்காரப் பாடலடிகள் அப்பண்பினை விளக்குகின்றன. பாரதியோ இவ்வைய உவமையிலே சிறு மாற்றஞ் செய்து விடுகிருன். அவன் பொருளை ஐயுருமல் உவமையினையே ஐயுறுகிருன்.

சுட்டும் விழிச்சுடர்தான்-கண்ணம்மா
சூரிய சந்திரரோ?
வட்டக் கரியவிழி - கண்ணம்மா
வானக் கருமைகொல்லோ

என கண்ணம்மா-என் காதலி என்னும் பாடற் பகுதியொன்றிலே பாடுகிருன் பாரதி. ''கண்ணம்மா! காதலனுகிய என்னைச் சுட்டி நீ பார்க்கின்ற விழியிரண்டும் ஒளி வீசுகின்றன. அவ்வாறு ஒளிகாலுகின்ற கண்கள் சூரிய சந்திரர்களைப் போன்றனவா? வட்டமான கருமைபொருந்தியன உன்னுடைய விழிகள். அவ்விழிகளின் கருமை நிறம் வானக்கருமை போன்றதா?'' என்று பாரதி கண்ணனின் ஒளி, கண்ணனின் கருமை ஆகியனவற்றுக்கு உவமைகளாக முறையே சூரிய சந்திரரையும், வானக் கருமையினையும் காட்டி, அவ்வுவமைகளை ஐயுறுவதுபோல அமைத்துள்ளான். இதனுல் கண்ணம்மாவினுடைய கண்ணின் ஒளி சூரியசந்திரருடைய ஒளியைவிடச் சிறந்தது எனவும், அவளுடைய கண்ணின் நிறம் வானக் கருமையை விடவும் சிறப்பானது எனவும் உய்த்துணரக் கூடியதாயுள்ளது.

உவமைகளைப் புதுவகையிலும் காலத்துக்கேற்ற வகையிலும் கையாண்டதாலேயே பாரதியின் கவிதைகள் பலரும் விளங்கக்கூடியனவாயின. கண்ணம்மா-என்காதலி என்னும் பகுதியிலேயுள்ள பாடலொன்றிலே தானும் காதலியும் பிரிக்க முடியாதவாறு இணைந்துள்ளனர் எனக் காதலன் கூற முற்படுகிருன். அவ்வாறு பிரிக்க முடியாத பண்பினைப் புலப்படுத்த,

பாயுமொளி நீயெனக்கு பார்க்கும்விழி
நானுனக்கு
தோயும் மது நீயெனக்கு தும்பியடி
நானுனக்கு
வீசுகமழ் நீயெனக்கு விரியுமலர் நானு
னக்கு
பேசு பொருள் நீயெனக்கு பேணுமொழி
நானுனக்கு

என்று அடுக்கிக் கொண்டே போகின்றுன் காதலன். பார்க்கின்ற கண்ணுக்கும் ஒளிக்கும் உள்ள தொடர்பினை நாம் அறிவோம். எம்முடைய கண்ணிலே ஒரு சிறிதளவாவது ஒளிசேர வேண்டும். அப்பொழுது தான் நாம் பார்க்கலாம். ஆகவே புலனிழக்காத விழியும் ஒளியும் சேர்ந்திருக்கும் தன்மையினைக் கூறும் காதலன் அவற்றுள் பாயும் ஒளி நீ, பார்க்கும் விழி நானெனக் கூறிப் பிரிக்கமுடியாத தம் தொடர்பினைப்

புலப்படுத்துகிறுன். இதே போல தேன்-வண்டு, நறுமணம்-மலர், பொருள்-மொழி என்னும் இணைபிரியாத் தன்மைகளை எடுத்துக்காட்டி ''நானும் நீயும்'' அப்படித்தான் என்று சூளுரைக்கிறுன் காதலன். இங்கு பாரதியினுடைய உவமையலங்காரம் புதுமையாக அமைகின்றது.

உருவக அணியும் பாரதியினுடைய கையிலே புதுமை பெறுகின்றது. எமக்குப் புலப்படாத, காட்சியினுலே காணமுடியாத, முன்னெப்பொழுதும் காணுத நிகழ்ச்சியைப், பொருளை, உணர்வினை எமக்குப் புலப்படுத்த அல்லது காட்டுதற்குப் புலவர்கள் கையாண்ட உத்தியே உவமையணியாகும். ஆ என்பது வீட்டுப்பசு; ஆமா என்பது காட்டுப்பசு. காட்டுப் பசுவினைக் காணுத ஒருவனுக்கு அவன் கண்ட வீட்டுப் பசுவினைக் காட்டி ''ஆ போலும் ஆமா'' என்று கூறலாம். அத்தகைய உவமையணியின் ஒருவகையான வளர்ச்சி நிலையே உருவகம். தாமரை மலருக்குச் செம்மையான நிறமும், குளிர்ச்சியான தன்மையும் உண்டு. இப்பண்புகளுடைய பெண் ஒருத்தியின் முகத்தினைக் காட்டத் தாமரை போன்ற முகம் என்று கூறுவது உவமை அணியாகும். இதனையே அப்பெண்ணினுடைய முகம் தாமரை என்று கூறுவது உருவக அணியாகும். கண்ணன் பாட்டிலே பாரதி கண்ணன் என் தோழன் என்னும் பகுதியிலே எம்முடைய வாழ்வுக்குக் கண்ணன் எவ்வாறு அத்தியாவசியமானவனுகவும், இக்கட்டான வேளையிலே எவ்வாறு உதவுகின்றவனுகவும் அமைகின்றுன் என்பதைப் பாரதி புலப்படுத்த நாம் எல்லோரும் அறிந்த மிகவும் பரிச்சயமான பொருட்களாக உருவகப்படுத்துகிறுன். மழை பெய்கின்ற வேளையிலே நனைந்து செல்ல வேண்டிய இக்கட்டான நிலையிலே ஒருவர் எமக்குக் குடை தந்தால் எப்படியிருக்கும்? பசித்திருக்கின்றேன். பல நாட்கள் சாப்பிடவில்லை. ஒருவர் உணவு தந்தால் எப்படியிருக்கும்? இந்த அனுபவம் எம்மிற் பலருக்கு நிச்சயமாக ஏற்பட்டிருக்கும். அவ்வனுபவத்தைக் காட்டி,

மழைக்குக் குடை பசிநேரத் துணவென் தன்
வாழ்வினுக் கெங்கள் கண்ணன்

என்று கண்ணன் எம்மீது கொண்டிருக்கும் அன்பினையும் அருளையும் புலப்படுத்துகிறுன் பாரதி.

மண்ணையும் விண்ணையும் அளந்தவன் கண்ணன். அவனைப்பற்றிப் பாடல்கள்புனையும்போது பாரதியும் மண்ணையும் விண்ணையும் அளக்கும் அதியற்புத தன்மையுள்ளவனுக ஆகிவிடுகின்றுன். எம்முடைய கண்களுக்குப் பிரமாண்டமானவையாகக் காட்சியளிப்பனவற்றை மண்ணிலே எம் கண்களுக்கு முன்னுலே தெரியும் சிறிய பொருட்களாக உருவகப்படுத்திவிடுவான். கண்ணனுகிய தாய் தனக்கு விளையாடச் சில பொம்மைகள் தந்துள்ளாளாம்:

''சந்திரனென்ெருரு பொம்மை-அதில்
தண்ணமுதம் போலொளி பரந்தொழு கும்
மந்தை மந்தையா மேகம் - பல
வண்ணமுறு பொம்மையது மழை பொழிய''

சந்திரன் ஒரு பொம்மை. மழைமேகம் இன்னெரு பொம்மை. சந்திரன் பொம்மை ஒளி வீசுகின்றதாம். மேகப்பொம்மை மழை பொழிகின்றதாம். அந்த மழை,

நல்ல நல்ல நதிகளுண்டு - அவை
நாடெங்கும் ஓடிவிளையாடிவருங்காண்
மெல்ல மெல்லப் போயவைதாம் -விழும்
விரிகடற் பொம்மையது மிகப் பெரிதாம்.

மழை பொழிந்து நதியாகிறது. அந்த நதி தேடிவந்து விழும் கடல் இன்னெரு பொம்மையாம்.

சோலைகள் காவினங்கள் - அங்கு
சூழ்தரும் பலநிற மணிமலர்கள்
சாலவும் இனியனவாய் - அங்கு
தருக்களில் தூங்கிடும் கனிவகைகள்

ஞாலமுற்றிலும் நிறைந்தே - மிக
நயந்தரு பொம்மைகள் எனக்கெனவே
கோலமுஞ் சுவையுமுற - அவள்
கோடிபல கோடிகள் குவித்து வைத்
தாள்.

மழை பெய்து நதி பாய்ந்தால் நல்ல மரங்கள் வளருந்தானே. அந்த மரங்கள் கனிகள் ஆகியனவெல்லாம் பல்வேறு வகையான பொம்மைகளாம்.

இன்பமெனச் சில கதைகள் - எனக்கு
ஏற்றமென்றும் வெற்றியென்றும் சில
கதைகள்
துன்பமெனச் சில கதைகள் - எனக்கு
தோல்வியென்றும் வீழ்ச்சியென்றும் சில
கதைகள்

சொல்லிக் குழந்தையை வளர்க்கிறாள் அந்தக் கண்ணன் என்னும் தாய். அந்தத் தாய் பிள்ளை விளையாடுதற்குப் பல பொம்மைகள் கொடுத்தாள். அந்தப் பொம்மைகள்தாம் சந்திரன், சூரியன், விண்மீன்கள், மழைமேகம், நதிகள், கடல், மரங்கள், கனிகள் ஆகியனவாகும். விண்ணிலும் பண்ணிலும் நிறைந்துள்ள பொருட்களையெல்லாம் சாதாரண பொம்மைகளாக உருவகப்படுத்தி விடுகிறான் பாரதி.

எதிலுமே சிற்றின அடிப்படையிலே நுண்ணாய்வு செய்கின்ற காலம் இந்தக் காலம். பாரதியும் ஒரு நுண்ணாய்வு செய்கின்றான். மாலை நேரத்திலேமேற்குத் திசையினைப் பார்த்துக் கொண்டிருக்கிறான் காதலன். பின்னாலே ஒரு ஆள் வந்து அவன் கண்ணைப் பொத்துகின்றது. அந்த ஆளுடைய கையினைப் பிடித்ததாலும் பட்டுடையின் நறுமணத்தாலும், அது தன் காதலியே என்று உணர்கின்றான்.

''நெரித்த திரைக்கடலில் என்ன கண்டிட்
டாய்
நீல விசும்பினிடை என்ன கண்டிட்
டாய்
திரித்த நுரையினிடை என்ன கண்டிட்
டாய்
சின்னக் குமிழிகளில் என்ன கண்டிட்
டாய்''

என்று அவள் அவனிடம் கேட்கிறாள், அவனோ,

நெரித்த திரைக்கடலில் நின்முகங் கண்
டேன்
நீல விசும்பினிடை நின்முகங் கண்
டேன்
திரித்த நுரையினிடை நின்முகங் கண்
டேன்
சின்னக் குமிழிகளில் நின்முகங் கண்
டேன்
பிரித்துப் பிரித்து நிதம் மேகம் அளந்தே
பெற்றதுன்முகமன்றிப் பிறிதொன்
றில்லை.

என்று பதில் கூறுகிறான். நுண்ணாய்வினுடைய பயன் கண்ணம்மா என்னும் காதயின் முகமாம். இது எந்த அணிவகையைச் சேரும்?

ஒரு கணத்தையும் இருகணத்தையும் பற்றிப் பாரதி கண்ணன் என் தோழன் என்னும் பாடலிலே பேசுகிறான்.

பொன்னவிர் மேனிச் சுபத்திரைமாதைப்
புறங்கொண்டு போவதற்கே - இனி
என்ன வழியென்று கேட்கில், உபாயம்
இருகணத் தேயுரைப்பான் - அந்தக்
கன்னன் வில்லாளர் தலைவனைக் கொன்
றிடக்
காணும் வழியொன்றிலேன் - வந்
திங்கு
உன்னையடைந்தனன் என்னிலுபாயம்
ஒருகணத் தேயுரைப்பான்.

என்பது அப்பாடற் பகுதி. கண்ணா! உன்னுடைய தங்கை; எனக்குப் பிரியமானவள் சுபத்திரையைக் கடத்திக்கொண்டு போக வேண்டும். வழி சொல்லு'' என்று கேட்கிறான் அருச்சுனன். அதற்கு இரண்டு கண நேரம் யோசித்துவிட்டுத்தான் வழி கூறுகிறான் கண்ணன். ஆனால், ''வில்லாளர் தலைவன் கன்னனைக் கொல்ல வேண்டும் வழி கூறு'' என்றவுடனே ஒரு கணத்திலே வழி சொல்லி விடுவான். முதலாவதுபெண் விடயமல்லவா? அதுவும் தன்னுடைய தங்கையைக் கடத்திப் போக வழி கேட்டால்

இரண்டுகணம் யோசிக்க வேண்டுமல்லவா? போர் வீரனைக் கொல்வது சத்திரிய தர்மம். ஆகவே கன்னனைக் கொல்ல வழி கேட்டால், ஒரு கணத்திலேயே பதில் கூறி விடலாம். ஒரு கணம், இருகணம் என்னுந் தொடர்களை நயமுடன் அமைக்கும் அலங்காரத் திறனை இங்கு காணக்கூடியதாயுள்ளது.

தண்டியலங்காரங் கூறும் அணிகளை உபயோகித்த எம்முடைய நற்றமிழ்ப் புலவர்களுக்குப் பேச்சு வழக்குத் தொடர்களை முழுக்க முழுக்க உபயோகிக்கும் வாய்ப்பிருக்கவில்லை. ஆனால் பாரதிக்கோ அந்த வாய்ப்பு இருந்தது. பேச்சு வழக்குச் சொற்றொடர்களைப் பல்வேறு இடங்களிலே உபயோகிப்பதே கவிதைக்கு ஒருவகை அலங்காரமாகவும் அமைந்துவிடுகின்றது. உதாரணமாக,

பாலும் கசந்ததடீ - சகியே
படுக்கை நொந்ததடீ
கோலக் கிளிமொழியும் - செவியில்
குத்த லெடுத்ததடீ
நாலு வயித்தியரும் - இனிமேல்
நம்புதற் கில்லையென்றார்
பாலத்துச் சோசியனும் - கிரகம்
படுத்து மென்றுவிட்டான்.

என்ற பகுதியினையும், கண்ணன்-என் ஆண்டான் என்னும் பாடலிலே,

காடு கழனிகள் காத்திடுவேன் - நின்தன்
காலிகள் மேய்த்திடுவேன்
பாடுபடச் சொல்லிப் பார்த்ததன் பின்னரென்
பக்குவஞ் சொல்லாண்டே
ஆண்டே - பக்குவஞ் சொல்லாண்டே
தோட்டங்கள் மொத்திச் செடிவளர்க்கச் சொல்லி
சோதனை போடாண்டே
காட்டு மழைக்குறி தப்பிச்சொன்னுலெனைக்
கட்டியடியாண்டே

என்னும் பகுதியினையுங் குறிப்பிடலாம்.

மரபுவழிக் கவிதையலங்காரங்களைப் பொன்னேபோற் போற்றிக் கண்ணன் பாட்டினைப் புனையும் பாரதி தன் காலத்துக்கேற்றபடி அவற்றைப் புதுமையுடன் கையாண்டு தமிழ்க் கவிதைக்குப் புதுப் பொலிவும் புது நயமும் ஊட்டினன்.


பசித்தவர்களுக்குப் பசியாற்றுவிப்பதே விரதமாகக் கொண்ட ஜீவகாருண்யமுள்ள சமுசாரிகளுக்கு கோடையில் வெயிலும் வருத்தாது — மண்ணுஞ் சூடு செய்யாது.

— வள்ளலார்

# பொன்விழாப் பேச்சுப் போட்டியில் முதற்பரிசு பெற்றவர்கள்




கு. சியாமளா



ப. ஜெயந்தி



தி. விக்கினேஸ்வரி



த. மதிவதனா



சி. சிவனேஸ்வரி

# சிறந்த மாணவனே இலட்சிய மனிதன்

## பொன்விழா — போட்டிக்கட்டுரை — மேற்பிரிவு

சி. சசிகலா

இன்றைய மாணவர்களே நாளைய சமுகத்தின் தலைவர்களாகவும் சமுதாயத்தின் ஆணி வேராகவும் திகழ்பவர்கள். அவர்களுடைய தூய்மையான வாழ்வும் தெளிவான சிந்தனையும் நாளைய சமுதாயத்தின் மலர்ச்சிககுப் பசளையாக அமைவன. மாணவப் பருவத்தில் பெறும் அறிவும், பண்பாடும், பழக்க வழக்கங்களும் அவர்கள் வாழ்வின் இறுதி வரை வழிநடாத்தும் கருவிகளாக அமைகின்றன. ''தொட்டிலிற் பழக்கம் சுடுகாடு மட்டும்'' என்ற முதுமொழி நமக்கு இந்த உண்மையைத் தெளிவாக எடுத்துக் காட்டுகிறது.

பாடசாலையில் மாணவன் பெறும் கல்வி வெறும் ஏட்டுக்கல்வியாக இருந்தால் மட்டும் போதாது. அவனுடைய அறிவு வளர்வதுடன், மனப்பண்பும் வளர்கின்ற கல்வியாகப் பாடசாலைக் கல்வி அமைய வேண்டும். ''கல்வி, பயிற்சி அனைத்தினதும் முடிவு ஒரு முழுமனிதனை உருவாக்குவதே'' என வீரத்துறவி விவேகானந்தர் கூறியுள்ளார். ''நல்ல குணதிசயங்களை உருவாக்குவதுதான் கல்வியின் நோக்கம்'' என்பது மகாத்மா காந்தியின் கருத்தாகும். தான் வாழும் சமூகத்துடன் ஒரு மாணவன் சேர்ந்து வாழக்கூடிய பண்பை உருவாக்குவதே கல்வியின் குறிக்கோள் எனத் தற்கால அறிஞர்கள் கருதுகின்றனர்.

வாழ்க்கை வசதிகளும், ஒழுங்கும், பண்பாடும் இல்லாத சேரிப்புறத்தில் பிறந்து வளர்ந்த பிள்ளையானாலும், அவனுக்கு ஒழுங்கான கல்வி கிடைக்குமானால், சீராகவும் சிறப்பாகவும் வளர்ந்து, தனக்கும் சமூகத்துக்கும் பயன்படுவான். நாட்டப்பட்ட விதை முளைத்து செழித்து வளர்வதற்குப் போதிய நீரும், பசளையும் கிடைக்கவேண்டும்: நோய்களைப் போக்க மருந்தும் தெளிக்க வேண்டும். அப்போதுதான் பயிர் முளைத்து வளர்ந்து, பூத்துக் காய்த்துப் பழுத்துப் பலன் தரும். மாணவனும் இவ்வாறு வளர்த்தெடுக்கப்பட வேண்டியவனே.

கல்வி கற்பிக்கும் குரு தெய்வமாக மதிக்கப்பட்டு வந்துள்ளார். குருவுக்குப் பணிந்து அவரின் வழிகாட்டலில் நின்று கல்விகற்ற மாணவர்பலர் சீராகவும் சிறப்பாகவும் இருக்கிறார்கள். குருவை மதித்தவர், மற்றவர்களால் மதிக்கப்படுகிறார். தங்களுக்கென்று சொந்தக் குறிக்கோள்களை உடையவர்களாக வாழ்கிறார்கள். மற்றவர்களுக்கு வழிகாட்டியாகவும் திகழ்கிறார்கள்.

பாடசாலையில் மாணவன் பெற்ற கல்வியும், அறிவும், பயிற்சியும், அனுபவமும் வாழ்நாள் முழுவதும் அவனுக்குத் துணையாக அமைகிறது. வீட்டுச் சூழலில் இருந்து விடுபட்டு, பாடசாலைக்கு வரும் பாலனை ஆசிரியர் வரவேற்று ஆதரித்து, சமூகத்தில் சேர்த்து வைக்கின்றார். இதனால் மாணவனின் உள முதிர்வுக்கும், வளர்ச்சிக்கும் ஏற்ப அறிவை வளர்க்கும் தானமாகப் பாடசாலை அமைகிறது; மாணவனை உருவாக்கும் சிற்பியாக ஆசிரியர் அமைகிறார். மாணவனின் உணர்வையும் நல்லாற்றலையும்அறிந்த ஆசிரியரின் வழிகாட்டலை ஒழுங்காகப் பின்பற்றும் மாணவன் சமூகத்தில் முதன்மை பெறுகிறான். தான்வாழும் சமூகத்துக்குத் தலைமை தாங்குவான். இவனை ஏனையோர் பின்தொடருவார்கள். தனது இலட்சியங்களைச் சமுதாயத்தில் பிரதிபலிக்கச் செய்கின்றான். பாடசாலையின் நல்மாணவன், மக்களால் நேசிக்கப்பட்டு, பின்பற்றப்படுகின்றபோது அவன் இலட்சிய மனிதனாகி விடுகிறான். நல்ல மாணவன் நல்ல மனிதனாக வளர முடிகிறது. சிறந்த மாணவன் இலட்சிய மனிதனாக உருவாகி விடுகிறான். பாடசாலையே இவன் வாழ்க்கைக்குக் களமாக அமைகிறது.

# சிவதி புராணம்

— க. வீ. —

உன்னைப் பிரசவித்த உத்தமியைச் சாம்புநதப்
பொன்னைப் புகழ்நீல வண்ணத்தாள் — தன்னைக்
கவிதைப்பொற் சாப்பணிந்து கைகூப்பித் தாழ
அமுதக் கணபதிநீ காப்பு !

பிரபஞ்சம் எல்லாமே பின்னமறப் பூத்த
அரவந்த வாலை அமலை — பரவுஞ்சீர்
சக்திபுராணம் உயர்சக்தி பெறவீர
சக்தி விநாயகனே காப்பு !

உள்ளச் சுருக்கெடுக்கும் உண்மை யொளிகொடுக்கும்
தெள்ளத் தெளிந்ததமிழ்த் தேனருவி — அள்ளி
நவமா யபிஷேகித் தஞ்சலித்த தூய
சிவதி புராணமெனச் செப்பு !

## நூல்

புவனங்க ளீன்ற புவனேஸ்வரீ ! தெய்வத்
தவனத்தை யூட்டும் தயாபரையே ! கௌரீ !
அண்டபகி ரண்டமெலாம் ஆட்டும் பரம்பொருளை
ஆடவைத்துத் தில்லையிலே அன்புசெயும் ஆரணங்கே !
கண்கண்ட தெய்வமெனக் கண்பனிக்கும் அன்பர்களின்
புண்கொண்ட வாழ்வு பொடியாக்கும் பொன்னரசீ
பாவத்திற் கஞ்சாத பாதகரின் சிந்தையுமே
நேசித்துக் கொள்ளும் நிறைகருணைப் பூங்குழலீ !
மங்கள வாழ்வு மலரவைக்கும் மாமுகிலே !
தங்க மனமளிக்கும் தண்ணிலவே பொற்சிலம்பீ !

சிட்டுப்போ லோடிவந்து செய்தி செவிமடுத்து
முட்டுப்பா டெல்லாம் முழுதகற்றும் மூதாட்டீ !
கௌரீ ! எனவொருகால் கல்லுங் கரையக்

கருணை பொழிகின்ற கற்பகமே பொற்சிலையே !
அங்கயற் கண்ணீ ! அழகுதமிழ்க் கூடலிலே
சங்கம் வைத்தன்று தமிழ்செய்த மீனாட்சி !
கலைநுட்பம் வானுயருங் காஞ்சியிலே ஞானக்
கதிகாட்டி விதிசெய்யுங் கண்ணளினக் காமாட்சி !
காசிக்குச் சென்றுகண் மூடுகின்ற யாருக்கும்
கூசாமல் முத்தி கொடுக்கும் விசாலாட்சி !

பிரபஞ்சம் எல்லாம் சமதர்ம ஆணைசெயும்
பெண்ணான பெண்ணே ! பெருக்கருணைப் பேராறே !
பேராத பச்சைவண்ணப் பெண்மைப் பெருஞ்சுடரே
கோழை களாய்வீரங் குன்றினராய்ப் பாவம்
ஏழைகளின் வாயிலே மண்போடும் எத்தர்களை
எற்றிப் பந்தாடும் எலும்பொடியச் சாடும்
கொற்றவையே ! காளிமா காளீ ! பராசக்தி !
எல்லோரும் இன்புற் றிருக்குநெறி வாராத
புல்லோர்கள் கண்டறியாப் புண்ணியப்பூங் கோகிலமே !
மோனமெனும் ஞான வரம்பிலுறை முத்தர்அக
வான விளிம்பிலே வட்டமிடும் சிச்சிலியே !

மன்னுயிரை நேசிக்கும் மாண்பு நெறிகாட்டும்
மாற்றுயருங் கல்விதரும் மாநோன் பனுட்டிக்கும்
ஏற்றமுறும் வெண்டா மரையிதய வாணீ !
தன்னுயிரை ஏழைகளுக் கர்ப்பணிக்கும் வீரத்
தியாகத்தை வல்லபத்தைத் திரத்தை ஈந்தருளும்
தயாநிதியே சாமுண்டீ ! தற்பரையே ! துர்க்கையே !
பொன்னுயிரைப் பேணும்பொன் மண்ணாதி யானவற்றை
ஏமம் உறுகவென எல்லோர்க்கும் ஈகவெனச்
சேமம் பெருகவெனச் செய்துவரும் செந்திருவே !

கோலம் பலவாய்க் குணம்பல வானாலும்
மூலத்தில் ஒன்றான முன்னைப் பழம்பொருளே !
நவராத் திரியணங்கே ! நற்சிந் தனைச்சிவதீ !
அபிராமி உன்றன் அழகு விழிகளிலே
ஆவி கரைவாரை அவையிருத்தும் அம்பிகையே !
கிடைத்தற் கரிய மனிதப் பெரும்பிறவி
எடுத்த பயனாக இன்பம் பணிபுரிந்து

அப்பாலே நின்னை அனுபவிக்கும் ஆர்வத்தால்
தப்பாதஆன்ம விடுத லையாம் அத்துவித
ஆராத இன்பம் அருளுகின்ற ஆரமிழ்தே!
பேராத வாழ்வளிக்கும் — பேசும் பொற் சித்திரமே!

அந்திப் பொழுதின் அகல்வானக் கோடியெலாம்
சிந்தை மயக்கேற்றுஞ் சிந்துதிரத்தி னுல்மெழுகி
எண்ணற்ற கற்பனைகள் எல்லையிலாச் சித்திரங்கள்
கண்ணைப் பறிக்கும் கலைக்கோலம் எல்லாமே
எழுதி யெழுதி யெழில்சேர்ந்த பேரழகாய்
இதய வெளியோ டிணைந்தசையும் வான்வெளியில்
செந்தீக் குழம்பிற்சே ருடித் தளதளக்கும்
அந்திக் கதிரோன் அழகொழுகும் மேனியிலே
தெண்ணிலாக் கீற்றினிலே தேனருவி யூற்றினிலே
மண்ணிலா னந்த மதுவெறிக்கும் பாக்களிலே
எண்ணற்ற பூக்களிலே ஏகாந்த மூலையிலே
விண்மீன் சிமிட்டலிலே மின்னற் பளிச்சினிலே
உன்னைக்கண் டென்ஜீவ ஊற்றுத் திறக்குதம்மா!
எங்கெல்லாம் பேரழகின் நர்த்தனங்கள் அங்கெல்லாம்
எங்கெல்லாம் பேராற்றல் வீச்சுக்கள் அங்கெல்லாம்
நீயேயென் ருனந்த பாஷ்பம் சொரிந்திடுவேன்!

அடுத்த கணப்பொழுதில் ஆனந்தம் எங்கேயோ?
கடுத்த முகத்தோடு காலேவா நடைசோரும்
திக்கற்ற ஏழைகளின் தென்பற்ற கண்ணீரில்
தீராத வேதனையாற் தீயுமிழும் நெட்டுயிர்ப்பில்
அன்னையுனைக் காணுதென் னுவி யுறைந்திடுமே!
புவனமெலாம் பூத்து விகசிக்கும் சக்தியெனும்
தவமுடையார் வாசகங்கள் தப்புவதோ! நற்சிவதீ?
பாரப் பழுவான வாழ்க்கையினர்க் குன்னருளை
வாரி வழங்கிடிலுன் வான்கருணை வற்றிடுமோ?

அபிராமி போற்றி! அரனவளே போற்றி!
நவசிந்தனைப் புலமை நல்கிடுவாய் போற்றி!
அரியா சனத்தில் அரசனே டென்னைச்
சரியா சனம்வைக்கும் சாம்பவீ போற்றி!
காரண காரியத்தின் கட்டறுத்து மேலான
பூரண மெய்ஞ்ஞான போதம் புகட்டுகின்ற
நாரா யுணீபோற்றி! நாமகளே போற்றி!

இதயக் கமலத்துள் இன்பநடம் புரியும்
இமயச் சிவமகளே எந்தாயே போற்றி!
வையத்தில் வாழ்வாங்கு வாழுதற்கு மானுடனை
ஐயப்பா டின்றியாட் கொண்டருளும் வண்ணம்
தெள்ளி யெடுத்திட்ட தெய்வீக மெய்ஞ்ஞான
வெள்ளிப் பனிம லையின் வேதாந்தத் துச்சியிலே
ஆதார மாக அனைத்துக்கும் சக்திதரும்
கேதார கௌரீ! உன்பாதார விந்தங்கள்
வாழ்க! நிதம் வாழ்க! வளரொளியாய் வாழ்க!
வாழ்க பலவாண்டு! வாழ்க பலவூழி!

அழகுத் திருக்கோலம் அன்பு அருட்சீலம்
பழகும் அருட்பார் 'பால்' பொசியும் மேற்பார்வை
வேண்டுவார் வேண்டுவன ஈயும் பெருங்கருணை
தூண்டுவார் உள்ளத்தே தோன்றும் ஒளிப்பிளம்பு
வாழ்க எனவாழ்த்தும் வல்லாளர் எல்லோரும்
ஆழ்வர் அருட்சிவதி ஆனந்த வெள்ளத்தே
சூழ்வர் இதயசுகம்!

"இயற்கை, மனிதனுக்கு இரண்டு காதுகளையும், இரண்டு கண்களையும் கொடுத்திருக்கிறது; ஆனால் நாக்குமட்டும் ஒன்று தான். பேசுவதைக் காட்டிலும், பார்ப்பதும் கேட்பதும்தான் அதிகம் இருக்கவேண்டும் என்பதே இதன் நோக்கம்."

— சாக்ரட்டீஸ்

"யாகாவாராயினும் நாகாக்க காவாக்கால் சோகாப்பர் சொல் இழுக்குப்பட்டு."

— வள்ளுவர்-

# தமிழிலக்கியத்தில் கல்விக் கொள்கை

## வித்துவான் க. ந. வேலன்

தமிழ் பழமையான ஒரு மொழி என்பதும் தமிழிலக்கியம் மிகப் பழமை வாய்ந்ததென்பதும் இப்போது முடிவுசெய்யப்பட்ட உண்மையாகும். இன்று உலகில் வாழும் ஆயிரக்கணக்கான மொழிகளுள்ளே 2000, 3000 ஆண்டுகளுக்கு மேற்பட்ட மொழிப்பழமையும் 25 நூற்றுண்டுகளுக்கு மேற்பட்ட இலக்கியச் சிந்தனையும்உடைய மொழிகள் சீனமும், தமிழும் ஆகும்.

மேலும் இன்று உலகில் 150க்கு மேற்பட்ட தனிநாடுகள் உள்ளன. இவற்றுள் 50க்கு மேற்பட்ட நாடுகள் தமிழோடும் தமிழரோடும், தமிழ்ப்பண்பாட்டோடும் தொடர்பு கொண்டு விளங்குகின்றன. ஆபிரிக்காவிலுள்ள தமிழ்ச் செல்வாக்கும்,ஜப்பானிய மொழியிற் கலந்துள்ள தமிழ் மொழிச் செல்வாக்கும் அண்மையில் நடைபெற்ற ஐந்தாம் உலகத் தமிழ் மாநாட்டில் வெளியிடப்பட்டன.

சங்கம் வைத்து மொழி, கலை, இலக்கியம் ஆகியவற்றை வளர்த்த பெருமை உலகில் பிரான்சு நாட்டுக்கும் தமிழகத்துக்குமேயுரியது. பிரான்சு நாடு சங்கம் அமைத்தது கி.பி. 12-ம் - 16-ம் நூற்றுண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்திலாகும். தமிழ்ச் சங்கத்தின் பழமை எல்லை இதுவரை உறுதிசெய்யப்படவில்லை. மூன்றுவது சங்கத்தின் முடிவுற்ற காலம் கி.பி. 150 என உறுதி செய்யப்பட்டுள்ளது.

தமிழ்ச் சங்கம் மொழி, கலை, இலக்கியம் முதலிய இயல்களை ஆக்கவும், அரங்கேற்றி ஆயவும் வழுக்களை நீக்கவும் ஆக்கப்பட்ட ஒரு கல்வி நிறுவனமாகும். இது சேர, சோழ, பாண்டியர் என்ற வேறுபாடின்றி தமிழகம் முழுவதையும் பிரதிநிதித்துவப்படுத்தியதோடு கேரளம், கருநாடகம், ஆந்திரம், ஈழம் ஆகிய நிலங்களில் வாழ்ந்த பெரும் புலவர்களையும் ஏற்றுக்கொண்டிருந்தது. பிரகதத்தன் என்னும் ஆசிய அரசன் கூடப் பெரும் புலவனுய்ச் சங்கமிருந்தான். ஈழத்துப் பூதன் தேவனுர் சங்கத்து வீற்றிருந்தமை நாமறிவோம். இச்சங்கப்புலவர் எண்ணிக்கை 600 பேர். பெண்பாற்புலவர் 30 பேராவர். அரசகுடியினர் முதல் எயின குடியினர் வரை ஏற்றமுடன் சங்கத்து இருந்த கல்வியாளர் ஆவர். இவற்றுல் சங்ககாலத்தின் கல்விநிலையினையும், சங்கத்தின் விரிந்தகன்ற பெயராண்-மை நிலையினையும் உணர்ந்து கொள்ளலாம்

இவர்கள் நூல் எழுதுவதற்குரிய காரணம் அவர்கள் உள்ளத்திருந்த அருளுணர்ச்சியாகும். இதனுலேயே திருவள்ளுவர் திருக்குறளை அருளினுர் என்னும் மரபு ஏற்பட்டது. ''சொல்லுவதற்கு ஏதாவது இருந்தால் மட்டுமே எழுது''என்பது ஓர் இலக்கியக் கட்டளையாக இன்றைய எழுத்தாளர் சிலர் சொல்லுவார்கள். ஏனெனில் இன்று பலர் சொல்வதற்கும், எழுதுவதற்கும் ஏதும் இல்லாமலே வெறும் விருப்பு,வெவெறுப்பு உந்தல்களால் உடல்தினவு தீர்ப்பதற்குச் சொறிவதுபோல பேசியும், எழுதியும் வருகிறுர்கள். ''பயனில் சொல் பாராட்டுவானை மகன் என்னுதே. மக்கட் பதடி-பதர் என்க'' என்பார் வள்ளுவர். பேச்சுக்கும், எழுத்துக்கும் அடிப்படையான அந்தத் தூண்டுதலுக்குக் காரணமென்ன? வெறு மனமாற்சரியமா? இல்லை. அருளுடைமையே தூண்டியது. அருந், தன்னலமற்றது.. தன்னலமின்மையே பேசவைத்தது, எழுதவைத்தது. அது பொருளாசையோ, புகழாசையோ அற்றது. அந்தத் தளத்தில் நின்று அருளினுர்கள். அருள வேண்டுமென்பது தமிழ்ச் சான்றேர்இட்ட இலக்கியக் கட்டளையாகும். ஆனுல்இக்கட்டளை சங்கச் சான்றேருக்குப் பின் பன்முறை மீறப்பட்டுள்ளது.

நேற்று வாழ்ந்த பாரதி அருளாளன். அவன் அந்தத் தளத்தில் நின்றே பேசினான். 'உள்ளத்தில் உண்மை ஒளி' என ஓர் ஒளியினைக் குறிப்பிடுகின்றான். அது எந்த ஒளி? அதுதான் அருள் ஒளி. அவ்வொளி உடையார்க்கு வாக்கினிலே ஒளி உண்டாகும் என்பது அவன் முடிவு.

இதனாலேயே

'வினையின் நீங்கி விளங்கியஅறிவின்
முனைவன்கண்டது முதனூல்ஆகும்'

என்றார் தொல்காப்பியர். வினையின் நீங்கி விளங்கிய அறிவினையுடைய முனைவன் யாவன்? அம்முனைவன் இறைவன் என்றும் அவனாற் செய்யப்பட்டதாகக் கருதப்படும் வேதம் போன்றவையேமுதலில் எழுதப் பட்ட முதல் நூல் என்றும் உரை செய்வர். வினையின் நீங்கியான் என்றால் வினை முன்னர் இருந்து நீங்கியான் என்றும் பொருளாகும். அங்ஙனமாயின் வினையின்பிடி இறைவற்குமுண்டோ? என்னும் ஐயம் எழும். ஆதலால் வினையின் நீங்கி விளங்கிய அறிவின் முனைவன் என்பது அருளாளராகிய சான்றோரையே குறிப்பிடுவதாகும். அவர் கண்டது முதலிற் செய்யப் பட்ட நூலன்று. முதன்மைவாய்ந்த நூலாகும் என அந்நூற் பாவுக்குப் பொருள் கொள்வதே சிறப்பாகும். எனவே ஏனையோர் எழுதுபவை முதன்மை அற்றவை என்பது பொருளாகும்.

அருளுடைமையை ஒருவன் பெறுவதே வாழ்வின் நோக்கம். அதுவே தமிழர் கண்ட கல்வியின் நோக்கமுமாகும் ''வீடடைதல் நூற்பயன்'' என்றே இதனைக் குறித்தார்கள்.

இது கல்வியின் முடிந்த முடிபு. ''சான்றோனாக்குதல் தந்தைக்குக் கடனே'' என்று புறம் கூறும். '' அவையத்து முந்தியிருப்பச் செயல்'' என்று குறள் கருதுவதும் இதுவே. கற்றதனால் ஆயபயன் என்கொல்? என வினவி நற்றாள் தொழுதல் என அருளுடைமையையே வள்ளுவர் கல்வியின் பயனாகக் குறித்தார்.

கற்க, கசடறக் கற்க, கற்பவை கற்க, பாலுண்குருகில் தெளிந்து கற்க'' என, கற்பவை எவை என்பதை விளக்கினர். கற்றபின் நிற்க என்பது, கற்றபின் அருளாளனாக நிற்க என்பது பொருள். கல்வி உடலோடு கூடிவாழும் உலக வாழ்க்கைக்கு மாத்திரம் உற்றதுணை எனக் கருதப்பட வில்லை. கல்வியின் ஊங்கு இல்லைச் சிற்றுயிர்க்கு உற்றதுணை'' எனக் கல்வி ஒன்றே உயிர்க்குத் துணையானது என்று கருதினர்கள். அதனாலேயே ஒருமைக் கண்தான் கற்ற கல்வி ஒருவற்கு எழுமையும் எமாப்புடைத்து அதாவது ''இனிவரக்கடவதாகிய பல்பிறப்புகளிலும் காவலாம் தன்மைத்து'' என உரைகண்டார்கள்.

மைந்தனின் கல்வியை வளர்ப்பது கல்வி அமைச்சின் கல்லூரிகளின் அல்லது ஆசிரியர்களின் கடன் என்று நம்முன்னோர் கருதவில்லை. ''தந்தையொடு கல்விபோம்'' என்றார்கள். ''சான்றோனாக்குதல் தந்தைக் குக் கடனே'' என்றார்கள். தந்தை மகற்காற்றும் உதவி அவையத்து முந்தியிருப்பச் செயல் என்றார்கள். எனவே மைந்தனின் கல்வி வளர்ச்சி முழுமைக்கும் தந்தையே பொறுப்பானவர். இந்தக் கல்விக் கொள்கைக்குக் காரணம் என்ன? மைந்தரின் கல்வியில் இன்றைய தந்தையர் ஏற்கும் பங்கு என்ன? என்பன நாம் சிந்திக்க வேண்டியவை.

ஒரு நாட்டின் சிறப்பு அந்நாட்டின் பொருட் செல்வத்தில் மாத்திரம் தங்கியிருக்கவில்லையென்றும், அந்நாடு பெற்றுள்ள கல்விச் செல்வமே செல்வம் என்றும் கருதப்பட்டது. வள்ளுவர் ''தள்ளாவினையும் தக்காரும் தாழ்விலாச் செல்வரும் சேர்வது நாடு'' எனத் தக்காராகிய அறிவோரை நடுநாயகமாக வைத்தே நாட்டினை மதித்தார். ''சான்றோர் பலர் யான் வாழும் ஊரே'' எனப் பிசிராந்தையார் தம் கவலையற்ற வாழ்வுக்குக் காரணம் கூறினர்.

'கல்வி சிறந்த தமிழ்நாடு—உயர் கம்பன் பிறந்த தமிழ்நாடு, பல்விதமாய சாத்திரத்தின் மணம்—பாரெங்கும் வீசும் தமிழ்நாடு' தமிழகத்தின் சிறப்புக்குக் காரணம் கல்வியே எனக் காட்டினன் பாரதி.

பொருட் செல்வம், அருட்செல்வம் என இரண்டே செல்வம். அருள் செல்வத்தைத் தருவதால் கல்வியும் ஒரு செல்வமாகும். கல்வி அருளாக மலர வேண்டும். அதனலேயே கல்லார் நெஞ்சில் நில்லான் ஈசன் என்றும், கற்றவர் விழுங்கும் கற்பகக் கனி என்றும் மற்றவர்—அருளற்றவர் அறியா மாணிக்க மலே என்றும் இறைவன் உணர்த்தப்பட்டான்.

பிறப்பு, பொருள், குடி, குலம், சாதி, மரபு எவற்றையும் அளவாகக் கொள்ளாது கல்வி ஒன்றினையே அளவாகக் கொண்டு உயர்வு, தாழ்வு அளக்கப்பட்டது. அது பலரிடம் இன்று குடி கொண்டுள்ள கல்விச் செருக்கன்று; அது அருளாக மலர்ந்த கல்விச் செல்வமாகும்.

சாதி இருக்கிறது; ஆம் இரண்டுசாதி இருக்கிறது; ஆம் இரண்டே இரண்டு சாதி தான் இருக்கிறது. இந்த நூற்றுண்டில் இப்படிச் சொல்வது அருவருப்பானது தான். ''சாதிகள் இல்லேயடி பாப்பா'' என்றபாரதி ''சாதி இருக்கின்றதென்பானும் இருக்கின்றுனே'' என்று கூறிய பாரதிதாசன் முதலியோர் ஔவை கருத்தையேற்கவில்லேயா?

ஔவையார் கூறும் சாதி, பெரியோர், சிறியோர் என்னும் இரண்டுசாதி. இந்தப்பிரிவு தமிழர் கண்ட கல்விக்கொள்கையை அடிப்படையாகக் கொண்டது. பிறப்பு முதலியவற்றை அடிப்படையாகக் கொள்ளாதது. பிறப்பு ஒக்கும் எல்லா உயிர்க்கும் என்பது ஔவைக்கு உடன்பாடே. இறப்பு ஒவ்வாதென்ற வள்ளுவத்துக்கே ஔவை விளக்கம் கூறுகின்ருர்.

''சாதி இரண்டு ஒழிய வேறில்லே'' என்பது ஔவையாரின் முடிவு. இந்த முடிவுக்கு அவரே விளக்கம் கூறுகிருர். இந்த முடிவை அவர் மேம்போக்காகக் கூறவில்லே. அழுத்தம் திருத்தமாகவே கூறுகிருர். ஒரு கருத்தை அழுத்திக் கூறும்போது அதனே உடன்பாடு எதிர்மறை என்னும் இரண்டு வழிகளாலும் வற்புறுத்த வேண்டும். 'சாதி இரண்டு' என உடன்பாட்டாலும் 'வேறு இல்லே' என எதிர்மறையாலும் தம் கருத்தை வற்புறுத்திஞர். இதற்கு அவர்கூறும் அளவுகோல் தமிழர் கண்ட கல்விக்கொள்கைகளின் ஓர் உயரத்தைத் தொட்டு நிற்கின்றது.

பட்டாங்கிலுள்ளபடி தம்மை இட்டார் பெரியோர்''
''பட்டாங்கிலுள்ளபடி தம்மை இடாதார் சிறியோர்''

அறவழியில் தம் வாழ்வை இட்டுச் சென்ருேர் தம்மை அறவழிப்படுத்திஞேர் பெரியோர்; அல்லாதோர் இழிந்தோர். இங்ஙனம் கல்வியை அளவாக வைத்தே கல்வியால் பெற்ற அறஒழுக்கத்தை அளவாக வைத்தே பெரியோர் சிறியோர் என்னும் சாதி அளக்கப்படும் என்ருர் ஔவையார்.

முன்பு கூறிய ''தந்தையே மைந்தர் கல்விக்குப் பொறுப்பாவர்'' என்பது புறக்கணிக்கப்பட்டது போலவே கல்வியே—கல்வியால் பெற்ற அற ஒழுக்கமே உயர்வு தாழ்வுக்கு அளவு என்பதும் புறக்கணிக்கப்பட்டுள்ளது. இவையேன் நடந்தன? இவற்றின் விளேவுகள் எவை? என்பன ஆராயப்பட வேண்டியவையாகும்.

கல்வியின் சிறப்பினேயும் அதன் இன்றியமையாமையையும் தமிழ் இலக்கியம் போல் உலகில் வேறு எம்மொழியிலாவது இலக்கியப் பரப்பு உண்டா என்பது ஐயப்பாடே. கல்லாததாயரும் தம்மைந்தரைக் கற்ருராக்கப் பெருங்கவலே கொள்ளும் தமிழ்த் தாயர்போல் உலகில் வேறு எந்நாட்டிலும் தாயர் உளரா என்பதும் ஐயப்பாடே. இதற்குக் காரணம் இந்த இனத்தின் நீண்ட பாரம்பரியத்தில் பெற்ற விழுமியங்களுள் சிறந்தது சிற்றுயிர்க்கு உற்ற துணேயானது கல்வியே என்னும் கல்விக் கோட்பாடேயாகும்.

''கல்லாதாரை விலங்கோடனையர்'' என்பார் வள்ளுவர். தாம் கற்று வைத்தும் அச்செல்வத்தை வழங்காதாரைக் கொல்ல வேண்டுமென்பார் பாரதிதாசன். கல்லாதார் வாழும் ஊரைத் தீ கொளுவுக என்பான் பாரதி.

கல்வியின் முடிந்த முடிபாகிய மறுமைப் பயனை மாத்திரம் கொண்டதல்ல தமிழர் கண்ட கல்வி. பொதுவாகத் தமிழர் உலகியலைப் புறக்கணித்து மறுஉலகை பற்றிச் சிந்திப்பவர் என்னும் மயக்கம் மேனாட்டார்க்கும் அவர் கூற்றை மாத்திரம் கற்ற நம்மவர்க்கும் உண்டு.

ஏனையவற்றைப் போலவே கல்வியின் உலகியல் நோக்கையும் தமிழ் இலக்கியம் விரிவாகக் கூறுகின்றது. ''இம்மை பயக்குமால்'' என இம்மை பயத்தல் கல்வியின் நோக்கங்களுள் ஒன்றாகும்.

கற்போர் கற்பிப்போர் இலக்கணங்கள் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. மலைநிகர் மாண்பு என ஆசிரியனின் புறநிலை ஆளுமையும் அகநிலை ஆளுமையும் உவமை முகத்தால் விளக்கப்பட்டுள்ளது.

தலைமகளை விட்டுத் தலைமகன் பிரிதற்குப் பல காரணங்கள் தொல்காப்பியர் கூறுவர். அவற்றுள் ஒன்று ஓதற் பிரிவு—இது உயர்கல்விக்காக ஆடவன் காதலியை விட்டுப் பிரிதல். மற்றொன்று தூதிற் பிரிவு. தன்னாட்டு அரசனுக்காக மற்றொருநாட்டு அரசனிடம் தூது செல்வதற்காகப் பிரிதல். தூதனுக்குரிய ஆளுமை, தூங்காமை, கல்வி துணிவுடைமை முதலிய உலகியற் கல்வி அக்காலத்தில் வளர்ந்திருந்தமையை இது காட்டுகின்றது. போர் வரின் பிரிவு என்பது மற்றொன்று. இது அக்காலக் கல்வியில் போர்க்கலை பெற்றிருந்த இடத்தை உணர்த்துகின்றது.

ஆன்ம ஈடேற்றமே கல்வியின் முடிந்த முடிபானாலும் உலகியலைப் புறக்கணிக்காத கல்வியே வாழ்க்கையையே தமிழர் குறிக்கோளாகக் கொண்டிருந்தனர் என்பதையே இவை குறிக்கின்றன.

இயல், இசை, நாடகம் என்னும் முந்நிலையில் பிரிந்து நின்ற தமிழ் என்னும் சொல்லுக்கு கல்வி என்பதே பொருளாகும். இசைத்தமிழ் கற்றல் என்றால் இசைக்கல்வி கற்றல் என்பதே பொருளாகும்.

சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்ற ஐந்தின் வகை தெரிவின்கூட்டே உலகு என்பர் வள்ளுவர். இதற்குத் தத்துவப் பொருள் ஒன்று உண்டு. ஐம்பூதங்களின் நுட்பங்களை உணர்பவனிடமே உலகியல் தங்கியுள்ளது எனவும் உலகியல் பொருள் காணல் பொருந்தும்.

''பஞ்சபூதச் செயல்களைக் கூறும் கலை மெத்த வளருது மேற்கே, அந்த மேன்மை தமிழ் மொழிக்கில்லை'' என ஒரு மேதை உரைத்தான் என்பான் பாரதி.

பஞ்ச பூதங்கள் பற்றிய அறிவியற் கொள்கைகள் தமிழிலக்கியத்தில் ஆங்காங்கே காணப்படுகின்றன.

வளியிடை வழங்கா வானம்சூடிய
மண்திணி இருக்கை '' எனப் புற

நானூறு மண்திணி இருக்கையாகிய உலகினைச் சூழ்ந்து வளியற்ற வானம் குடியிருப்பதாகக் கூறும். ஞாலம் என்பது பூமி. ஞாலுதல் என்பது தொங்குதல். எனவே ஞாலம் என்னும் பூமி அந்தரத்தில் தொங்குகின்றது என்னும் கருத்தைத் தன்சொல்லாலேயே உணர்த்துகின்றது. ஞாலம் என்னும் சொல் திண்பொருள், நீர்ப்பொருள், வளிப்பொருள் என வகுக்கப்பட்ட முப்பொருள்களுள் நீர்ப்பொருள் தவிர்ந்த ஏனையவை அமுக்கத்தால் சுருங்கும் இயல்பின. நீர்ப்பொருள் அமுக்கத்தால் சுருங்கா இயல்புடையது. இச்சுருங்கா இயல்பை 17-ம் நூற்றாண்டில் வாழ்ந்த Pascal உணர்த்தினர். ஆனால் Pascal க்குமுன் பல நூற்றாண்டுகளுக்கு முன் வாழ்ந்த ஔவையார் இவ்விதியை ஓர் உவமை மூலம் வெளிப்படுத்தியுள்ளார்.

ஆழத்தைப் பொறுத்து அமுத்தும் சக்தி கூடும். எனவே ஆழ்கடல் நீரில் ஆழ

அமுக்கி முகக்கினும் நாழி, நானுழி நீரை முகவாது'' என்று நீர்ப் பொருளின் சுருங் காவியல்பை விளக்கினர்.

ஒளிக் கதிர்களைக் கோட்டம் அடையச் செய்தால் தொலைவில் உள்ள பொருளை அண்மையில் தோன்றச் செய்யலாம் என்னும் உண்மையைக் கலிலியோ கண்டார். தற்செயலாகத் தம் கண்ணுடி வில்லையைத் தூசு துடைக்கும்போது மடிந்த நிலையிலிருந்த இருவில்லைகளில் தொலைவில் இருந்த கோபுரத்தின் தோற்றத்தைக் கண்டார். அதிலிருந்து தொலைநோக்காடியும் வான ஆய்வும் பெருகிற்று.

இதே உண்மையைக் கபிலர் என்னும் புலவர் வள்ளுவனின் சிறிய குறட்பா உலகையே காட்டுகிறது என்னும் உண்மையை விளக்க ஓர் உவமை கூறுகின்றர். பனிக் காலத்தின் காலைநேரம்; வழியிலுள்ள ஒரு புல்லின் நுனியில் ஒரு பனித்துளி. அந்தச் சிறிய பனித்துளியில் தொலைவில் உள்ள பனைமரம் தெரிகிறது என்று வியந்தார். கண்ணுடி வில்லைகள் இரண்டினுல் ஏற்பட்ட ஒளிக்கோட்டம் தொலைவிலுள்ள கோபுரத்தை அண்மையாக்கியது போல் நீர்த் துளியில் வளைந்த ஒளிக்கோட்டம் தொலைவிலுள்ள பனைமரத்தை அண்மையாக்கிற்று

இங்ஙனம் பல அறிவியற் கருத்துகளை இலக்கியங்கள் சொல்கின்றன. அங்கு அக் கருத்துக்களின் அடிப்படையில் ஆய்வுகள் நடைபெற்றன. இங்கு நாம் இவற்றைக் கவிதைகளாகக் கண்டு சுவைத்தோமே தவிர அறிவியல் கண்கொண்டு ஆய்வு நடத்தவில்லை.

''நிலன் நெளி மருங்கு'' எனப்படும் நிலத்தின் பள்ளமான பகுதிகளே நீரினைத் தேக்குதற்கு ஏற்ற இடமெனக் கண்டு அங்கு நீரை அணைகட்டித் தேக்க வேண்டுமென ஒரு புலவன் அரசனுக்கு அறிவுரை கூறினுன். ''உணவெனப்படுவது நிலத்தொடு நீரே'' என்ருன். ஆதலால் நிலன் நெளி மருங்கில் நீர்நிலை பெருகத்தட்டோரே, அம்ம, இவண் தட்டோரே'' என்ருன். மாவலியை வரண்ட பிரதேசத்துக்கூடாகப் பாய்ச்ச வேண்டும்; தேக்க வேண்டும் என்பது 2000 ஆண்டுகளுக்கு முன் சொல்லப்பட்ட கதை. ஏனெனில் உணவென்பது நிலத்தையும் நீரையும் இணைத்து விடுவதுதான். அது உணவுதரும் என்ருன்.

திருமாவளவன் எனப்பட்ட கரிகாலன் ஏறத்தாள 2000 ஆண்டுகளுக்கு முன் காவிரிக்குக் கல்லணை கட்டினுன் என்றும், காடுகொன்று நாடாக்கினுன் என்றும் சொல்லப்படுகின்றது. இந்தக் கல்லணை மணல் தளத்தை அடிப்படையாகக் கொண்டது. மணல்தளம் அமைத்து அணை எழுப்புவது ஒரு தனிக்கலையாக இன்று கருதப்படுகிறது. வழிந்து செல்லும் நீர் கீழே கசிந்து செல்லும் நீர் இரண்டாலும்அணை பாதிக்கப்படாதபடி கட்டவேண்டும். எனவே இத்தகைய அணைக்கட்டை 2000 ஆண்டுகளுக்கு முன் அமைத்திருந்தனர் நம்முன்னேர். இத்தகைய கல்லணையைக் கட்டிய தமிழினத்தினிடம் பொறியியல் அறிவு மிகவளர்ச்சி பெற்றிருக்க வேண்டுமென வியப்படைகிருர்கள் இன்றைய பொறியியலாளர்.

சோழர் காலத்துக் கோவில்களும், பல்லவர் காலத்துக் குடைவரை கோயில்களும் சிற்பங்களும் அக்கால மன்னர்களுக்குப் புகழினைப் பெற்றுத்தந்தாலும் அக்காலத்துத் தொழிலாளர்களின், தொழில் நுட்ப வல்லுநர்களின் புகழையே பேசுகின்றன. அவர்கள் இத்துறையிற் பெற்றிருந்த கல்வி அறிவையே பேசுகின்றன.

இராமநாதன் கொழும்பில் பொன்னம்பலவாணேசுவர் கோவிலைக் கருங்கற் கோயிலாகக் கட்டினுர் என்றுல் அவரா அக்கோயிலைக் கட்டினுர்? கட்டியெழுப்பியவர் சிற்பிகள் அல்லரோ? இங்ஙனமே கல்லணைகளையும், கோயில்களையும் அமைத்த தொழிலாளரை மறைத்து அமைப்பித்த மன்னர் தோற்றமே கோபுரமென நிலைத்து நிற்கின்றது.

நெல்வகையில் ஐவனம் என்பது ஒரு வகை. இது மலையெனப்படும் குறிஞ்சிநிலத்தில் பயிரிடப்படும் ஒருவகையாகும். இந்த மலை நெல் பயிரிடும் முறையை இன்றும் சிங்கள நாடுகளில் காணலாகும். இம்முறை தமிழரின் முன்னோரிடமிருந்து மேற்கே ஆபிரிக்காவுக்கும், கிழக்கே பிலிப்பைன் தீவுக்கும் பரவியிருப்பதாக 'பிளமிங்' என்பார் கூறுகின்றார்.

மலைச்சரிவுகளை ஐவனம் விளைவதற்கேற்ற பாத்திகளாகப் பண்படுத்தியிருக்கிறார்கள். சுமார் 1.3 மீற்றரிலிருந்து 1.6 மீற்றர் உயரமுள்ள சுவர்களை 10 மீற்றர் இடைவெளியில் எழுப்பி அதில் சமமான 10 மீற்றர் அகலமுள்ள பாத்திகளை அமைத்தார்கள். இவைகளெல்லாம் தமிழினம் உலகியற் கல்வியில் பெற்றிருந்த உயர்வினையே காட்டுகின்றன. இவ்வித உயர்வினை தமக்கென ஒரு கல்விக் கொள்கையில்லாதவர்களால் பெற்றிருக்க முடியாதென்பது உண்மையாகும்.

கடலின் அண்மையினையும் பலகடல் கோள்களையும் கண்டவர்கள் தமிழர். இதனால் கடல்பற்றிய உலகியல் அறிவும் அவர் கல்வியில் நிலை பெற்றிருக்க வேண்டுமென்பதற்கு ஏராளமான சான்றுகள் இலக்கியத்தில் உள்ளன. கப்பல், ஓடம், நாவாய், பரிசில், கட்டுமரம் போன்ற சொற்கள் கடலின் ஊர்திகளின் வெவ்வேறு அமைப்பைக் காட்டுவதால் அவற்றினைக் கட்டும் தொ தொழிற்கல்வியும் அவர் பெற்றிருந்தனர் என ஊகிக்க முடியும்.

''முந்நீர் வழக்கம் மகடூஉவோடில்லை'' என்னும் தொல்காப்பியம் கடல் நீர், முந்நீரால் அமைந்தது என்பதை உணர்த்துகின்றது. நிலம் முழுவதும் நீரால் சூழப்பட்டுள்ளது என்னும் உண்மையை ''இருள் நிற முந்நீர் வளைஇய உலகம்'' எனத் திருமுருகாற்றுப்படை கூறும். இவற்றால் நிலப் பரப்பை விட நீர்ப்பரப்புப் பெரிதென்பதும் அந்நீர் தொடர்ச்சியானதாக உலகினைச் சூழ்ந்துள்ளது என்பதும் அவர் அறிந்திருந்தனர் என்பதை நாம் உணரலாம்.

மேலும் கடல் நீரின் நீர்மையையும்' அவர் அறிந்திருந்தனர். கடல் நீரின் தன்மையாவது அந்நீரில் கலந்துள்ள உப்புவகைகளாகும் என்று இன்றைய விஞ்ஞானம் கூறும். கடலின் நீர்மை குன்றினால் அங்கு வாழும் உயிரினங்கள் இடம்விலகும், சில இறக்கும், புதியவை தோன்று. இதனால் கடல்வளம் குன்றும். தினமும் கோடிக்கணக்கான மீன்வகைகள் பிடிக்கப் பிடிக்கக் குறையாமல் விளைகின்றனவே என்று நாம் ஆச்சரியப்படுகின்றோம். இதற்கான காரணம் கடல் நீரின் இந்த நீர்மையாகும். மழையில்லையானால் இந்நீர்மை குன்றும் என்பார் வள்ளுவர்.

''நெடுங்கடலும் தண்ணீர்மை குன்றும்'' என்னும் குறளுக்கு விளக்கம் கூற வந்த பரிமேலழகர், கடல் தன்னியல்பு குறைதலாவது, நீர்வாழும் உயிர்கள் பிறவாமையும் மணிமுதலியன படாமையும்'' என விளக்கங் கூறியுள்ளார். கடல் தண்ணீர்மை குறைதல் என்பது மழையின்மையால் கடல்வற்றி, அளவால் குறைதல் என்பது பொருளன்று. தன்மையாகிய உப்பளவுகளில் குறைதல் என்னும் உண்மையை அவர் அறிந்திருந்தனர் என்பதே பொருளாகும்.

மேலும் அலை வேறு, ஓதம் வேறு என்றும், அலையின் தோற்றத்திற்குக் காரணம் காற்று என்றும் ஓதம் தோன்றுவதற்குச் சூரியன், சந்திரன் ஆகிய இரண்டினுள் திங்களே முதற்காரணமென்பதையும் அவர் அறிந்திருந்தனர்.

இங்கு குறிப்பிட்டவையெல்லாம் ஏறத்தாழ 2000 ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழர் அறிந்திருந்த உலகியல் கல்விப் பெருக்காகும்.

தமிழர், முத்தமிழ் அறிவுமாத்திரம் உடையவர் எனவும் தமிழ் ஒரு பக்தி மொழியே எனவும் கூறி அமைவது பொருந்தாது. இவற்றோடு பஞ்சபூதச் செயல்களின்

நுட்பங்கள் கூறும் கல்வியிலும் வல்லவரா யிருந்தனர் என்பதையும் நாம் உணரவேண் டும்.

இத்தகைய சிறந்த விஞ்ஞான அறி வினையும், மெஞ்ஞான அறிவினையும் வெறும் அனுபவத்தினுல் மாத்திரம் பெற்றுர்கள் என்று கூறுவதற்கில்லை. அக்காலத்திருந்த குருகுலக் கல்விமுறையில் இவை ஊட்டப் பட்டிருக்க வேண்டும். இக்கூற்றுக்குப் போதிய சான்றுகள் இல்லை. அதனுல் இது பொய்த்துவிடாது. மஞ்சளாவிய மாடங்க ளைப்பற்றிய வர்ணனைகள் சங்க இலக்கியத் தில் பேசப்படுகின்றன. அக்கட்டிடக் கலை பற்றிய நூல்கள் எவையும் இன்று இல்லை. அக்கட்டிட இடிபாடுகளின் தடங்கள்கூட இன்றுவரை காணப்படவில்லை. பல்லவர் கால, சோழர்காலக் கோயில்கள் நிற்கின் றன. அவற்றின் அமைப்புப்பற்றிய நூல் கள் இல்லை. மொகஞ்சதாரோ, கரப்பா நாகரிகம் தமிழர் நாகரிகம் என்னும்போது இறும்பூது எய்துகின்றேம். அக்கட்டிட அமைப்புப்பற்றிய நூல்கள் இன்று உண் டோ? இவற்றின்இன்மை அவற்றைப் பொய்யாக்கிவிடாது.

கடிகை, பள்ளி, செழுங்கலைநியமம் போன்ற சொற்கள் அக்காலக் கல்விநிலை யங்களின் பெயர்களாக விளங்கிவந்தன. ஓதல், ஓதுவித்தல் ஆகிய அறுதொழில் புரி யும் அந்தணரே ஆசிரியராயிருந்தனர். புல னழுக்கற்ற அந்தணுளன் கபிலன் ஓர் ஆசி ரியன். புலனழுக்கற்ற தன்மையே அந்தண் -மை. அது இன்றைய சாதி குறித்ததன்று. ''மறப்பினும் ஒத்து கொளலாகும். பார்ப் பான் பிறப்பொழுக்கம் குன்றக் கெடும்'' என்னும் வள்ளுவர் ஒழுக்கத்தால் வருவது அந்தண்மை என்றுர். அந்தண்மையே ஆசி ரியன் இயல்பாகக் கொள்ளப்பட்டது.

பருகுவன் அன்ன ஆர்வமும் செவி வாயாக நெஞ்சுகளனுகக் கேட்டவை விடாது உளத்து அமைக்கும்பான்மையும் அதாவது மனக்குவிவும் மாணவ இயல்பா கக் கொள்ளப்பட்டது. ''வெண்பாவை இருகாலிற் கல்லானைப் போட்டாளே உன்னை ஒருத்தி வேலைமினக்கெட்டுப்போய்' என்று கூறிய ஔவையாரும் மாணவ இயல்பாகிய மனக்குவிவையே குறித்தார். கல்வி மாணவனை மையமாக வைத்து இயங் குவதாகக் கருதப்பட்டது. ஆசிரியன், மாணவன், கல்வி ஆகிய முக்கூற்றின் இயக் கமே கல்வி எனக் கொள்ளப்பட்டது. மாண வனின் உள்ளக் கமலத்தின் ஒவ்வோரிதழி னையும் ஆசிரியனுகிய சூரியன், தன் ஞானக் கதிர்களால் அலர்த்த வேண்டும்'' என்பார் தாகூர். அந்தச் செயலே கற்பித்தல் ஆகும்.

''நெஞ்சுகளனுக'' எனக் கல்வியின் நிலைக்களம் சொல்லப்பட்டது. கல்வி என் பது மனப்பயிற்சி என்பதை ,,வைத்ததோர் கல்வி மனப்பழக்கம்'' என்று கூறுவர். செந் தமிழ் நாப்பழக்கத்தாலும், சித்திரம் கைப் பழக்கத்தாலும் வருவதுபோல கல்வி, மனப்பழக்கத்தால் வரும் என்பது கருத்து. இதனுல் மாணவனின் முயற்சியே வற்புறுத் தப்பட்டது. இவற்றுல் விளங்குதல், பதித் தல், வெளியிடுதல் என்னும் கல்விமுயற் சிகள் விளக்கப்பட்டன.

தமிழிலக்கியத்தில் வள்ளுவரைப் போன்று கல்வியின் சிறப்பினையும், கல்விக் கொள்கைகளையும் குறித்தார் வேறு எவரு மிலர் என்றே கூறலாம். நாத்திகரும் ஏற் கும் வகையில் கடவுள் வாழ்த்துக் கூறும் அவர் கல்வியின் பயனுகக் காண்பது கட வுட் காட்சியேயாகும். பொருட்களுள் சிறந்த பொருளாகக் கண்டதும் கல்விப் பொருளாகும். பொருட்பாலுள் இறை மாட்சியையடுத்துக் கல்வி, கல்லாமை, கேள்வி, அறிவுடைமை என நான்கு அதி காரங்களில் கல்விபற்றிக் கூறுகின்றுர். இவையேயன்றி ''நவில் தொறும் நூல் நயம்'' என்றும் ''அறிதோறு அறியாமை கண்டற்று'' என்றும் ஏனைய இடங்களிலும் கல்வியின் இயல்புபற்றிக் கூறியுள்ளார்.

'கூர்ப்பு, ''பரிணுமவளர்ச்சி'' உள் ளது சிறத்தல்'' என்பதே வள்ளுவர்காட் டும் கல்விக் கோட்பாடுகளுள் ஒன்றுகும்.

''தொட்டனைத் தூறும் மணற்கேணி
மாந்தர்க்குக் கற்றனைத்தூறும் அறிவு''

என்பது ஒரு குறள்மணி. தோண்டிய அளவுநீர் ஊறும்; கற்ற அளவு அறிவு ஊறும். கற்றல் என்பது கல்லுதல் ஆகும். ''கேள்வியால் தோட்கப்பட வேண்டும் செவி'' என்பார் வள்ளுவர். நீருக்கு நிலம் தோட்கப்படுவதுபோலக் கல்விக்குக் களமாகிய நெஞ்சு (இங்கு ஆகுபெயர்) தோட்கப்பட வேண்டும். தோண்டுதல் என்பது முன்னர் குறித்த மனப்பயிற்சியாகும். தோண்டத் தோண்ட நீர் ஊறுவதுபோலப் பயிலப் பயில அறிவு ஊறும் என்பது பொருள். இக்கருத்தினை நாவலர், பாலபாடத்தில் நன்கு விளக்கியுள்ளார்.

நிலத்தினை எவ்வளவு ஆழத்துக்குத் தோண்டுகின்றோமோ, எவ்வளவு அகலத்துக்குத் தோண்டுகின்றோமோ அவ்வளவு ஆழ அகலத்துக்கு நீர் ஊறும். அதுபோல ஒருவன் பெற்ற கல்வியின் ஆழ, அகலமும் அவனின் ஆழ்ந்த பயிற்சி அகன்ற பயிற்சியைப் பொறுத்து ஆழமுடையதாய் அகலமுடையதாய் அமைம். இத்தகைய அறிவினையே ''நுண்மாண் நுழைபுலம்'' என வள்ளுவர் குறிப்பிட்டார்.

அடுத்து நீர் எங்கிருந்து ஊறுகின்றது என்பது வினா. நீர் நிலத்தில் ஊற்றில் இருந்து ஊறுகின்றது. அதுவரை தோண்டிச் செல்ல வேண்டும். அதன்மேலும் தோண்டிச்செல்ல வேண்டும். ஊறும்நீர் நிச்சயமாக வெட்டும் கருவிகளிலிருந்து ஊறுவதில்லை. அதுபோலவே அறிவும் கற்கும் நூல்களாகிய கருவிகளில் இருந்து ஊறுது என்பது வள்ளுவர் கருத்து. எனவே அறிவு ஊறுவது நெஞ்சக்களத்தின் ஊற்றிலிருந்தாகும். ஆதலால் அறிவுஊற்றுவரை தோண்டவேண்டும்; கற்க வேண்டும். அந்த அளவில் நின்றால் ஊற்றளவு நீரே கிடைக்கும். அதன்மேலும் தோண்ட வேண்டும்; தொடர்ந்து கற்க வேண்டும். அந்தத் தொடர்ச்சி இல்லையானால் ''நூறு நாள் பழகி, ஆறு நாள் விடக் கெடும்'' ஆதலால்தான் பிச்சை புகினும் கற்கவேண்டும், பாடை ஏறினும் கற்க வேண்டும் என வற்புறுத்தப்பட்டது.

எனவே அறிவுநீர் மனக்கிணற்றில் இருந்துதான் ஊறுமேதவிர கற்பிக்கும் ஆசிரியனிடமிருந்தோ, கற்கும் நூல்களில் இருந்தோ, கற்கும் மேன்மாடிக் கல்லூரிகளில் இருந்தோ அன்று என்பது வள்ளுவரின் கருத்தாகும்.

சிலகிணறு ஆறுபாகையில் ஊறும். சில அறுபது பாகையில் ஊறும். சில சிறு முயற்சியோடு ஊறும். சிலவற்றிற்கு டைனமெற் வைக்க வேண்டும். அது மணற்பாங்கையும், மனப்பாங்கையும் பொறுத்ததாகும். இத்தகைய முயற்சிக்குப் பின்னும் கல்வி பெருகாது என்பதையும் அதுசிறுகச் சிறுக ஊறும் என்பதையும் நாம் உணர வேண்டும். ஆனால் சிறுகச் சிறுக ஊறிப் பெருநீர் நிலையாகத் தேங்கும்.

இதிலிருந்து கல்வி மாணவனின் மனத்தைக் களனாகக் கொண்டதென்பதும் ஆசிரியர் நூல் முதலியனவெல்லாம் அக்கிணற்றைத் தோண்டும் சூழல் என்பதும் அறிவுநீர் மாணவனிடமிருந்தே ஊறவேண்டும் என்பதும், வள்ளுவர் காலத்துக்கு முன்பே காணப்பட்ட கல்விக்கொள்கையாகும்.

இதுவரை நான் கூறியவற்றிலிருந்து தமிழினமும், தமிழ்மொழியும், தமிழ் இலக்கியமும் மிகத் தொன்மை வாய்ந்தன என்பதும், தமிழ் என்பது முத்தமிழ் மாத்திரமன்று, பரலோகம் பாடும் பத்தி இலக்கியம் மாத்திரம் அன்று என்பதும் இம்மை பயத்தலும் கல்வியின் பேரிலக்காகக் கொண்டு உலகியல் தழுவிய ஆயகலைகள் அறுபத்துநான்குக்கு மேற்பட்டன பயிலப் பட்டனவென்பதும் விஞ்ஞானம் தழுவிய பார்வை தமிழிலக்கியத்தில் பல்கிக் கிடக்கின்றன என்பதும் கல்வி ஒழுக்கமாக மலர வேண்டும் என்பதும் அவ்வொழுக்கத்தை அளக்கப்பட்டதென்பதும் கல்வியின்

முடிந்த பயன் மெய்யுணர்வாற் பெறும் கடவுட் காட்சி என்பதும் கல்வி மாணவனை மாணவனின் நெஞ்சைக் களனாகக் கொண்டதென்பதும் ஆசிரியரும் நூல் முதலியனவும் சூழலாயமைந்து கல்விக்குத் துணை செய்வன என்பதும் கல்வி மனத்தில் இருந்தே ஊறவேண்டுமாதலால் மனப் பயிற்சி என்னும் ஊக்கமுடைமை மாணவப் பண்பென்பதும்

சங்ககால மரபுக் கல்வியிலிருந்து வள்ளுவர் கூறும் கல்வியின் குறிக்கோளையும், தேடுகல்வியில்லாதோர் ஊரைத் தீயினுக்கு இரையாகமடுக்க வேண்டுமென்னும் பாரதி கூற்றையும் கற்பிக்காதோர் கொல்லப்பட வேண்டும் என்னும் பாரதிதாசனையும் நோக்கும்போது கல்வி அரசர்க்கோ ஒரு வருணத்தார்க்கோ, ஒரு குலத்தாருக்கோ தனிமனிதருக்கோ உரியதல்லவென்பதும், அது உலகம் தழுவியது என்பதும் எழுத்தறிவு பெறுவதுதான் கல்வி என்னும் இக்கால இலக்கைக் கொண்டதல்ல என்பதும் பொருளையோ, புகழையோ ஈட்டும் நோக்கங்கொண்டதல்ல தென்பதும், மனித இனந்தழுவிய உலகக் கல்வியே தமிழினத்தின் தமிழிலக்கியத்தின் குறிக்கோள் என்பதும் சுருக்கமாக விளக்கப்பட்டன.

கல்வியினால் ஒருவன் பெறும் ஆளுமையினை ''உரு'' எனத் தொல்காப்பியம் கூறும். பல நல்லியல்புகளால் பெற்ற அகப்புற ஆளுமையைக் குறிக்கும் அருந்தமிழ்ச் சொல்லாகும். இச்சொல்லின் ஓரியல்பு சகிப்புத்தன்மை எனப்படும். ரொலறன்ஸ் ஆகும். மற்றொன்று ஒட்பம் எனப்படும். அக்கமொடேசனாகும். தீதும் நன்றும் உலகியல்பு. தீமையை முற்றாக அழிக்க முடியாது. அதன் தேவை இருக்கும்வரை அது இருந்துகொண்டேயிருக்கும். ஆனால் அத்தீமையை நன்மைக்குப் பயன்படுத்தல் அறிவார் தொழில். இதனை ஆற்றப் பேராளுமை வேண்டும். நஞ்சைக்கண்டு அசுரரும் தேவரும் அஞ்சி ஓடினர். சிவன் அதனை அமுதாக்கினன். அத்தகைய ஆளுமை சிவனுடையது. இத்தகைய ஆளுமையைத் தருவதும் கல்வியே.


விவசாயிகளே !

உங்களுக்குத் தேவையான

- உரவகைகள்
- கிருமி நாசினிகள்

அனைத்திற்கும்

நாடவேண்டிய இடம்:

**எஸ். பி. சாமி அன் கொம்பனி**

193, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.


நவீன டிசைன்களில்

தரமான தங்கப்பவுண் நகைகளுக்கு


**யப்பான் ஜுவலர்ஸ்**

64, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.


தொலைபேசி: 518.




வட்டாரக் கல்வியதிகாரி
திரு. அ, வ. தங்கராசா



திரு.மு.சங்கரப்பிள்ளை அவர்கள்
பாடசாலை அபிவிருத்திச்
சங்கச் செயலாளர்.
1980—1981



'மண்டபம் தந்த மன்னன்'
திரு. த. தம்பிராசா அவர்கள்



திரு, இ. கனகசபாபதி அவர்கள்
செயலாளர்
மலாயா ஊரெழு சேவைச்சங்கம்
1931

# அழியாப் பணி

## திருபதி பொன்னம்மா கிருஷ்ணபிள்ளை

ஊரெழுக் கிராமத்தின் வரலாற்றில் 1931ஆம் ஆண்டு ஒரு பொன்னான காலம். சைவப்பாடசாலை ஒன்று உதயமான காலம் அது. அக இருளை அகற்றி மேன்மை கொள் சைவநீதியை நிலைநிறுத்த அறிவூட்டும் அறிவாலயம் தோற்றம் பெற்ற காரணத்தால் ஆண்டும் மகிமை பெறுகின்றது. கிறிஸ்தவ மிசனறிப் பாடசாலைகள் சமயப் பணியுடன் கல்விப் பணியும் புரிந்து வந்த இக்காலகட்டத்தில் சைவ பாரம்பரியத்துடன் இணைந்த சமயக்கல்வி வளரவேண்டும் என்னும் கருத்து வலியூன்றி சைவப்பாடசாலைகளின் தோற்றத்திற்கு வித்திடப்பட்டது. இவ்வித்து ஊரெழுவிலும் ஊன்றப் பட்ட காலந்தான் அது.

சைவப்பாடசாலை ஒன்று அமைய வேண்டும் என்னும் கருத்து எமது கிராமப் பெரியார்களின் மனதில் உருவானது. சிறப்பாக அக்காலத்தில் மலேசியாவில் உத்தியோகம் பார்த்து இளைப்பாறியவர்களிடமும், உத்தியோகத்தில் இருந்தவர்களிடமும் இக்கருத்து வலுப்பெற்றது. இவர்களின் சிந்தனையின் செயற்பாடே கணேச வித்தியாசாலையின் தோற்றமாகும். பொன்னையும் பொருளையும் போகத்தையும் விரும்பாத அருட் பெரியார்கள் அன்பும் அருளும் அறனும் வேண்டி அழியாப் பணியாக அறிவாலயம் ஒன்றை அமைக்க ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பே ஆரம்பித்தார்கள் என்றால் அவர்களுக்கு நாம் தலைசாய்த்து வணக்கம் செலுத்தாமலிருக்க முடியுமா?

பசளையிட்டுப் பண்படுத்தப்பட்டு வேலியிடப்பட்ட நிலமே வித்துமுளைத்து பயன்தருவதற்குப் வாய்ப்பானது. அது போலவே சைவசமயச் சூழல் இளைஞர்களின் கல்வி வளர்ச்சிக்குப் பாதுகாப்பும் பயனும் உடையது என்பதை உணர்ந்தே இந்நற்கருமம் ஆரம்பிக்கப்பட்டது. தங்கள் சிந்தனையைச் செயலாக்கிய பெரியார்களின் வரிசையில் திருவாளர்கள் தம்பையா, குமாரவேலு, பேரம்பலம், அப்புக்குட்டி, நல்லையா சகோதரர்கள் போன்றோர் குறிப்பிடத்தக்கவர்களாவர். ஊர் மக்களின் ஆலோசனையுடனும் ஆதரவுடனும் திருவாளர் தம்பையா அவர்கள் மலேசியா சென்று அங்கு எமதூர் வாசிகளான திருவாளர்கள் சபாரத்தினம், சீனியப்பா போன்றோருடன் ஒரு சபையை நிறுவி நிதிதிரட்டி வந்து கணேசப் பெருமான் பெயரில் இக்கல்விச் சாலைக்கு அத்திவாரமிட்டார்கள்.

அவர்கள் பாடசாலை அமைப்பாளராக மட்டுமன்றி, தாமே ஆசிரியராகவும் ஊழியராகவும், முகாமையாளராகவும் பொறுப்புக்களை ஏற்று அல்லும் பகலும் அழியாப் பணிபுரிந்து வந்தார். கணேசவித்தியாசாலைக்குக் கருவாக அமைந்த மிசன் பாடசாலையிலும், அண்மையிலுள்ள வேறு பாடசாலைகளிலும் உயர் வகுப்புகளில் கல்விகற்ற மாணவர்களை அழைத்து ஆசிரியர்களாக நியமித்து தாம் எடுத்த கருமத்தைச் செவ்வனே நிறைவு செய்தார்கள். இக்காலத்திலேதான் எம்போன்றவர்களுக்கும் இவ்வாரம்ப பாடசாலையில் ஆசிரியராகக் கடமைபுரியும் வாய்ப்பையும் அவர்கள் வழங்கியிருந்தார்கள்.

எமது கிராமத்தின் நாகரிகம் கணேச வித்தியாசாலையை மையமாகக் கொண்டு வளர்ச்சியடைய வேண்டும் என்பது இப் பாடசாலையைத் தாபித்தவர்களுடைய எண்ணக்கருவாக அமைந்தது. கல்விச் செல்வத்தின் மூலமே ஏனைய எல்லாச் செல்வங்களையும் பெறமுடியும் என்பதைத் தெரிந்திருந்தார்கள். எனவே கணேச வித்தியாசாலையின் கல்வி கிராமச் சிறுவர்களின்

கல்வி அறிவுக்குமட்டுமன்றி, கலைவாழ்க்கைக்கும், கற்பு நெறிக்கும் வழிகாட்ட வேண்டும் என்று விரும்பினுர்கள். கல்வி, கலை, கற்பு ஆகிய மூன்றும் சிறுவர்களிடம் இளமையிலிருந்தே அறிவையும், உணர்வையும், திண்மையையும் வளர்க்க வேண்டும்.

'கல்வி' என்பது 'கல்' என்னும் அடியிலிருந்து தோன்றியது. 'கல்லுதல்' என்ருல் தோண்டுதல் என்பது பொருள். எவ்வளவுக்கு ஆழமாகத் தோண்டுகின்ருேமோ அவ்வளவுக்கு நிலையான, நிரந்தரமனா ஊற்றுப் பெருக்கைப் பெறுகின்ருேம். அதுபோலவே படிக்கப்படிக்க, கேட்கக் கேட்க, ஆராய ஆராய அறிவு வளர்ந்துகொண்டே போகும்.

''தொட்டனைத்தூறும் மணற்கேணி
மாந்தர்க்குக்
கற்றனைத்தூறும் அறிவு''

என்பது வள்ளுவம். எனவே அறியாமையை அகற்றும் கல்வியை, அனைவரும் பெறவேண்டிய அடிப்படைக் கல்வியை எல்லோரும் பெறவேண்டும் என்னும் கொள்கையை முன்வைத்தார்கள் எமது பெரியோர்கள். கட்டாயக்கல்வி என்று சட்டம் வகுத்துக் கல்வியை வளர்க்கும் முன்னரே கல்வியின் அவசியத்தைத் தமது அழியாப் பணியின் மூலம் பரவ வைத்தனர்.

'கலை' என்பதும் 'கல்' என்னும் அடியிலிருந்து தோன்றியதாகும். 'கல்வி' அறிவைக் கொடுக்கின்றது. 'கலை' உணர்வைக் கொடுக்கின்றது. கல்வியினூடாகக் கலையும் கலையினூடாகக் கல்வியும் ஒன்றையொன்று வளர்த்துச் செல்கின்றன. இவை இளமையிலிருந்து வளரவேண்டியன; வளம்பெற வேண்டியன. கல்வியின் உயர் பயன் வாலறிவன் நற்ருள் தொழுதல்; கலையின் உயர் நிலை பக்தி; பக்தியினுல் மேலுணர்வு அதாவது இறையுணர்வு தூண்டப்படுறது; புனிதமாக்கப்படுகிறது. கலையுணர்வின் கனிந்த நிலை ஞானம். இது ஞானக் கண். இதனுலேயே ''கற்ருேர்க்கு மூன்று விழி'' என்பர் ஆன்ருேர். இந்த மேலுணர்வின் தூண்டுதலைப் பெறுவது மிகவும் கடினமானது. மலையுச்சிக்கு ஒரு கல்லைக் கொண்டு செல்வது எவ்வளவு கஷ்டமோ அவ்வளவுக்கு மனிதனின் மேலுணர்வைத் தூண்டுவதும் கஷ்டமானதாகும். மலையுச்சியிலுள்ள கல்லைத் தட்டிவிட்டால் அது கணப்பொழுதில் அடிவாரத்தை வந்தடையும். அதேபோன்று கீழுணர்வுகள் தாமாகவே கிளர்ந்தெழும் தன்மையன. ''விலங்கு மனத்தால் விமலா உனக்கு'' என மணிவாசகர் தொட்டுக்காட்டிய இடமும் சிந்திக்கத்தக்கதாகும். இதனுலேயே இளமையிலிருந்தே சமயச் சூழலுடன் இணைந்த கல்வி விரும்பப்படுகிறது.

கல்வி அறிவும் கலை உணர்வும் கற்பு நெறிக்கு வழிவகுக்கும். கற்பு என்பதும் 'கல்' என்னும் அடியிலிருந்து பிறந்ததே. கற்பு என்பது திண்மையான வாழ்க்கை. ''கற்பெனப்படுவது சொற்றிறம்பாமை' என்பர். இக்கற்புநிலை ஒழுக்கத்தின் உயர்நிலை. 'ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்' என்பது வள்ளுவர் வாக்கு. வள்ளுவர் காட்டிய 'கற்பெனும் திண்மைக்கு அடிநாதமாய் விளங்குவதும் கல்வியே. திண்மை இல்லாத வாழ்க்கை சிதறிய வாழ்க்கையாகும். எனவே கல்வி அறிவுக்கு மட்டுமன்றி ஆன்ம ஈடேற்றத்திற்கும் உயரிய ஒழுக்க நெறிக்கும் உறுதுணையாகின்றது.

கல்வி, கலை, கற்பு என்பன வளர்க்கப்படும் இடம் கல்லூரி அல்லது கலாசாலையெனப்படும். கல்லூரிகளின் வளர்ச்சி கல்வியின் வளர்ச்சியேயன்றிக் கட்டிடத்தின் வளர்ச்சியன்று. கல்வியில் வளர்ச்சி காணுது கட்டிடங்கள் மட்டும் வளர்ச்சி பெறுவதைக் கண்ட பெரியார் ஒருவர்,

''கட்டிடக் கல்வியும் கல்லூரிக் கல்வியும்
பட்டத்துக் கல்வியும் பாழ்''

என மனவேதனையுடன் பாடியிருக்கின்ருர்.

'கல்'லில் தோன்றி, கல்லுவதால் வளர்ந்து கலைமென்மை பெற்று, கற்புத் திண்மை ஓங்கி வாழ்க்கை சிறக்கும் கல்வி வளர, ஆசிரியர்களுடன் பெற்ருேரின் ஒத்துழைப்பும் அவசியமானது. ''வீழ் நாட்படாது நன்ருற்றும் வாழ்நாள் வழியடைக்கும் கல்'' மக்களுக்குத் தேவை. அவ்வாருன வாழ்க்கைக் கல்வி—தொட்டனைத்தூறும் அறிவுக்கல்வியகா வளரவேண்டும். மென்மையழகையூட்டும் கலைக்கல்வியும் திண்மையுரமூட்டும் கற்புக்கல்வியும் மனித

னைக் கல்லாகச் சமைந்துவிடாமல் கல்லும் கல்வியாக, மக்களைப் பக்குவப்படுத்தும் கல்வியாக, சமயக்கல்வியாக அமையவேண்டும். இதுவே எமது அறிவாலயத்தை அமைத்த பெரியார்களின் இலக்காகும்.

இப்பெரியார்களின் நன்னோக்குநன்கே நிறைவேறியுள்ளமையை நாம் இன்று கண்கூடாகக் காண்கின்றோம். இப்பாடசாலையின் ஆரம்பத்தில் அரிவரிபடித்து, அப்பாற்சென்று ஆசிரியராய்ப் பூத்து, அதிபராய்க் காய்த்து, கணேச வித்தியாசாலையின் அதிபராகக் கனிந்து, இன்று பொன்விழாக்காணும் தலைவராக அமர்ந்திருக்கும் திருக்கோலம் மகிழ்ச்சிக்கும், பாராட்டுக்கும் உரியது. ''தாளுண்ட நீரைத் தலையாலேதான் கொடுக்கும்'' தென்னைபோல தான் கற்ற கலாசாலைக்கே தலைவராக விளங்கும் அதிபரின் பெருமை கல்வியின் நோக்கத்திற்கும் இவ்வறிவாலயத்திற்கு அடிக்கல் நாட்டிய பெரியோர்களின் நல்லெண்ணத்திற்கும் இலக்கியமாக அமைந்திருக்கிறது என்பது சிந்தைக்கு விருந்தளிக்கக் கூடியதாகும்.

ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு அரும்பாக முகிழ்த்த இவ்வித்தியாலயம் இன்று ஒரு பெரும் நிழல் விருட்சமாகி மலர்ந்து, மணம்பரப்பி, காய்த்து, கனிந்து இருக்கும் இந்நிலை மேலும் வளர்ச்சி பெற்று கிராமத்து மக்கள் எல்லோரையும் கூவியழைத்து பெருவிழாக்காணும் மகாவித்தியாலயமாகத் திகழவேண்டும் என வாழ்த்துகிறேன்.

# காலைக் கதிரவன்

**பொன்விழாப் போட்டிக் கட்டுரை (கீழ்ப்பிரிவு)**

**சு. சுமதி**

கதிரவன் உதயமாகும் காட்சி மிக அழகானது. இவ்வேளையில் எத்தனையோ நிகழ்ச்சிகள் நிகழ்கின்றன. ஒவ்வொரு உயிரினங்களும் தங்கள் கடமைகளை ஆரம்பிக்கின்றன. ஒவ்வொன்றும் மக்களின் சிந்தனையைத் தூண்டுகின்றன.

காலையில் கதிரவன் கிழக்குத் திசையில் உதயமாகும் பொழுது காகம் காத்திருந்து கரைகின்றது. மேகம் மெல்ல மெல்ல வெளுக்கின்றது. சேவல் சொக்கா நாதா எனச் சொல்கின்றது. செங்கதிரோன் செம்பொற் கிரணங்களை விரிக்கிறான். காலையில் பறவைகள் பள்ளி எழுச்சி பாடுகின்றன. பங்கஜம் பரிதிக்குப் பட்டுக்குடை விரிக்கின்றது. மயில்கள் மகிழ்ச்சியோடு ஆடுகின்றன. குயில்கள் இனிய குரலாற் கூவுகின்றன. வண்டுகள் மலரை வட்டமிடுகின்றன. மதுகரம் மதுவைக் குடித்து மயங்குகின்றது. கோயில் மணியோசை கேட்கிறது. பூசைகள் ஆரம்பமாகின்றன. காலையில் நாங்களும் கண் விழிக்கின்றோம். .....

நாங்கள் காலைக் கடன்களைக் கருத்துடன் செய்கின்றோம். கடவுளை நினைத்துக் கை தொழுகின்றோம், சிறுவராகிய நாங்கள் புத்தகப் பையுடன் பலகலை கற்கப் பள்ளிக்குச் செல்கின்றோம். மாதர்கள் மஞ்சள் குங்குமம் இட்டு மலர்ந்த முகத்துடன் கூட்டிக் கழுவித் தங்கள் மனைகளின் முற்றத்தில் கோலமிடுகின்றார்கள். ஏழைக் கமக்காரன் தனது உணவுக்காக வயலை உழுவதற்கு உழவுக்கலப்பையுடன் வயலை நோக்கிச் செல்கிறான்.

மீனவர்கள் வலையில் அகப்பட்ட மீனினங்களைத் தரையில் இட்டுத் தரம் பிரிக்கிறார்கள். கொள்வனவு செய்பவர்கள் நான் முந்தி நீ முந்தி என்று போட்டி போட்டுக் கொண்டு ஆனைவிலை குதிரைவிலை கேட்கிறார்கள். ஓலைப்பையுடன் ஓடிவந்த முதியவர்கள் ஓட்டம் பிடிக்கிறார்கள்.

கல்வி கற்றுப் பட்டம் பெற்று, பதவிகளை வகிக்கும் வல்லவர்கள் தங்கள் காகிதக் கோவையுடன் கந்தோருக்குச் செல்கிறார்கள். கந்தோர்த் தலைவர் கனிந்த முகத்துடன் கதிரையில் அமர்ந்தவண்ணம் கனிவாக வணக்கம் கூறி வரவேற்கிறார். காலை நேரம் இனிது இனிது என்று மனமார வாழ்த்திக்கொண்டு கடமைகளை மக்கள் கவனமாகச் செய்கிறார்கள்.

# Education and Modern Society

**T. THIRUNAMACHANDRAN,**
*University College London, England.*

It is a great pleasure to contribute to the Jubilee Number commemorating the fiftieth anniversary of the foundation of Urelu Ganesha Vidiyasalai. During the fifty years of the school's existence, the world has witnessed several changes. The history of mankind is, in fact, a string of changes of one kind or another. It is the change that makes a society grow and develop. However, a feature of the present period is that changes are taking place at an ever increasing pace. The inventions of science and technology have led to high speed transport and almost instant telecommunications. They have led to a unification of the world. Geographical and historical boundaries are being broken. Nations are no more remote from each other; they are becoming strongly interdependent. The modern technological advances are one of the prime causes of the rapid changes in the present day society. It is important to recognise this ever increasing change. Failure to do so can lead to serious social and economics consequences.

Man is basically conservative and does not like too many changes. He prefers to preserve things as they are; that helps him to feel secure. However, he is happy to accept changes provided he is allowed sufficient time to adjust to the changes. If changes take place quickly one after another with little or no timə allowed to get adjusted to them, that can create a tension within him, which, in turn, shows up in the society. The health of a society is merely a reflection of the health of the individuals constituting it. The actions of the present generation will decide whether the future of the human race is to prosper or decline. If trained properly, the present generation can ensure both the continuity and prosperity of man. The young of today are the citizens of tomorrow and it is of prime importance to educate them to realize their full potential not only for their own sake but also for the future of mankind.

A satisfactory system of education should be concerned with at least three aspects: insistence on both knowledge and wisdom, development of creativity, discovery of the inner self. Education is not simply gaining knowledge. It is true that acquisition of information and acquiring of technical skill are essential for modern man; but that alone is not education just as much as a pile of stones does not make a house. It is more than the training of the intellect. It is the cultivation of the capacity of understanding and the pursuit of truth.

Nature influences man; but man also influences nature. It is the creative power within him that enables him to transcend nature. All the great achievements - the acts of creation - in art, architecture, music, iterature and science have not been mainly

due to the mastery of nature by man but due to the flights of imagination within him. Education must aim to preserve as well as nourish the creative talent.

The process of education may be compared to the proverbial swan that drinks the milk from a mixture of milk and water, leaving the water behind. It is the process by which the good is conserved and the bad discarded. Many of us for most of the time tend to live on the surface of life and are almost lost in worldly affairs. As a result, our inner development has not kept pace with the outer development. It is essential that at least for part of our time we direct ourselves inwards to discover the spiritual side. We must not allow the material world to dominate the spiritual world. A system of education must give balanced attention to both aspects.

Finally, it is not surprising that the one profession with great influence in the realm of education is teaching. The teacher has a vital role in shaping the future of society as he is in charge of the training of the young. It is a great responibility and hes makes every effort to perform his duties diligently. In this modern age, mass communications such as radio, cinema and the press, though of great value, exert a strong levelling influence on the young, thus diminishing their capacity for independent and original thinking. It is the function of the teacher to preserve and nourish the ability for independent thought in childern. For this the teacher himself must also be a student. By retaining his zest for learning, the teacher can kindle the child's heart and create an enthusiasm for new experience and adventure in knowledge.

In the history of civilization, it is the teacher who has been the transmitter of intellectual knowledge and technical skill from one generation to the next. But, unfortunately, in recent times the teacher has not been given the recognition he deserves, and the best minds have not been attracted to the profession. It is essential that suitable steps are taken to rectify this situation so that tomorrow's citizens can be given the finest training today.

★ ★ ★

## MY VILLAGE

The name of my village is Urelu. It is a small village. About seven miles away from Jaffna. It is surrounded on the east by Neervely, on the north by Punnalaikkadduvan, on the west by Chunnakam, and on the south by Urumparai.

The people of my village are fortunate, because they are very near the Chunnakam Railway Station and Chunnakam market. The people of my village are find it very convenient to travel by bus, Because we find buses plying through our village every now and then.

Most of my villagers are hard-working. They are work in their garden from dawn to dusk. They have no time to engage anti-social activties. Hence our village is trouble free.

Our villagers are generally speaking their religious minded. There are three temples which satisfy spiritual needs. Theɹe are two school which help remove the darkness of ignorance. Generation and keep the tourch of learning ever burning. There is a Sub-post office which saves our village in small ways.

In the light of what has been said above, it is no exggeration. Our villeag is a pradise on Earth.

K. VASANTHI

# பொன் விழாப் பொலிந்து வாழி!

தாயினும் நல்ல தண்ணளி உடையோன்
சேயினும் இனியன் செந்தமிழ் ஈழம்
காண்கிலன் மறைந்தோன் கதிரவேற் பிள்ளை
மாண்பினைப் போற்றும் மாபெருந் தொகுதி,
ஈழமா நாடும் இனிய யாழ்ப் பதியும்
தோழமை கொள்ளும் தொல்பெருந் தொகுதி,
நூயநற் கோப்பாய்த் தொகுதியில் துலங்கிடு
ஊரெழு வான வுயர் கிராமத்தை
விளக்கிடு கணேச வித்தியா சாலை
அளப்பரும் ஆண்டு ஐம்பது கண்டு
பொன்விழாப் பூக்கும் புனிதநன் நாளில்,
அன்புடன் பணிசெய் அதிப ரறுவர்
ஆற்றிய சேவை அணிசெயக் கண்டோம்.
தம்பை யாவெனும் தகவுடை யோரும்
கந்தை யாவெனும் கனமுடை யோனும்
சிறப்புடை இராச சிங்கமென் போரும்
சிவக்கொழுந் தென்னும் செம்மலு மிடையே
தற்காலி கமாய்த் திருமதி தருமரும்
துரைராசா வெனும் தோன்றலும் ஆவர்.
நடைமுறை அதிபராய் நாளும் பொழுதும்
கடமையில் கண்ணும் கருத்துமாய் வாழும்
கதிரவேல் அவர்கள் காலத் தெழுந்த
பொன்விழா வாழி! பொன்விழா வெடுத்த
சங்கமும் சபையும் சால்புடை யோரும்
அல்லும் பகலும் அரும்பெறற் கல்வியை
வெல்லும் மாணவச் செல்வர்க்கு வழங்கிய
ஆசிரியப் பெருந்தகை அனைவரும் வாழி!
ஆரம் பத்தில் ஆறும் வகுப்பு
அதுவரை யிருந்த அருமைப் பள்ளி
குறைபல நீத்துக் குறுநடை போட்டு
நிறைபல கண்டு நிமிர்ந்தே வளர்ந்து
கபொத வரை கல்வி பயிலும்
கல்விக் கூடமாய்க் கணிப்பும் பெற்று,
நம்பி என்று நல்லோர் போற்றும்
தம்பி ராசாவின் தயைமிகு கொடையால்
பாலர் மண்டபம் பாங்குடன் திகழ

கிராமத் துறுபயன் கிருஷ்ண பிள்ளையும்
கணக்கா ளராகிக் கணிப்புறு பெரியார்
முத்து வேலுவின் முழும்னப் பாங்கும்
முதலியார் பெற்ற ஜெய ராசாவின்
இதயத் தொன்றிய இன்ப நினைவும்
பேரம் பலத்தின் பெருங்கொடைத் திறனும்
நாகரத்தின நல்லோன் ஒளியும்
மகேந்திர னேடு மருவி யாங்கண்
ஏற்ற மளித்து எழில்பல சேர்த்து
பொன் விழாக் காணும் பொலிவினைப் பெற்று
ஊரினை உயர்த்தி உவப்பினை யளிக்கும்,
பேரொளிப் பிழம்பே ! பெருமான் அருளால்
பல்லாண்டு காலம் பயன்தர வாழி
நல்லோர் வாழ்த்த நாளும் வாழி
எல்லா நலனும் இசையப் பெற்றே.

---


யாழ்ப்பாணத்தில் ஒட்டுப்பலகைக்
கூட்டுத்தாபனத்தின் விநியோகஸ்தர்களாக எம்மை
அறிமுகம் செய்து வைப்பதில் பெருமை அடைகின்றேம்.

உங்களது தேவைகளான:

- சிப்போட் (Chip Board)
- ஒட்டுப்பலகைக் கதவுகள் Ply Wood Doors)
- ஒட்டுப்பலகைத் துண்டுகள் (Ply Wood Boards)
- கதவு நிலைகள் (Door Frams)

**ராம்சன்ஸ் காட்வெயர் ஸ்ரோஸ்**

19, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

# துள்ளித் திரியும் பள்ளிப் பருவம்

சி. வளர்மதி — மத்திய பிரிவு

மனிதப்பிறப்பு கிடைத்தற்கரியது. மனிதப்பிறப்பின் சிறப்பைப் பற்றி ஔவைப் பாட்டி அருமையாகப் பாடியுள்ளார். குறைபாடுகள் இல்லாமல் பிறந்தால் போதாது. நிறைவுகளுடன் வாழவும் புண்ணியம் செய்திருக்க வேண்டும்.

''புத்தகப் பையுடன்
நத்தை போல் ஊர்ந்து
மினுங்கிய வதனம், சிணுங்கிச் சிணுங்கி,
காலைப்பொழுதில்
கல்விக் கழகம் மெள்ளச் செல்லும்
பள்ளிப்பிள்ளை''

எனப் புலவர் ஒருவர் படம் பிடித்துக் காட்டுகிருர்.

குழந்தை தொடங்கி வயோதிபம் வரை சில சில குணங்கள் மேம்பட்டு நிற்பினும், துள்ளித்திரியும் பள்ளிப்பருவம் மிகக் கவர்ச்சியானது. பெற்ரோர்களினதும் ஆசிரியர்களினதும் அன்பினுல் அமைவது. கஷ்ட நட்டம் அறியாதது. இலாப நட்டம் தெரியாதது. இன்பமானது.

குழந்தையின் செல்லப் பேச்சிலே மயங்கிய பெற்ருர், பிள்ளையைப் பாடசாலைக்கு அனுப்ப வேண்டும் என்ற எண்ணம் வந்ததும், ஏடு தொடக்கி பள்ளிக்கு அனுப்ப விரும்புவர். அனுப்பினுல், சிறிது நேரத்திற்குக் குழந்தையின் கிளிப்பேச்சைக் கேட்க முடியாதென்றும், குழந்தை பிசைந்து உண்ட மிகுதியை உண்ண முடியவில்லையே என்றும் கவலைப்பட்டாலும், பிரிவைத் தாங்கி வாடும் பெற்ரோர், குழந்தையைப் பாடசாலைக்கு அனுப்பத் தவருர்.

சீருடை அணிந்து. புத்தகப் பையை ஒரு தோளிலும், தண்ணீர்ப் போத்தலை மறு தோளிலும் போட்டுக் கொண்டு, துள்ளு நடையிலே பள்ளிக்குச் செல்லும் தன் செல்வத்தைப் பின் நின்று பார்க்கும் தாய், அந்தக் காட்சியைத் தகப்பனுக்குக் காட்டுவாள். குழந்தை பாடசாலையில் துள்ளிக் குதிக்கிறது. தன்னையே மறந்து விடுகிறது. ஒரே கூட்டம். ஒரே சத்தம். ஒரே விளையாட்டு. வயது வளர்ந்தாலும், வகுப்பு வளர்ந்தாலும் பள்ளிப்பிள்ளை பள்ளிப்பிள்ளை தான். துள்ளல் துள்ளல் தான். கூத்து கூத்து தான்.

பாடசாலைக்குப் போன குழந்தை திரும்பும் நேரத்துக்கு முந்தியே தாய் பாடசாலைக்குப் போய் வழிமேல் விழி வைத்துக் கொண்டிருப்பாள். குழந்தையை அள்ளி அணைத்துக்கழுவித் துடைத்து உணவூட்டுவாள். பிள்ளை வளர்ந்தாலும் தாயும் பிள்ளையும் இப்படித்தான். வீட்டுக்கு வந்த குழந்தை கழுவின கை காய முந்தி 'அம்மா நான் விளையாடப்போறேன்' என்று தொடங்குகிறது. தாயும் 'ஓடி விளையாடு பாப்பா' என்று சொல்லி அனுப்பி வைக்கிருள்.

எத்தனை வகுப்புகள் மேலே மேலே போனுலும், பள்ளிப்பருவத்தின் உணர்வுகளும் துடிப்புகளும் ஒன்றுதான். வீட்டில் எவ்வளவு தான் வளர்ந்தாலும் நாம் பெற்ரோரின் பிள்ளைகள் தான். பாடசாலையிலும் ஆசிரியர்களின் மாணவர்களே. பள்ளிக் கூடம் வந்தால் பொழுது போவது தெரியாது. பாடசாலையை விட்டால்தான், உங்களுக்கு அருமை தெரியும் என்று ஆசிரியர் அடிக்கடி சொல்லுவார். அப்படித்தான் பள்ளியை விட்டவர்களும் சொல்கிருர்கள்.

# 'ஆசா நிகளம்'

ச. கதிரவேலு, B. A.

ஆசை நடாத்தும் திருக்கூத்துகள் அனந்தம், தன் ஆசை முழுவதும் நிறைவேறிவிட்டதாக அமைதியாக இறந்தவர்கள் இல்லை. ஆசை அடுக்கடுக்காக வளர்ந்து செல்கிறது. வயதுக்கும் காலத்துக்கும் தக்கமாதிரி ஆசை மாறுகிறது, அவ்வளவுதான்.

ஆசை முதலில் உள்ளத்தைக் கெடுக்கிறது. பிறகு உடலையே கெடுக்கிறது. மனக் குரங்கை வைத்து ஆட்டிக்கொண்டிருக்கிறது.

பெரிய ஞானிகள், மகான்கள், சித்தர்கள் எல்லோரும் இந்த ஆசையைப் பிடி, வெட்டு, குத்து, அறு என்றுதான் சொல்கிறார்கள். ஆசையை நல்லவழியில் செலுத்து; அதை இறைவனிடத்திலே கொண்டுபோய்விடு என்றெல்லாம் பேசுகிறார்கள். சொன்னால் சரியா? இது என்ன இலகுவான காரியமா?

" பத்தா, ஒரேயொரு வரம் மாத்திரம் கேள் " என்று அனுமதி கிடைத்தபோது, பேரப்பிள்ளையைக்கண்ட விழுகிழவர் கேட்ட வரமென்ன? " எனது கொப்பாட்டப்பிள்ளை ஏழுமாடத்து நடுமாடத்து நிலாமுற்றத்தில் இருந்து, பொற்கிண்ணத்தில் பால் பருகுவதை நான் என் கண்ணால் பார்த்து, வாயார வாழ்த்தவேண்டும்" என்பதாகும்.

வளமான வயல்நிலத்தை மன்னர் ஒருவர் காட்டி, " இந்த நிலத்தில் ஒருவன் எவ்வளவு தூரம் சுற்றி ஓடிவருகிறானோ அவ்வளவு நிலமும் அவனுக்கே" என்று அறிவித்தார். மனிதன் ஒருவன் ஓடினான், ஓடினான், ஓடிக்கொண்டேயிருந்தான். அவன் மனத்து ஆசை கரைகாணவில்லை. ஓட்டம்மாத்திரம் கரைகண்டது. அம்மனிதன் மண்ணில் விழுந்தான்; மரணத்தைத் தழுவினான். இந்தக் கதையைமுடித்த கதாசிரியன், 'இனி அந்த மனிதனுக்கு அவ்வளவு நிலம் தேவையில்லை; ஒரு ஆறுஅடி மண் போதும்' என முடிக்கிறான்.

நாங்கள் படித்த நாட்டுக்கதைகளும் புராணக்கதைகளும் சொல்வதுதான் என்ன?

பொற்காப்புக்கு ஆசைப்பட்ட பிராமணனைப் புலி தின்றது.
மான் இறைச்சியைத் தின்னக் காத்திருந்த நரி தன் உயிரை இழந்தது.
நித்திய வரம்பெறச் சென்ற கும்பகர்ணன் நித்திரை வரம்பெற்றான்.

கதைக்குப் போகத் தேவையில்லை. இதன் விளையாட்டைக் கண்முன்னே தினமும் காண்கிறோம்,

ஆசை அழிவுப்பாதையின் ஆரம்பம் மாத்திரமன்று; முடிவும் அதுவே. ஆசை வயப்பட்டவனுக்கு நிம்மதியேயில்லை; அமைதியில்லை; வாழ்வேயில்லை. எனவேதான், இந்த ஆசைக்கெதிராகப் போர்க்கொடி உயர்த்துகிறார்கள்.

யுத்தகளத்திலே வைத்து உபதேசம் செய்த பரந்தாமன், ஆசை ஒன்றினை வழிப்படுத்திய ஆன்மா, ஈஸ்வரனுகுமாற்றை ஒரு ஸ்லோகத்திலேயே உபதேசித்துவிடுகிறார்.

''யாருடைய மனம் எதைக்கண்டும் ஆசைப்படாமல், அதிர்ச்சியடையாமல் இருக்குமோ அந்த மனத்துக்குச் சொந்தக்காரர்கள் இந்தப் பிறவியிலே பிறப்பு இறப்பு இரண்டையும் வென்றுவிடுகிறார்கள். அதனால் எங்கும் சமமாக இருக்கும் ஈஸ்வரனைப்போல, அவர்களுக்கும் கிடைத்துவிட்டது, சமநோக்கு. அதனால் அவர்களும் ஈஸ்வரனும் ஒன்றே

பகவத் கீதை — சந்யாசியோகம் 19

அவா அறுத்தல் என்று ஒரு அதிகாரத்தையே அமைத்து, 'அவா என்பது எல்லா உயிர்கட்கும், எக்காலத்தும் கெடாது வருகின்ற வித்து' என பிறப்புக்குக் காரணம் கூறியவர், அவாவே துன்பத்திற்குக் காரணமென்பதை இடித்துரைக்கின்றார், இறுதிக்குறளில்.

''ஆரா இயற்கை அவா நீப்பின் அந்நிலையே
பேரா இயற்கை தரும்''

எனக்கூறி, அவாவை அறுத்தவர் இறைவனாகின்ற இயற்கையை எடுத்துகூறி விடுகிறார் வள்ளுவர்.

''பற்றுங்கவை அற்றீர் பற்றும் பற்றுங்கது பற்றி
நற்றுங்கதி அடைவோம் எனில் கெடுவீர் ஓடிவம்மின்.....''

என அழைத்த மணிவாசகப் பெருமான், தனது ஐந்து ஆசைகளும் எவை என்பதை ஆசைப்பத்தில் அழகுறக் கூறுகின்றார்.

இறைவனைக் காணவேண்டும்; தம்மைக்கண்டு இறைவன் இரங்கவேண்டும்; இறைவன் அருளைத் தாம் பெற்றுக்கொள்ள வேண்டும்; பரவி ஏத்தவேண்டும்; ஏத்திய மெழுகொப்ப உருகவேண்டும் என ஆசைப்படுகின்றார். தனது ஆசையை — புருஷார்த்தங்களை இறைவழியில் வளர்த்துச் செல்கின்றார் மணிமொழியார்.

ஆசைப்பத்தின் பத்தாவது பாட்டில், மங்கையர் கண்ணால் வெகுளும் வெகுளியிற் பட்டு நைந்து துணையொன்றும் காண்கிலேனை அஞ்சேல், என்று நீ சொல்ல ஆசைப்பட்டேன் என்று உருகிப்பாடுகிறார்.

''வெஞ்சேல் அனைய கண்ணார் தம்
வெகுளி வலையில் அகப்பட்டு
நைஞ்சேன் நாயேன் ஞானச்
சுடரே நான்ஓர் துணை காணேன்
பஞ்சேர் அடியாள் பாகத்(து)
ஒருவர் பவளத் திருவாயால்
அஞ்சேல் என்ன ஆசைப்
பட்டேன் கண்டாய் அம்மானே.''

இவ்வாறு தனது ஆசைகளைப் பச்சையாகச்சொல்லி விடுகிறார், மணிவாசகர். ஆனால், இறைவனோடும் ஆசை வைத்துக் கொள்ளலாகாது. அது மேலும் துன்பத்தை வளர்க்கக் கூடியது என வலியுறுத்துகின்ற திருமந்திர ஆசிரியர்,

''ஆசையறுமின்கள் ஆசையறுமின்கள்
ஈசனோடாயினும் ஆசையறுமின்கள்
ஆசைப்படப்பட ஆய்வரும் துன்பங்கள்
ஆசை விடவிட ஆனந்தமாமே''

என, ஆசையை வீட்டால்தான் ஆனந்தத்தை அடையலாம் என்பதையே வலியுறுத்துகின்றார்.

திருமூலர் சொல்லும் கீழ்க்காணும் கருத்துக்கள் மிகவும் நுணுக்கமானவையாகும்.

''வேதாந்தங் கேட்க விரும்பிய வேதியர்
வேதாந்தங் கேட்டும் தம் வேட்கை ஒழிந்திலர்
வேதாந்தமாவது வேட்கை ஒழிந்திடம்
வேதாந்தங் கேட்டவர் வேட்கை விட்டாரே'' — திருமந்திரம்

''வேட்கை விடுநெறி வேதாந்தமாதலால்
வேட்கைப் புலன்வழி மாற்றிச் சித்தாந்தத்து
வேட்கை விடுமிக்க வேதாந்த பாதமே
தாழ்க்கும் தலையினேன் சற்சீடனுமே'' — திருமந்திரம்

கடவுளைக் காணமுயன்ற பக்தர்கள் மாத்திரமல்ல, கடவுளைக்கண்டு தெளிந்தவர்கள் என்று சொல்லப்படுகின்ற சித்தர்கள்கூட ஆசை அகற்றப்பட வேண்டுமென்றே பாடுகின்றனர்கள்.

''ஆசையற்றவிடம் ஆசாரங் கண்டாயே
ஈசன் பாசமடி எங்ஙனஞ் சென்றாலும்.'' —அகப்பேய்ச் சித்தர்

''மூவாசை விட்டோமென்றே தும்பீ — பர
முத்திநிலை சித்தியென்றே தும்பீ பற
தேவாசை வைத்தோமென்று தும்பீ பற — இந்தச்
செகத்தையொழித்தோமென்று தும்பீ பற''
— இடைக்காட்டுச் சித்தர்

''ஆசையான ஐவரையடக்கி ஓரெழுத்தில்
பேசிடாது இருப்பீரேல் நாதன்வந்து பேசுமே'' – சிவவாக்கியர்

இவர்கள் எல்லோரும் பேசுவது ஆசையை அடக்கு; இறைவன் உன்பக்கம் என்பதே.

துறந்து ஓடிய பட்டினத்தாரின் முறையீடு மேலும் புதுமையானது.

மண்ணாசைப் பட்டேனை மண்ணுண்டு போட்டுதடா
பொன்னாசை பெண்ணாசை போகேனே என்குதே.''

''மக்கள் சுற்றத்தாசை மறக்கேனே என்குதே
சித்து கற்குமாசை சிதையேனே என்குதே''
— பட்டினத்தார் பாடல்

''பொன்னை மாதரைப் பூமியை நாடிடேன்''

என்றுதானே தாயுமானவரும் கதறுகிறார்.

''பொன்னில் மாதராசை பொருந்தினர்
பொருந்தார் உள்ளம்''

என்கிறது கைவல்ய நவநீதம்.

ஆசையே துன்பத்துக்குக் காரணம் என்பதுதானே புத்தபகவான் வாக்கு.

பிழையையும் சரியையும் தன் வாழ்க்கையில் கண்டறிந்த அருணகிரியார்

''ஆசா நிகளம் துகளாயினபின்
பேசா அநுபூதி பிறந்ததுவே''

என ஆசைச் சங்கிலி சுக்குநூறான பின்புதான் உண்மையான இறையனுபவம் ஏற்படும் என்பதை எடுத்துக் காட்டுகின்றார்.

அரவிந்தரின் பஜகோவிந்த ஸ்லோகங்களில் ஒன்றின் தமிழாக்கத்தைப் பாடிய பின்பாவது ஆசைபற்றி எழுதும் எனது ஆசை அறுகிறதா பார்ப்போம்.

'' சொந்தமிது சொந்தமென
சொத்து சுகம் சேர்த்துவிட
தொலையாதெழுந்த மோகம்
தொத்திவரும் நோயதனைப்
புத்திவழி வெல்லுவது
தூயவர்கள் செய்யும் யாகம்

சந்ததமும் பாடுபடு
வந்தவரை நிம்மதிகொள்
தங்குவது தெய்வயோகம்.
தத்துவம் இதற்குள் ஒரு
தன்னமைதி தோன்றிவிடும்
சாகும்வரை இன்பராகம்

அந்தமில்லை ஆதியில்லை
என்றபடி நின்றுலவும்
அண்ணலடி பற்றுதினமே
ஐயனவன் மெய்யனவன்
ஆயர்குல நேயனவன்
அன்னவனைப் பாடு மனமே. — பஜகோவிந்தம்.


இப்படிப் பார்த்துப் பார்த்துப் பாடிக்கொண்டே போகலாம். ஆயினும் ஆசையை வெற்றிகொண்ட சீவன் முத்தர்களை நாம் கண்ணால் காணுமலும் இல்லை.

ஆசா நிகளத்தைத் துகளாக்கிய கோண்டாவில் குடைச் சுவாமிகளாகிய தவத்திரு கந்தையா சுவாமிகளை எல்லிலர் கண்டிருப்பார்கள். அவர்களைக் கண்ணாலன்றி மனத்தாலும் கண்டால் ஆசைச் சங்கிலியின் ஒரு குண்டாவது அறுந்துவிழும். இப்படிப் பலர்.

இந்த ஆசைச் சங்கிலியை அறுத்தெறிந்து, வேதாந்த சித்தாந்த சமரசங்கண்ட எல்லாம் வல்ல பரம்பொருளை அடைவதே எமது குறிக்கோளாகும்.

''பாசக் கடற்குளே வீழாமல் பரிசுத்த நிலையருள்வாய்
பார்க்குமிடமெங்கணும் நீக்கமற நிறைகின்ற பரிபூரணனந்தமே.''

---



இல்ல விளையாட்டுப் போட்டி
கொடியேற்றல்
1980



மாணவி
செல்வி கவிதாலோகநாயகம்
புதிய கட்டிடத்
திறப்புவிழாவின்போது
அளித்தபரதம்
1980

# நன்றி நாகரிகம்

— திருமதி. பு. வைத்திலிங்கம் —

ஊரெழுவின் வரலாற்றில் 1931-ம் ஆண்டுக்கு ஒரு தனி இடம். அது பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட்ட ஆண்டு. அறிவுக்கண் திறக்க, சைவ ஆலயம் அமைக்கப்பட்ட காலம். அந்த வருஷத்தில்தான் ஊரெழு 'முல்லைக்கட்டை' யில் கணேசா முகை கொண்டு நறுமணம் வீச ஆரம்பித்தது.

''கல்லார் நெஞ்சில் நில்லான் ஈசன்'' என்ற பேருண்மையை, அரை நூற்றுண்டு காலத்துக்கு முன்பு பொதுப்பணியில் ஈடுபட்டிருந்த எம்மூர்ப் பெரியார்கள் அறிந்திருந்தனர். சிவசமயச் சூழலில் சிறந்த கல்வித் தானம் அளிக்க விரும்பிய ஊரெழு சைவ வாலிபர் சங்கம் சைவப் பாடசாலை அமைக்கும் நற்பணியில் தமது கவனத்தைச் செலுத்தியது. இந்த முயற்சியை நிறைவேற்றுவதற்காக 5-4-1930ல் 9உறுப்பினர் கொண்ட குழு ஒன்று அமைக்கப்பட்டது. திருவாளர் K. V. பொன்னுத்துரை அவர்கள் வாலிபர் சங்கத்தின் செயலாளராகக் கடமையாற்றினர். 1930 சித்திரை 23-ம் திகதி சித்திரா பூரணை தினத்தன்று வித்தியாரம்பம் செய்துவைக்கப்பட்டது. திருவாளர் சிற்றம்பலம் வீடு இப்பெருமுயற்சிக்கு இடமாக அமைந்தது.

சைவப் பாடசாலைகள் ஏராளமாக முளைகொண்ட காலம் அது. அந்த நேரத்தில் பாடசாலைக் கட்டிடங்கள், தளபாடங்கள் எப்படி அமையவேண்டுமென்ற சட்டங்களும் வகுக்கப்பட்டுவிட்டன. இதற்கு வசதியாக, 1930-6-12ல் பாடசாலை திரு. வி. வீரவாகு அவர்களின் இல்லத்திற்கு இடம் பெயர்ந்தது. ஆயினும் பாடசாலையைப் பதிவுசெய்து, அரசினரின் நன்கொடையைப் பெறுவதற்குச், சட்டதிட்டங்களுக்கு அமைவான கட்டிடம் அவசியமாயிற்று. பொதுப் பணம் சேர்த்துப் பாடசாலை அமைக்கக் காலம் பிந்தும் என்ற காரணத்தால் இயக்கம், பாடசாலைக்கு வேண்டிய பணத்தைக் கடனுகவே பெற்றுப் பாடசாலையைக் கட்டியது. இக்காலத்தில் சங்கம் ''கணேச வித்தியாசாலையும் வித்தியா தர்மமும்'' என்னும் துண்டுப்பிரசுரத்தை வெளியிட்டு, ஊரிலும் மலேசியாவிலும் உதவி கோரியதை அறிய முடிகிறது. இம்மகத்தான காரியத்தை நிறைவேற்றுவதில் உழைத்த பெரியார்களில் V. R. தம்பையா முதல்வராவர். இவர்கள் மலேசியா சென்று நிதி திரட்டி வந்து வித்தியாசாலைப் பணியைத் திருப்திகரமாக நிறைவேற்றினர். ஊரெழு சைவ வாலிபர் சங்கத்தின் வேண்டுதலுக்கு ஏற்ப, அக்காலத்தில் மலேசியாவிலுள்ள ஊரெழு மக்கள், ''மலாயா ஊரெழு சேவா சங்கம்'' என்ற அமைப்பொன்றை ஏற்படுத்தி, தமது தாய் நாட்டில் வித்தியாசாலையை நிறுவுவதற்குக் காசு கண்டுபிடிக்கும் முயற்சியில் ஈடுபட்டனர். இந்தச் சபையில் திருவாளர் A. R, சபாரத்தினம் அவர்கள் தலைவராகவும், திரு. இ. கனகசபாபதி அவர்கள் செயலாளராகவும், V. V. சாமுவேல், C. சீனியப்பா, V. தம்பையா, K. முத்துத்தம்பி, C. சரவணமுத்து, V. சீனியப்பா என்போர் காரியக்குழு உறுப்பினராகம், P. கனகசபை, S. சின்னத்துரை என்போர் கணக்குப் பரிசோதகர்களாகவும் கடமையாற்றிபுள்ளார்கள். 1931-2-9ல் கணேச வித்தியாசாலைப் புதிய கட்டிடத் திறப்புவிழா கோலாகலமாக நடைபெற்றது. திரு. சி. தம்பித்துரை அவர்கள் கணேச வித்தியாசாலையின் நிர்வாகக் காரியதரிசியாவர்.

அரை நூற்றுண்டு காலத்துக்கு முன்பு அரும்பிய கல்வி அரும்பு முகையாகி, மொட்டாகி, போதாகிப், பூவாகி, பூத்து மலர்ந்து,

அறிவுத் தேன் சொட்டும் பொன்மலராக மணங்கமழும் இன்றைய நிலைக்கு, சைவ வாலிபர் சங்கத்தின் சார்பில் உழைத்த பெரியார்களும், மலேசியப் பெரியார்களும் காரணகர்த்தாக்களாக இருந்துள்ளனர். மலாயாவில் இருந்து அடிக்கடி லீவில் வந்த திருவாளர்கள் சு. ஐயாத்துரை, இ. கந்தையா, க. பேரம்பலம், வ. துரையப்பா, பு. முத்துத்தம்பி ஆதியோர் இவ்வியக்கத்திற்கு உறுதுணையாகச் சேவையாற்றியுள்ளனர்.

பாடசாலையை நிறுவுவதில் முன்னின்றுழைத்த திரு. தம்பையா அவர்கள் இப்பாடசாலையின் பிரதம நிர்வாகியாகவும் சில காலம் அதிபராகவும் கடமையாற்றியுள்ளார். அவர்கள் ஒரு பயிற்றப்பட்ட ஆசிரியராவர். அவர்களது சேவை அளப்பரியது.

ஐம்பது ஆண்டுகளுக்கு முன், இந்தப் பொரியார்களும், ஊரெழு மக்களும், சிந்திய வியர்வையும், எடுத்த முயற்சியும் கணேச வித்தியாசாலையாக மலர்ந்து அறிவொளி அளிக்கின்றது.

ஊரெழு கிராம மக்களின் உயர்நிலைக்கு உயிரான, இப்பாடசாலையைத் தாபித்த பெரியார்களின் திருவடிகளுக்கு, நன்றி மலர் தூவி அஞ்சலி செய்யவேண்டியது நம் கடனாகும்.

ஊரெழு மக்கள் நன்றி பாராட்டும் நாகரிகமுடைய சமுதாயத்தினர் என்பதை எதிர்காலச் சந்ததியினருக்கும் எடுத்துக் காட்டுவதற்காகவே இன்றைய பொன்விழா.

நன்றி.


# யசோதா ஸ்ரோர்ஸ்

எம்மிடம்
கோயில் அபிஷேகத் திரவியம்
வீடு குடிபுகுதல்
கிரிகைச் சாமான்கள்
பலசரக்கு வகைகள்
சாய்ப்புச் சாமான்கள் முதலியன
சகாய விலையில்
பெற்றுக்கொள்ளலாம்.

உரிமையாளர் :

**ச. மருதலிங்கம்**

பலசரக்கு வியாபாரம்,
தெற்கு மார்க்கட்,
சுன்னுகம்.

குளிர்பான வகைகள்
சிற்றுண்டி வகைகள்
சிவாஸ் பீடா
வகைகளுக்கு
இன்றே விஜயம் செய்யுச்கள்

# சிவாஸ் கோப்பி
# ரீ அன் கூல் பார்

54, கே. கே. எஸ். வீதி,
சுன்னுகம்.

அன்பளிப்பு

# வேலழகன் தொழிற்சாலை

# *Velalagan Workshop*

இரும்பு கடைதல், வெல்டிங், கேற், கிறில்,

மருந்து தெளிக்கும் கருவிகள்,

கதவுக் குமிழிகள்

உற்பத்தியாளரும் — விற்பனையாளர்களும்.

K. K. S. Road,
Chunnakam.

காங்கேசன் துறை வீதி,
சுன்னுகம்.

SITHY VINAYAGAR
EARLALAI WEST
CHUNNAKAM
LIBRARY

# S. S. WILSON & Co.

IMPORTERS & EXPORTERS

*Telegrams:*
"GRATITUDE"

*Telephone:*
27662

176, FOURTH CROSS STREET,
COLOMBO—11



The Best Compliments of

# Hanso Hardware House

42, CLOCK TOWER ROAD,
JAFFNA.

*Tel:* 766

*The Best Compliments*

*of*

# HOPE CENTRE

NO. 8, 1ST LANE,

PALALY ROAD, JAFFNA.

*1981, August, December O / L Classes*

**MATHS, SCIENCE, TAMIL & ENGLISH**

---

# RAJGOPALS

*SPECIALIST IN*

**WEDDING SAREES**

*AND ALL OTHER REQUIREMENTS IN*

## TEXTILES

**47, GRAND BAZAAR, JAFFNA.**

PHONE : 7168 & 7525

GRAMS : "RAJCO" Jaffna.

*PLEASE CALL US FOR YOUR REQUIREMENTS OF*

- VESPA & ALL LAMBRETTA SCOOTERS
- SUZUKI MOTOR CYCLES
- IZUZU, TATA & B. M. C.

**MOTOR SPARES**

*AND ALL KINDS OF BICYCLES*

# S. SINNADURAI & Co.

25, STANLEY ROAD, JAFFNA.

Telephone : **7357**

சி. எஸ். கணபதிப்பிள்ளை

அன் சன்ஸ்

மருந்துச் சரக்கு

வியாபாரம்

51, கே. கே. எஸ். வீதி,

யாழ்ப்பாணம்.

*Space Donated by*

## VASANTHA MOTOR MART

*DEALERS IN SPARES FOR :*

HONDA MOTOR BIKES

LAMBRETTA, VESPA

SCOOTERS &

VILLIERS WATER PUMPS

250, (44) STANLEY ROAD,

JAFFNA.

# WELIGAMA STORES

GENERAL MERCHANTS AND COMMISSION AGENTS

விளைபொருட்களின் கமிசன் விற்பனையாளர்

193, 4th Cross Street,
COLOMBO — 11

139, 4-ம் குறுக்குத் தெரு,
கொழும்பு — 11



## தரமான புடைவைகளுக்கு நம்பிக்கையான இடம்

# குறாஸ் ரெக்ஸ்ரைல்ஸ்

இல. 2, மத்திய சந்தை,
சுன்னுகம்.

# அண்ணு கோப்பி

100% சுத்தமானது, மனோரம்மியமானது

நறுமணத்துடன் கூடியது,

சுவை குன்ருதது.

# அண்ணு தொழிலகம்

இணுவில்.

கிளைகள் :

4, நவீன சந்தை
யாழ்ப்பாணம்.

1, மத்திய சந்தை,
சுன்னுகம்.

தொலைபேசி: 7413

---

# லீலா ஸ்டோர்ஸ்

கே. கே. எஸ் ரோட், சுன்னுகம்.

திறம் புகையிலை
"லீலா" சுருட்டு
உரவகைகள்
கோழித்தீன்
"லீலா" அரிசி

மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

# LEELA STORES

K. K. S. ROAD, CHUNNAKAM.

# T. S. P. & COY.

General Merchants & Commission Agents

FOR LOCAL PRODUCES

உங்கள் உற்பத்திப் பொருட்களுக்குச்

சிறந்த விலையைப் பெற்றுத்தர வேண்டுமா?

108, 4ம் குறுக்குத் தெரு,
கொழும்பு.

108, 4th Cross Street,
COLOMBO.

With the Best Compliments

of

# THARMAS PHOTO

FILMING ON T. V. BY THARMAS PHOTO

(Out-Door Photo & Videographing)

*For...*

★ DEVELOPING & PRINTING COLOUR & BLACK & WHITE

★ PHOTOGRAPHY ON COLOUR, BLACK WHITE & 3 D PICTURES (VIEW MASTER)

★ TYPING. STENCELLING & CYCLOSTYLING ALL THREE LANGUAGES

443 A 9/2, Galle Road,
BAMBALAFITIYA
*(Near St. Peters')*

*T'phone:* 8394

Canon Photo Stat Service at
RAJASEGARA PHOTO STATE SERVICE
443 A 2/2, Galle Road,
Bampalapitiya.

**OPEN DAILY 6-00 A. M. — 10-00 P. M.**

*Proprietor:* **T. THARMASEGARAM**



பாவனி இல்லம்

# உலகவங்கியும் குறைவிருத்தி நாடுகளும்

கே. எஸ் நடராசா, B.Com. Hons (Cey) ; DIP. IN. ACCY.;

(விரிவுரையாளர், பொருளியற்றுறை, கொழும்புப் பல்கலைக்கழகம்)

குறைவிருத்தி நாடுகளுக்கு நிதிமூலங்களை வழங்குவதில் உலக வங்கி மிகப் பிரதானமானதாகும். 1928-30ல் ஏற்பட்ட பொருளாதார மந்தம், இரண்டாம் உலக யுத்தம் போன்றவற்றினுல் வீழ்ச்சியடைந்திருந்த ஐரோப்பிய நாடுகளின் பொருளாதாரத்தை மறுசீரமைக்கும் நோக்குடன் உலக வங்கியென அழைக்கப்படும் சர்வதேச புனரமைப்பு அபிவிருத்தி வங்கி 1944யூலை மாதத்தில் பிரிட்டன் வூட்ஸ் மகாநாட்டில் தீர்மானிக்கப்பட்டு 1945 டிசெம்பரில் ஆரம்பிக்கப்பட்டது. ஐரோப்பிய நாடுகளுக்கான நீண்டகாலக் கடன்களை வழங்குவதற்கு ஆரம்பிக்கப்பட்டதாயினும் 1950-ம் ஆண்டிலிருந்து குறைவிருத்தி நாடுகளின் அபிவிருத்திக்கு இந்நிறுவன நிதிப்பாய்ச்சல் திருப்பப்பட்டு வந்துள்ளது. குறைவிருத்தி நாடுகளுக்கு நிதிகளை வழங்கும் பொருட்டு சர்வதேச நிதிக் கூட்டுத்தாபனத்தையும், சர்வதேச அபிவிருத்தி நிறுவனத்தையும் இது ஆரம்பித்துள்ளது.

உற்பத்தி முயற்சிகளுக்குத் தேவைப்படும் நிதியை அளிப்பதன் மூலம் அங்கத்துவ நாடுகளின் அபிவிருத்தியை மேம்படுத்துவதும், வெளிநாட்டுத் தனியார் முதலீடுகளை ஊக்குவிப்பதும், கடன் வழங்குவதும் சர்வதேச வர்த்தகத்தில் சமவளர்ச்சியை ஏற்படுத்துவதும், சென்மதி நிலுவையைச் சமப்படுத்துவதும் உலக வங்கியின் குறிக்கோள்களாகும். சர்வதேச நிதிக் கூட்டுத்தாபனம் 1956ல் தாபிக்கப்பட்டு 1957 பெப்ரவரியில் ஐ.நா.வுடன் இணைந்து ஒரு விசேட நிறுவனமாக மாற்றமடைந்தது. இதன் நிதி உலகவங்கியின் நிதியிலிருந்து வேறுபட்டபோதிலும் குறைவிருத்தி நாடுகளின் தனியார் உற்பத்தி முயற்சியை ஊக்குவிப்பதற்காகவே ஆரம்பிக்கப்பட்டது. சர்வதேச அபிவிருத்தி நிறுவனம் 1960 செப்டம்பர் 27-ம் திகதி தாபிக்கப்பட்டு உலகவங்கியின் கொடுகடன் நிபந்தனைகளுக்கு வேறுபட்ட முறையில் தனது அங்கத்துவக் குறைவிருத்தி நாடுகளுக்கு இலகுவான முறையில் கடன்களை வழங்குகிறது. இந்நிறுவனம் 300 டொலருக்குக் குறைவான தலா வருமானத்தைக் கொண்ட நாடுகளின் அபிவிருத்தியிலேயே அக்கறை கொண்டுள்ளது.

1953ல் இலங்கைக்கு வந்த உலகவங்கிக் குழுவினர் 'இலங்கையின்அபிவிருத்தி' என்ற தலைப்பில் தமது அறிக்கையைச் சமர்ப்பித்தனர். இதன் பின்னர் 1954ல் 21 திட்டங்களுக்கு 219.2 மில்லியன்ரூபா கடன் வழங்கியது. 1978 ஏப்பிரல் வரையில் வங்கியின் உதவிகளில் 30% சக்திக்கும், 50 வீதம் விவசாயத்துக்கும், மீதித்தொகை கைத்தொழிலுக்கான மூலப்பொருள் இறக்குமதிக்கும் வழங்கப்பட்டது. நீர்மின்வலு, மகாவலி அபிவிருத்தி, நீர்ப்பாசனம், வடிகாலமைப்பு, நிலமீட்புத்திட்டம், இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் போன்றவற்றுக்கும் கடன்களை வழங்கியது. 1970ல் பதவிக்கு வந்த அரசாங்கத்தின் கொள்கையால் தனியார் முதலீடுகள் சீர்குலைவுக்குள்ளாகி உலகவங்கியின் கடனில் ஒரு பகுதி இரத்துச் செய்யப்பட்டது. 1975ல் 4.5 மில்லியன் டொலர் இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனத்துக்கு வழங்கப்பட்டது. 1978ல் சர்வதேச அபிவிருத்தி நிறுவனம், இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனத்துக்கு வழங்கிய 8 மில்லியன் டொலருக்கும், சர்வதேச நிதிக் கூட்டுத்தாபனத்தின் 1.99 இலட்சம் டொலருக்கும் வங்கி அங்கீகாரம்

வழங்கியது. தனியாரின் சிறு, நடுத்தரக் கைத்தொழில்களுக்கு நிதிவழங்குவதற்காக 1978ல் இலங்கை வங்கிக்கு 2 மில்லியன் டொலர் கடனை வழங்கியது. 1970ல் பெருந் தெருக்களுக்கான 8 இலட்சம் டொலர் உதவியும், இலங்கை பேர்ல் லிமிட் டெட்டுக்கு அனுமதித்த 3.25 மில்லியன் டொலர் உதவியும் இரத்துச் செய்யப்பட் டது. இலங்கையின் உணவுப் பொருள் இறக்குமதியைக் குறைக்கக் கூடிய உள் நாட்டு உற்பத்தி முயற்சிகளுக்கு வங்கி கடனளிக்கும் வகையில் ஆலோசனைகளையும் கடன்களையும் வழங்குகிறது. 1977ல் புதிய அரசாங்கம் பதவிக்கு வந்தபின்னர் உலக வங்கியின் இழந்த செல்வாக்கு மீண்டும் இலங்கையில் புதுப்பிக்கப்படலாயிற்று. திட்டமானதும், நம்பிக்கையளிக்கத் தக்க வகையிலும் தனியார்துறை அமைப்புகள் 1977-ம் ஆண்டின் பிற்பகுதியிலிருந்து செயற்படத் தொடங்கின. உலக வங்கியின் ஆலோசனையின் அடிப்படையில் அரசாங் கம் தனது பொருளாதார வர்த்தகக் கொள்கைகளை அமைக்க முற்பட்டது. கைத்தொழில், போக்குவரத்து, மகாவலி அபிவிருத்தி, குருநாகல் மாவட்டத்தின் ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தி பாதையமைப்பு, நீர்ப்பாசனம், வடிகால மைப்பு, மழைநீர்விவசாயம் போன்றவற் றுக்காகவும் கடன் வழங்கப்பட்டது. 1978ல் இலங்கையின் மொத்த வெளிநாட்டுக் கட னில் வங்கியின் பங்கு 13வீதமாகவும், கடன் சேவையில் 5வீதமாகவும் இருந்தது. ஆனல் இத்தொகை 1980ல் 17 வீதமாக இருந்ததாயினும், கடன்சேவைத் தொகை யில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

1970லிருந்து உலக வங்கியின் கடன் கொள்கைகள் மாற்றத்துக்குட்படலாயிற்று. குறைவிருத்தி நாடுகளின் உற்பத்தியை அதி கரிக்கவும், வளர்ச்சியடைந்த நாடுகளி லிருந்து வளங்களைத் திசைதிருப்பிக் குறை விருத்தி நாடுகளுக்கு வழங்குவதிலும் வங்கி கவனமெடுத்துள்ளது. பரந்தளவிலான வறு மைச் சிக்கலைத் தீர்ப்பதற்குக் குறைவிருத்தி நாடுகளுக்கு நிதி வழங்கும் ஒரு சர்வதேசக் கடன் நிறுவனமென்றும் இதனைக் கூறுகின் றனர். இதன் பொருட்டு மொத்தத் தேசிய உற்பத்தியின் வளர்ச்சி சிலசமயங்களில் புறக்கணிக்கப்பட்டும் வந்துள்ளது. ஏனெ னில் உற்பத்தியின் அளவு வருமானப் பங்கீட் டின் மூலமாக வருமானம் குறைந்த வறி யோரைச் சென்றடைய வேண்டுமாகையால் வறுமைநிலையில் உற்பத்தி அதிகரிப்பு அவ சியமாயினும் தகுந்த வருமானப் பங்கீட்டு முறைகள் இல்லாதிருப்பின் உற்பத்தியின் பெரும்பங்கு சிறு கூட்டத்தினரையே சென் றடையும். வறிய நாடுகளின் சராசரித் தலை வீத வருவாய் குறைவாக இருப்பினும் அந் நாடுகளின் மொத்தச் சனத்தொகையில் சிறிய பங்கினரின் வருவாய், வளர்ச்சி யடைந்த நாடுகளின் தலைவீத வருவாய்க்கு மேலான அளவில் காணப்படுகிறது. இத் தகைய ஒரு போக்கு சாதனப் பங்கீட்டின் பாய்ச்சலிலிருந்து உருவானது. எனவே முதலாளித்துவ நாடொன்றின் அரசாங்கக் கொள்கை, குறைவிருத்தி நாடுகள் கொண் டிருக்குமாயின் வருமான ஏற்றத் தாழ்வு களின் விரிவு மிகப் பரந்ததாக இருக்கும். இதனைத் தவிர்ப்பதற்கு சாதனப் பங்கீடு களையும், வருமானப் பங்கீட்டினையும் ஓர ளவுக்குத் தகுந்த முறையில் பேணுவதற்கு அரசாங்கத் தலையீடுகள் அவசியம். எனவே இத்தகைய ஒரு போக்கை உலக வங்கி குறை விருத்தி நாடுகளில் வற்புறுத்த முனைந்து வந்துள்ளது இதன் அடிப்படையில் வங்கி யின் கொள்கைப் போக்கில் ஏற்பட்ட மாற் றங்களுக்கான காரணங்களைப் பின்வருமாறு சுருக்கிக் கூறலாம்.

1. அபிவிருத்திகள் வருமானம் குறை ந்த பெருமளவு மக்களைச் சென்ற டைய வேண்டுமாயின் அரசியல், பொருளாதார ரீதியில் தீவிர அமை ப்பு அந்நாடுகளில் அவசியம்.

2. வருமானம் குறைந்தோரை நோக்கி முதலீடுகளைத் திருப்புவதன் மூலம் அவர்களின் உற்பத்தித்திறனை அதி கரிக்கச் செய்தல்.

3. புதிய அபிவிருத்திகள் மொத்தச் சனத்தொகையின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யத்தக்க வகையில் அமைதல்.

4. நலன்களின் பங்கிடு, தொழில்வாய்ப்ப்புகள் போன்ற கொள்கைகள் எல்லா அபிவிருத்தித திட்டங்களிலும் ஒன்றிணைந்து செயற்படுதல்.

5. மொத்தத் தேசிய உற்பத்தி அடிமட்டத்தைச் சென்றடையாதாகையால் வறுமைக்கெதிரான போராட்டம் அவசியம்.

6. சந்தைப் பொறிமுறையும், பகிர்வு முறையும் செல்வந்தர்களுக்குச் சார்பாக இருப்பதனல் தேசிய நோக்கங்களை அடையத்தக்க வகையில் அதாவது வறியோர் நன்மையடையத்தக்க வகையில் தற்போதைய நிறுவனங்களை மாற்றியமைத்தல்.

உலக வங்கியின் கடனளிப்புக் கொள்கையானது மேற்கூறிய அம்சங்களைக் கொண்டே தற்போது அமைந்துள்ளது. எவ்வாறிருப்பினும் பொருளாதார வளர்ச்சியானது குறைவிருத்தி நாடுகளின் 40% சனத்தொகையைச் சென்றடையவில்லை யென 1977ல் வங்கியின் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து, வங்கி வறுமை என்பதை இரு பிரிவுகளாக வகுத்தது.

1. சார்பளவிலான வறுமையினர்.

2. பூரண வறுமையினர்.

தேசிய சராசரியில் மூன்றிலொரு பங்குக்குக் குறைவான சராசரி வருமானமுடையவர்களே சார்பளவிலான வறியோராகும். 100 டொலருக்கும் குறைவான சராசரித் தலா வருமானத்தைப் பெறும் 900 மில்லியன் மக்கள் பூரண வறுமையினராவர். இவர்களை வளர்ச்சியடைந்த நாடுகளுடன் ஒப்பிடுமிடத்து சிசு மரணம் எட்டு மடங்கு அதிகமானதாகவும், ஆயுள் மூன்றிலொரு பங்கு குறைவாகவும், முதியோர் கல்வி 60வீதம் குறைவாகவும், 600 மில்லியன் மக்களிடையே தகுந்த உணவின்மையும் காணப்படுகிறது. 1975ல் இந்நாடுகளின் சராசரித் தலைவீத வருமானம் 265 டொலருக்குக் குறைவாக இருந்ததுடன், பூரண வறியோரில் 80வீதம் இங்கு வாழ்ந்தனர். 265 டொலருக்கு மேற்பட்ட தலா வருமானத்தைக் கொண்ட மத்திய தர நாடுகள் தமது உற்பத்திகளைச் சந்தைப் படுத்துவதிலும், மூலதனத்தைப் பெற்றுக் கொள்வதிலும் உலகச்சந்தையை நாட வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. வங்கியின் கடன்களைக் கொண்டு உருவாக்கப் பட்ட முயற்சிகள் குறைவிருத்தி நாடுகளின் உற்பத்தித் திறனை அதிகரித்து வறியோரின் முன்னேற்றத்திற்குத் தகுந்த வகையில் அவற்றை நெறிப்படுத்தி வழிப்படுத்த வேண்டியது அவசியம். வறியோரின் உற்பத்திகள், அளவில் சிறிதாக இருப்பினும் அவற்றின் உற்பத்தித் திறன்கள் அதிகரிக்கப் படுதல் வேண்டும். அவர்களின் சிறிய பண்ணைகள், குடிசைக் கைத்தொழில்கள், நகர்ப் புற வர்த்தகங்கள் போன்றன உற்பத்தித் திறனுடையதாக மாற்றப்படுதல் வேண்டும். இதற்குத் தீர்வு காணப்பட வேண்டுமாயின் வளர்ச்சியடைந்த நாடுகளின் தொழில் நுட்பத்திறன், ஒத்துழைப்பின் அடிப்படையில் கிடைக்கக் கூடியதை உறுதிப்படுத்தல் வேண்டும். இதன் பொருட்டு வங்கியின் நடபடிக்கைகள் பூரண வறுமைக்குட்பட்டோரின் மீதே திருப்பப்படுதல் வேண்டுமெனக் கூறப்பட்டது.

**பூரண வறுமைக்குட்பட்டோரின் நலன்களுக்காக கல்வி, சுகாதார சேவை** கள், நீர்வழங்கல், வடிகாலமைப்பு, போக்குவரத்து ஆகியனவற்றையும் விரிவுபடுத்துதல் வேண்டும். ஆயினும் வழங்கப்படும் இச் சேவைகள் இவர்களைச் சென்றடைவதற்குப் பதிலாகக் குறைவிருத்தி நாடுகளின் வருமானம் உயர்ந்த மக்களையே சென்றடைகிறது. நம் நாட்டின் சனத்தொகையில் 48.3 வீதத்தினர் 100 ரூபாவிலும் குறைந்த தலா வருமானத்தைப் பெறுகின்

றனர். இதுவரை பார்த்த வறியோரிலும் வறியோர் இப்பிரிவினுள் அடங்குவர். இவர்களின் அவலமும், அபாயமும் வெளி -யே தெரிவதில்லை. தேசிய ரீதியில் இவர் களை அடையாளம் காணமுடிவதில்லை. நகர் சார்ந்த ஒதுக்குப்புறங்களிலும், கிராமப் பகுதிகளிலும் வாழ்கின்றனர். வெளிநாட் டுதவிகளின் கீழ் வழங்கப்படும் பொதுநலச் சேவைகளைப் பெற்றுக்கொள்ளக் கூடிய நடைமுறைகளை அல்லது ஒழுங்குகளை இவர் கள் அறிந்திருப்பதில்லை. இவைகள் இலவச மாக வழங்கப்படினும், அவற்றை அடை வதற்கான போக்குவரத்துச் செலவுகளை யும், மருந்துச் செலவுகளையும் இவர்களால் தாங்கிக்கொள்ள முடிவதில்லை. உபகார ஊதிபங்களையும், கசநோய்க்கு அரசாங்கம் வழங்கும் பணத்தையும் பெறுவதற்கு விண் ணப்பங்களை எழுதியனுப்புதல், போக்குவ ரத்துச் செலவுகள், வைத்திய அத்தாட்சிப் பத்திரச் செலவுகள் தவிர்க்கமுடியாதவை களாகும். இலவசக் கல்வி நடைமுறையி லிருப்பினும் பாடசாலைக்குச் செல்வதில் ஏற்படும் செலவுகளைத் தாங்கிக் கொள்ளும் ஆற்றல் இம்மக்களுக்கு இல்லை; அத்துடன் குழந்தையின் வாழ்க்கைச் சூழல் கல்விக்குச் சாதகமாக அமைவதில்லை. பாடசாலைச் சிறுவர்கள் சிலவருடங்களிலேயே பாடசா லையை விட்டு வெளியேறிவிடுகின்றனர். அல்லது முற்ருகப் பாடசாலைக்கே செல்வ தில்லை; சிலர் பகுதிநேர வேலைகளைத் தேடிக் கொள்கின்றனர். இவ்வாறு வெளியேறு வோர் வாழ்க்கையை ஓட்டுவதற்காகச் சமூக விரோதச் செயல்களைத் தமதாக்கிக் கொள்கின்றனர்.

இலவசக் கல்வி எந்நோக்கத்துக்காக இலங்கையில் கொண்டுவரப்பட்டதோ அந்நோக்கம் பூரணமாக வெற்றியளிக்க வில்லை எனலாம். இலங்கையில் இரண்டாந் தரக் கல்வியையும், பல்கலைக் கழகக் கல்வி யையும் பெருமளவில் அனுபவிப்பவர்கள் வாழ்க்கைத்தரம் உயர்ந்தவர்களே. வாழ்க் கைத்தரம் உயர்ந்தவர்கள் ஏற்கனவே கல் விக்குச் செய்த செலவை மீதப்படுத்தக் கூடியதாக இருப்பதனல் அப்பணத்தின் மூலம் தமது பிள்ளைகளின் கல்வியை பாட சாலைக்கு வெளியேயும் கற்பிக்கக்கூடிய வாய்ப்பைப் பெற்றுள்ளனர். எந்த ஒரு சமுதாய மக்களும் நடுத்தர, உயர்தர மக் களின் செல்வாக்குக்கு உட்பட்டிருப்பின், அரசாங்கமோ அல்லது உலகவங்கியோ அளிக்கும் எத்தகைய சமூநலத்திட்டங்க ளும் அம்மக்களைச் சென்றடைவதற்குப் பதிலாக அந்நாட்டின் வருவாய் உயர்ந்த மக்களையே சென்றடையும். இத்தகைய குறைபாடுகள் களையப்படவேண்டுமாயின் சமூகரீதியான மாற்றங்கள் பொதுநலனின் அடிப்படையில் நடுத்தர, உயர்தர மக்க ளிடம் ஏற்படுதல் வேண்டும்.

குறைவிருத்தி நாடுகளில் அனேகமா னவை சுதந்திரமடைந்த ஜனநாயக நாடு களாக இருந்தபோதிலும் இவற்றின் பொருளாதார அமைப்புகள் சீரமைப்புக் குட்படவில்லை. இலங்கை, இந்தியா, பங் களாதேஸ், தென்அமெரிக்கநாடுகள், ஆபி ரிக்க நாடுகள் போன்றவற்றில் இவ்வாருன போக்குகள் காணப்படுகின்றன. 17-18-ம் நூற்ருண்டில் காணப்பட்ட நிலமானிய உடமைச் சின்னங்கள் இன்றும் இவற்றில் காணப்படுகின்றன. இலங்கையின் வடமா காணத்தைப் பொறுத்தவரையில் குறிப் பாக குடாநாட்டைப் பொறுத்தவரையில் இக்கூற்று மிகப் பொருத்தமுடையதாக இருக்குமென்று கருதலாம். ஆகவே நாட் டின் பொருளாதார ரீதியான அமைப்பு கள் சீரமைக்கப்படாத வரையில் அந்நாடு களின் மரபுரீதியான அரசாங்க அமைப்பு களுக்கு உலகவங்கி அளிக்கும் கடன்வசதி கள் உயர்ந்த வருமானத்தைக் கொண்ட மக்களின் வாழ்க்கையை முற்றிலும் பூர ணத்துவமுடையதாக்க முனையுமே யன்றி வேறெதனையும் சாதிக்கப் போவதில்லை. உலக வங்கியின் குறிக்கோள்களிலொன்று வறியோரின் வாழ்க்கைத் தரத்தைப் பங் கீட்டு முறையினூடாக மேம்படுத்துவதா கும். ஆனல் மேற்கூறிய நாடொன்றில் உலகவங்கியின் கடன் அமைப்புகள் வரு மானப் பங்கீட்டுக்குப் பதில் வருமான ஏற்

றத்தாழ்வுகளேயே உருவாக்கும். எவ்வாறிருப்பினும் உலகவங்கியின் பொதுவான கடன் அமைப்புத் தொடர்பாகக் கவனம் செலுத்தி, பின்னர் எதிர்க் கருத்துக்களைக் கவனிப்பது பயனுடையதாக இருக்கும்.

சர்வதேச அபிவிருத்தி நிறுவனத்தின் கடன்களில் 84 வீதமானவை 1975ல் குறைவிருத்தி நாடுகளுக்கு வழங்கப்பட்டன. பொருளாரார ஒத்துழைப்பு, அபிவிருத்தி, உதவிக்குழுவின் உதவித்தொகையில் 42வீதமானவை இந்நாடுகளுக்கு வழங்கப்பட்டன. 1970க்கு முன்னர் உலக வங்கிக் கடனில் 55வீதமானவை சமூகப் பொது முதலீடுகளுக்கே சென்றன. ஆனல் 1977ல் இத்தொகை 30வீதமாகக் குறைந்துள்ளது. இந்நாடுகளின் கிராமிய அபிவிருத்திக்கு 20வீதமான கடன்களும், எஞ்சியவை அவற்றின் கல்வி, நீர்வழங்கல், உணவு போன்றவற்றுக்கும் வழங்கப்பட்டன. அத்துடன் மொத்தச் சனத்தொகையில் 40வீதமாக இருக்கும் அடிமட்ட வறுமையினரை 51வீத நலன்கள் சென்றடையத்தக்க வகையில் திட்டங்களின் அமைப்பு மாற்றங்கள் சிறப்பாக அமைந்தன. 1977ல் கிராமிய விருத்தித் திட்டத்தின் கீழ் நன்மை பெற்ருேரில் 69 வீதம் வறியோராகும். கடந்த 10 வருடங்களுக்கு முன்னர் வங்கி, அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபனங்களுக்கும், சிறிய முயற்சிகளுக்கும் கடனளிக்கவில்லை. 1977ல் வங்கியின் 60 வீதக் கடன்கள் இந்நிறுவனங்களுக்கே வழங்கப்பட்டன. 1980ல் இந்நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட கடனில் 30வீதமானவை சிறிய முயற்சிகளுக்கே பயன்படுத்தப்பட்டன.

குறைவிருத்தி நாடுகள் அனுபவிக்கும் வறுமைச் சக்கரத்தின் பிரச்சனைகளில் ஒன்ருன நகர்ப்புற வறுமைக்கெதிராகவும் உலகவங்கியின் கவனம் திரும்பி உள்ளதை அவதானிக்க முடியும். கடந்த கால் நூற்ருண்டுகளாக இந்நாடுகளின் நகரச் சனத்தொகை 5 வீதத்திஞல் அதாவது இவற்றின் சனத்தொகை வளர்ச்சி வீதத்திலும் இருமடங்காக அதிகரித்து வந்துள்ளது. இந்நாடுகள் இன்று 840 மில்லியன் மக்களை நகர்ப்புறத்தில் கொண்டுள்ளன. இது இந்நாடுகளின் மொத்தச் சனத்தொகையில் 24 வீதமாகும். ஆபிரிக்காவிலும், தென்ஞசியாவிலும் உள்ள நகரமக்கள் அந்நாடுகளின் மக்கள் தொகையில் 25 வீதமாகவும், கிழக்காசியாவில் 30 வீதமாகவும், வட ஆபிரிக்காவில் 40வீதமாகவும், மத்திய தென்அமெரிக்காவில் 60 வீதமாகவும் உள்ளனர். இந்நூற்ருண்டு முடிவதற்குள் மேலும் 1020 மில்லியன் மக்களைத் தம்முள் ஈர்த்துக் கொள்ளுமென்று ஐ.நா.மதிப்பீடு காட்டுகிறது.

நகரங்களில் வறியோரின் தொகை அதிகரித்துவருவதே நகரங்களின் முக்கிய பிரச்சனையாகும். ஒரு நகரின் சனத்தொகை தேசிய அதிகரிப்பு வீதத்திலும் இருமடங்காஞல் சுகாதாரமற்ற சேரிகளில் தொழிலற்ருேராக அல்லது சிறு தொழிலைச் செய்வோராக இவர்கள் வாழவேண்டி ஏற்படும். இலங்கையில் 1981 மார்ச் மாதத்தில் எடுக்கப்பட்ட குடிசன, வீட்டு மதிப்பீட்டு புள்ளிவிபரங்களும் நாட்டின் குடிசனத் தொகை அதிகரிப்பிலும் பார்க்க இருமடங்குக்கு மேற்பட்ட அதிகரிப்பைக் கொழும்பு மாவட்டம் கொண்டிருப்பதைக் காட்டுகிறது. தற்பொழுது குறைவிருத்தி நாடுகளின் நகரச் சனத்தொகையில் மூன்றிலொரு பங்கினர் குறைந்த வருமானங்களைப் பெற்று அடிப்படைத் தேவைகளையும் பூர்த்தி செய்ய முடியாத நிலையில் உள்ளனர். இலங்கையின் நகரப்புறச் சனத்தொகையில் 19.6 வீதத்தினர் 100 ரூபாவுக்குட்பட்ட தலா வருமானத்தைப் பெறுவோராவர்.

கிராமிய அபிவிருத்திகள் தொடர்பாக பாரிய அபிவிருத்திகள் மேற்கொள்ளப்பட்டாலும் அவற்றுக்கு ஓர் எல்லை

புண்டு. எனவே கிராமிய சனத்தொகையில் ஒருபங்கினை நகரங்கள் உறிஞ்சிக் கொள்ளக்கூடிய வகையில் திட்டங்கள் நகரங்களில் விரிவுபடுத்தப்படல் வேண்டும். இப்பிரச்சனை ஆசியாவிலேயே பெருமளவில் காணப்படுகிறது. உதாரணமாக பிலிப்பைன்ஸ் நாட்டின் விவசாய வளர்ச்சி அடுத்த 25 ஆண்டுகளில் 5 வீதமாக அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. இவ்வளர்ச்சியை முற்றாக அனுபவித்து, தலாவருமானத்தை 75 டொலரிலிருந்து 125 டொலருக்கு உயர்த்துவதாயின் 30 மில்லியன் மக்களை நகர்ப்புறங்கள் உறிஞ்சிக் கொள்ள வேண்டும். பாக்கிஸ்தானில் 2000-ம் ஆண்டில் தலா வருமானம் 125 டொலரை அடையவேண்டுமாயின் பண்ணை உற்பத்தித்துறையில் 6% வருடாந்தவளர்ச்சி ஏற்படவேண்டியிருப்பதுடன், 40 மில்லியன்மக்களை விவசாயத்திலிருந்து வேறுதுறைகள் உறிஞ்சிக் கொள்ள வேண்டும். கிராமிய உற்பத்தியில் பாரிய அதிகரிப்பும், சனத்தொகை அதிகரிப்பில் வீழ்ச்சியும் ஏற்படுமென்று கருதினாலும்கூட குறைவிருத்தி நாடுகளின் நகரங்கள் பொருளாதாரத்துக்குப் பெருமளவு பங்களிப்புச் செய்தல் வேண்டும்.

எனவே இத்தகைய சிக்கல்களைத் தீர்ப்பதற்கு உலகவங்கியின் நகர வறுமைத் திட்டமானது இரு அம்சங்களை உள்ளடக்கியதாக இருக்கிறது.

1. குறைந்தளவு மூலதனச் செலவில் விவசாயமற்ற உற்பத்தி முயற்சிகளை ஆரம்பிப்பதன் மூலம் வேலை வாய்ப்புக்களை உருவாக்குதல்.
2. பொருளாதார, சமூகநலன் கருதி நகர்ப்புற வறியோருக்கான அடிப்படைச் சேவைகளின் விநியோகத் திட்டமொன்றைப் பாரிய அளவில் ஆரம்பித்தல்.

குறைவிருத்தி நாடுகளில் மூலதனச் செறிவான தொழில் முயற்சிகளுக்குப் பதிலாக ஊழியச் செறிவுமிக்க தொழில்கள் ஆரம்பிக்கப்பட வேண்டுமென வங்கி கூறுகிறது. அருமையாகக் கிடைக்கும் மூலதனம் சிறு தொகைத் தொழிலாளர்களைக் கொண்டிருக்கும் உற்பத்திகளில் முடக்கப்படுவதனால் பெருந்தொகையான ஊழியப் படையினர் குறைந்தளவான உற்பத்தியாற்றல் கொண்டவர்களாகி விடுகின்றனர். வங்கியால் நிதி வழங்கப்பட்ட பாரிய கைத்தொழில்களில் ஒரு ஊழியருக்கு வேலை வழங்குவதற்கு 100,000 டொலரும், நடுத்தரக் கைத்தொழில்களில் 25000 டொலரும் செலவிடப்பட்டுள்ளது. ஒரு ஊழியருக்கு வேலை வழங்குவதற்கு இந்தியாவுக்கு 1000டொலரும், கென்யாவுக்கு 1800 டொலரும், மெக்சிக்கோவுக்கு 13,000 டொலரும் தேவைப்படுகிறது. இந்நிதிகள் சிறுகைத்தொழில்கள், கைவினைத் திறன்கள், சுயவேலை வாய்ப்புகளைப் புரியும் வறியோரைச் சென்றடையுமாயின் வங்கியின் தொழிற்பாட்டு இலக்கு பொருத்தமாக இருக்கும். மிக அடிமட்டத்திலுள்ளோருக்கு நன்மையளிக்கும் வகையில் வர்த்தக வங்கிகள், கூட்டுறவுச் சங்கங்கள், கிராமிய வங்கிகள் போன்ற உபநிறுவனங்களை நிறுவுவதிலும் வங்கி கவனம் செலுத்தி வருகிறது. ஊழியச் செறிவுமிக்க 12 திட்டங்களுக்கு வங்கி 1977ல் நிதி வழங்கியது. 1981ல் இவ்வாறான திட்டங்களுக்கு 400 மில்லியன் டொலரைச் செலவுசெய்ய உத்தேசித்துள்ளது. சமூக முன்னேற்றத்துடன் கூடிய உற்பத்தியாற்றல், சுகாதாரம், மக்கள் நலன், கல்வி, தொழில்பயிற்சி, உணவு, குடும்பத் திட்டமிடல், தொழில்நுட்பம் போன்றவற்றை உள்ளடக்கியதாக வங்கியின் திட்டங்கள் இன்று அமைகின்றன. உலக வங்கியானது இதுவரை 25 நாடுகளில் 35 நகரத் திட்டங்களுக்கு நிதி வழங்கியுள்ளது.

வங்கியின் புதிய அணுகுமுறைகளின் கீழ் வீதியோரக் குழாய்கள், பொதுக் குளியலறைகள், மலகூடம், வடிகாலமைப்பு, கல்வி, நகர அபிவிருத்தித் திட்டங்களுடன் ஒருங்கிணைப்பு ஆகியவற்றின்மூலம் வறியோர் நன்மையடைகின்றனர். புதிய மாதிரிக் கல்வித் திட்டங்களும் விருத்தி செய்யப்பட்டுள்ளன. பாரம்பரியமற்ற கல்வி, எழுத்தறிவு, ஆரம்பக்கல்வி போன்றவற்றையும் இத்திட்டங்கள் வற்புறுத்துகின்றன. இவ்வாண்டில் நகர மக்களுக்கு வழங்கப்படும் மொத்தக் கடனில் மூன்றிலொரு பங்கு நேரடியாக வறியோருக்கு நன்மையளிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

வங்கியின் குறிக்கோள்கள், திட்டங்கள் சிறப்பானவையாக இருந்தபோதிலும் நடைமுறையில் காணக்கூடிய சில கசப்பான அனுபவங்கள் வங்கியின் தொழிற்பாட்டைக் குறைத்து மதிப்பீடு செய்ய வேண்டிய சூழ்நிலையை உருவாக்கியுள்ளது. இந்த மதிப்பீட்டை ஜோசப் கொலின்ஸ், பிரான்சிஸ் மூர்லாப் என்ற இரு அமெரிக்கர் எழுதிய ''உணவு முதலில்'' என்ற நூலில் கூறப்பட்ட சில பகுதிகளை விளங்கிக் கொள்வதன் மூலம் அறியலாம். சமூக ரீதியில் காணப்படும் வறுமைக்கான காரணங்களில் கவனம் செலுத்தத் தவறுவதனால் வங்கியின் இலக்குகள் எதிர்மறையான விளைவைத் தருகின்றன. பங்களாதேசுக்கு 3000 அடி ஆழமான குழாய்க் கிணறுகளை அமைப்பதற்கு வங்கி கடன் வழங்கியது. ஒவ்வொரு குழாய்க் கிணறும் 60 ஏக்கருக்கு நீர் வழங்கக் கூடியதாக இருந்தமையால் ஒரு கூட்டுறவு நீர்ப்பாசனக் குழுவிலிருக்கும் 25-30 பேருக்கு ஒவ்வொரு கிணறும் பயன்படுமென எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் இவையனைத்தும் இறுதியில் நிலப்பிரபு ஒருவரின் சொத்தாக மாறியுள்ளது. இக்கிணறு ஒவ்வொன்றுக்கும் வங்கி 12,000 டொலரைச் செலவு செய்தது. ஆனால் நிலப்பிரபு இக்கிணற்றுக்கு 300 டொலருக்குக் குறைவாக லஞ்சமாகக் கொடுத்து உள்ளூர் அதிகாரிகளிடமிருந்து இவற்றைப் பெற்றிருக்கிறார். உண்மையிலேயே இத்திட்டங்கள் பயனடைய வேண்டியவர்களை விடுத்து எதிரிகளை வசதியுடையவர்களாக்கி வருகிறது. உலக வங்கியின் உதவியால் அதிகரித்த வருமானங்களைப் பெற்ற பிரபு சிறு நிலத்துண்டுகளை வைத்திருக்கும் விவசாயிகளின் காணிகளை வாங்கி அவர்களை நிலமற்றோர் படையில் சேர்த்துவிடுகிறார்.

கிராமிய அபிவிருத்தித் திட்டம் -1 என அழைக்கப்படும் வேறொரு திட்டத்துக்கும் வங்கி, பங்களாதேசுக்குக் கடன்வழங்கியது. கிராமிய நிறுவனங்களில் செல்வமும், செல்வாக்கும் பெற்றிருக்கும் விவசாயிகளின் ஆதிக்கத்தைக் குறைத்து, கூட்டுறவு மூலமாக சிறு விவசாயிகளுக்கு உள்ளீடுகளை வழங்குவது இதன் நோக்கமாகும். ஆனால் ஆவணங்களைத் தமது கைகளில் வைத்துக்கொண்டு சங்கத்தில் யார் சேரலாம், கடன் பெறுவதற்கு யார் தகுதியானவர் என்பதைத் தீர்மானிக்கும் அதிகாரத்தைப் பெற்றிருக்கும் ஆறு ஏக்கர் அல்லது அதற்குக் கூடுதலான காணிகளைக் கொண்டிருக்கும் வசதிபடைத்த 10 வீதத்தினருக்கே இக்கூட்டுறவுச் சங்கங்கள் உதவியளித்தன. அரை ஏக்கரிலும் குறைவாக நிலத்தை வைத்திருந்த அரைப்பங்கினரை பொறுத்தவரையில் கடன் நிபந்தனைகள் மிகமிக இறுக்கமானதாக இருந்ததுடன், உறுப்புரிமைக் கட்டணம் மிக உயர்வாகவும், நிலம் சொந்தமில்லாதவிடத்து மேலதிகப் பிணைகளைக் கொடுத்துக் கூட, கடன் பெற முடியாமலுமிருந்தது. கடனைத் திரும்பச் செலுத்துவதற்கான திட்டமொன்றுடன் கூட்டுறவுச் சங்கத்தை அணுகினாலும் அது கடன்தர மறுக்குமென்று விவசாயிகள் முறையிட்டிருந்தும் பலன் எதுவும் கிட்டவில்லை.

மேற்கூறிய விளக்கங்கள் அனைத்தும் இலங்கையின் உள்ளூர் கூட்டுறவு, கிராமிய வங்கி, வர்த்தக வங்கிகளுக்கு மிகப்பொருத்தமுடையன எனலாம். முன்னாள் நிதியமைச்சர் திரு. பீலிக்ஸ் ஆர். டயஸ் பண்டாரநாயக்கா தமது வரவுசெலவுத்திட்ட உரையில், உலகவங்கி பற்றிக் குறிப்பிடும்பொழுது அதனை இலங்கையில் உள்ள கிராமிய வங்கிக்கு ஒப்பிட்டு உரைநிகழ்த்தினார். உலகவங்கியின் குறிக்கோள்கள் உலக நாடுகளைப் பற்றியது; கிராமிய வங்கியின் குறிக்கோள்கள் உள்நாட்டைப்பற்றியது. இவை தவிர ஏனைய அம்சங்களில் ஒற்றுமை காணப்படுவது போல அவற்றின் நடைமுறைத் தொழிற்பாடுகளிலும் பெருமளவு ஒற்றுமை நிலவுகிறது. நிலம்

சமமற்ற நிலையில் பங்கீடு செய்யப்பட்டிருக்கும் வரையில் கூட்டுறவு, கிராமிய அமைப்புகளில் நில உடமையாளரின் கரம் ஓங்குவது தவிர்க்க முடியாததாகும். கனவுலகில் திரிந்து, கற்பனையில் தயாரிக்கப்படும் திட்டங்கள் அநீதியும், போராட்டங்களும் நிறைந்த குறைவிருத்தி நாடுகளில் அமுலாக்கும்பொழுது அவை மேலும் சிக்கலைத் தோற்றுவிக்கும். உலகவங்கி அதன் கிராமியக் கடனில் அரைப்பங்கினைச் சிறு விவசாயிகளுக்கு வழங்கி வருவதாகக் கூறப்படுகிறது. அவ்வாறுயின் குறைவிருத்தி நாடுகளில் 20 வீதமாக இருக்கும் நடுத்தர, உயர்தர நில உடமையாளர்களுக்கே கிராமியக் கடனில் அரைப்பகுதியும் செல்கிறது. நிலமற்றோரைப் பொறுத்தவரையில் வங்கியானது இந்நாடுகளில் ஒரு புதிய சமுதாய அமைப்பையே உருவாக்கும் தன்மை கொண்டுள்ளது.

வர்த்தக வங்கிகளைப் போன்று உலக வங்கியும் ஆபத்துக்களைக் குறைத்துக் கொள்ளவே விரும்புகிறது. சந்தைப்படுத்தக்கூடியளவுக்கு மேலதிக உற்பத்தித் தொகைகளை உற்பத்தி செய்யும் முதலீட்டாளருக்கே கடன் வழங்குகிறது. பெரிய பண்ணையாளர்களின் பக்கம் சாய்ந்திருப்பது மட்டுமன்றி ஆபத்துக்களைக் குறைக்கும் நோக்குடன் உணவுப் பொருளல்லாதவற்றை உற்பத்தி செய்யுமாறு சிறு விவசாயிகள் தூண்டப்படுகின்றனர். கடனை மீளச் செலுத்தும் சுமை தொடர்ந்தும் அதிகரித்து வருவதனுல் ஒவ்வொரு நாடும் ஏற்றுமதித்துறையை நெறிப்படுத்துமாறு தூண்டப்படுகின்றன.

கடந்த சில வருடங்களில் ஒரு நாட்டின் தேசிய பொருளாதாரக் கொள்கைகளை உருவாக்கும் ஒரு நிறுவனமாகவும் வங்கி வளர்ச்சியடைந்துள்ளது. குறைவிருத்தி நாடுகளில் உள்ள வங்கியின் அதிகாரிகளினூடாக இருபக்க, பலபக்க கடன் கொடுப்போரை ஒன்றிணைத்து, தலைமைப் பொறுப்பைத் தானே ஏற்றுக்கொள்கிறது. பங்களாதேசின் பிரதான அமைச்சுகளில் தனது அதிகாரிகளையும் நியமித்துள்ளது. ஒரு நாட்டின் கடன் பெறும் வல்லமையைக் கூட வங்கி தனது கைகளில் வைத்திருக்கிறது.

வங்கியின் தற்போதைய தலைவர் ரொபேட். எஸ். மக்னமாராவின் கீழ் வங்கியின் கடன்போக்குகள் பெருமளவுக்குப் பரவலாக்கப்பட்டுள்ளன. அதே நேரம் கடன்களை மீளப்பெறுவதிலும் வங்கி அக்கறை கொண்டுள்ளது. குறைவிருத்திநாடுகள் பெற்றுக்கொண்ட கடன் தொகையில் 58வீதமானவற்றைக் கொண்டு பழைய கடன்களை மீளச் செலுத்தவும், அவற்றுக்கான சேவைக் கட்டணங்களைச் செலுத்தவும் நிர்ப்பந்திக்கப்பட்டன. இக்கடன்பழுவிலிருந்து இந்நாடுகளை விடுவிக்கவும், வளர்ச்சியைத் தூண்டவும் வளர்ச்சியடைந்த நாடுகள் தமது தேசிய வருமானத்தில் ஒரு வீதத்தையாவது குறைவிருத்தி நாடுகளுக்கு வழங்க வேண்டுமென முன்னுள் உலகவங்கித் தலைவர் பதவிக்காலத்தின்போது வளர்ச்சியடைந்த நாடுகளுக்கு வேண்டுகோள் விடுத்தார். அவரது வேண்டுகோள் புறக்கணிக்கப்பட்டமையால் தமது பதவியிலிருந்து இராஜினமாச்செய்தார். இந்நிகழ்ச்சி உலகவங்கிக்கு உதவியளித்துவரும் நாடுகளின் நெகிழ்ச்சியற்ற போக்கை வெளிப்படுத்துகிறது. ஆயினும் குறைவிருத்தி நாடுகளில் ஏற்பட்டுவரும் அரசியல் மாற்றங்கள் உலகவங்கியினதும், வளர்ச்சியடைந்த நாடுகளினதும் கொள்கைகளைத் தளர்த்துவதில் பெரும்பங்கு கொண்டுள்ளது. இதனுல் உலக வங்கியானது அடிப்படையில் அரசியல் சார்ந்தது என்று கூறப்படுகிறது. உலகின் முதலாளித்துவ நாடுகளின் பாரிய நிதி உரிமையாளர்களால் கட்டுப்படுத்தப்படும் இவ் வங்கி, உலகின் தற்போதைய நிதி, அரசியல், பொருளாதார, சமூக ஒழுங்குகளை மாற்றமின்றித் தொடர்ந்து வைத்திருக்கவும் குறைவிருத்தி நாடுகளின் செலவில் வளர்ச்சியடைந்த நாடுகளின் உறுதிநிலையைப் பராமரிக்கவும் முயன்றுவருகிறது. எவ்வாறிருப்பினும் மக்களைக் கொடூரமான வறுமையிலிருந்து விடுவிப்பதில் உலகவங்கி பனது பங்களிப்பினைச் செய்துவருகிறதென்பதை மறுப்பதற்கில்லை.

* * *



கல்யாணி இல்லம்

*With Best Compliments*

# RANEE CINEMA

JAFFNA



LIBRARY
EARLALAI WEST
CHUNNAKAM

# கொழும்பு ரெக்ஸ்ரைல்ஸ்

தரமான புடைவைகளுக்கு
விஜயம் செய்யுங்கள்

மகேசன் கட்டிடம்,
109, பெரியகடை,
யாழ்ப்பாணம்.

# லக்ஷ்மி பவான்

ஓடருக்குச் சுவையான
பலகார வகைகள்
செய்து கொடுக்கப்படும்

புன்னாலைக்கட்டுவன்
தெற்குச் சந்தி,
புன்னாலைக்கட்டுவன்,
சுன்னாகம்

*With the Best Compliments*

*of*

**Valanka Garments Industries & Trades**

Punnalaikadduvan North

# கௌரி ரெக்ஸ்ரைல்ஸ்

உள்நாட்டு வெளிநாட்டு புடவைத் தினிசுகள்,
மங்களநாட் புடவைகள் எல்லாவற்றையும்
மலிவாகப் பெறக்கூடிய இடம்

**கௌரி ரெக்ஸ்ரைல்ஸ்**
155, 156, நவீனசந்தை,
யாழ்ப்பாணம்.

தலைமை அலுவலகம்:
இல. 54, 2ம் குறுக்குத் தெரு,
கொழும்பு–11.

---

*Space Donated by*

# FANCY HOUSE

68, Grand Bazaar,
JAFFNA.

*T'phone*: **7084**

With the Best Compliments

of

WARNER-HUDNUT (LANKA) LTD.

STAPLES STREET,

COLOMBO 2.

SRI VINAYAGAR
LIBRARY
EARLALAI WEST
CHUNNAKAM

The Best Compliments of

DURGHA AUTO HARDWARES
11, STANLEY ROAD,
JAFFNA.

*The Best Compliments*

*of*

T. KUMARASAMY TEXTILES
54, Grand Bazaar,
JAFFNA.

*Phone:* **7034**

உ

உங்கள் தேவைகளுக்கு

எங்களை நாடுங்கள்

0

# ஜீவன் ஸ்ரோஸ்

* திருந்தர உணவுக்குத் தேவையான பண்டங்கள்
* குளிர்பானவகை
* தோட்டத்துக்குத் தேவையான உரவகை, மருந்துவகை
* கால்நடைத் தீனி

மகிழ்ச்சியான வரவேற்பு

பலாலி வீதி,
ஊரெழு.

கிளை :

*சதீஸ்குரெசரீஸ்*

கரந்தன்,
நீர்வேலி.

**உரிமையாளர் :**

இ. திருச்செல்வம்

With the Best Compliments

of

M. P. Veeravagu & Co.,

15, Power House Road,

JAFFNA

Tel: 604

Agents for:

Darly Butler & Co.

Ceylon Nutritional Food Ltd.

Maharajah Organization Ltd.

Anglo-Asian, Ceylon Biscuits Ltd.



# சிமாட்டி
# ஜவுளி
# சமுத்திரம்

| | |
|---|---|
| கல்யாணப்பட்டு | சூட்டிங் |
| காஞ்சிபுரம் | சேட்டிங் |
| அரணி | அனைத்துரகம் |
| தக்மாபுரம் | கைத்தறி |
| பனாரஸ் | |

அனைத்தும் தெரிவு செய்யலாம்

158, நவீன சந்தை,
மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

தொலைபேசி : **8096**

சகலவிதமான
பலசரக்குச் சாமான்களும்
சைக்கிள் உதிரிப் பாகங்களும்
மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ளலாம்

# கல்பனு ரேடர்ஸ்

# KALPPANA TRADERS

பலாலி வீதி,
புன்னலைக்கட்டுவன் தெற்கு



இரஞ்சினி இல்லம்

# ஊரெழு காண்பீரே !

சீரோங்கு தெய்வத் திருவோங்கு ஊரெழுவின்
பாரோங்கு புகழ்பாடப் பரந்தாமன் காப்பாமே.

மங்கல நாண்பூண்டு மனதுக்கினியவளாய்
இங்கிதமாய் நிற்கின்ருள் ; ஈழத் திருவிடத்தாள்
அங்கவளின் வடக்கே அழகான யாழ்ப்பாணம்
சங்கத் தமிழ் முழங்க சதுர்மறைகள் தாமொலிக்க
வங்கக் கடலோசை வருகவெனத் தாலாட்ட
எங்கள் குலக்கொடியின் எழிலான திலகமென
மங்காப் புகழுடனே மணமாட்சி காண்கின்ருர்
இங்கிவளின் நடுவாக இயற்கை எழிலுடனே
வலிகாமம் பெற்றெடுத்த வண்ணக் குழந்தைகளில்
கலியுகத்துக் கண்ணனைப்போல் களைசொட்டும் கன்னியவள்,
பூத்துக்குலுங்கி பூமாதின் பொற்கரத்தில்
காய்த்துக் கனிந்து களைகட்டி நிற்கின்ருள் ;
தித்திக்கும் வாழைகளும் தீங்கரும்பு தென்னைகளும்
பத்திக்கும் உவப்பான பலாவுடனே மாங்கனிகள்
எத்திக்கு மிலங்கி நிற்கும் இயல்பான பாக்குமரம்
சோலைகளும் தோப்புகளும் தோட்டந் துரவுகளும்
சாலைகளும் சந்திகளும் சாத்திரப் பண்ணைகளும்
ஆலைகளும் ஆலயமும் அனைத்தும் பொருந்தியுள
ஏழூரில் ஓரூராய், எழுச்சியுள்ள பேரூராய்
வாரூரும் பூண்முலையார் வளங்காக்கும் நல்லூராய்,
திக்கெட்டும் புகழ்மணக்க தேசமெங்கும் ஒளிபரப்பி
புக்கவர்க்கும் புதியவர்க்கும் பொருந்தவே விருந்தளித்து
தங்குலத்தைக் காத்து தக்கோரைப் பேணி
இங்கிதமாய் யாவர்க்கும் இயற்கைவளம் நல்கி
சங்கத்தமிழும் சைவமும் காக்கவென்றே
சரவணமுத்துவெனும் சான்ருேனைப் பெற்றெடுத்து,
சிரவணமெலாஞ் செய்து சீராளுக்கி யவன்
கண்டனப் பிரசங்கமுடன் கவிமழைகள் சிந்துகையில்
தாயகத்திற் றமிழ்காத்த தக்கமன்னர் பலராலே
சேயகத்தின் நாயகமே ! செந்தமிழின் பெரும்புலவ !
ஆயகலைகள் அனைத்து மறிந்த பேராள !
தூய தமிழின் தனிச்சுவையே ! துரியநிலை தான்கடந்த
மாயவனே ! மன்னவனே ! மன்னர் போற்றும்

தூயவனே ! சுடர்விளக்கே ! தொன்மை நலம்பேணும்
நாயகனே ! நல்லவனே ! நம்தலைவ ! எனவேத்தும்
பேறளித்த பெருமாட்டி பெய்வளையாள் ஊரெழுவாள் ;
அன்னவரினுசான் அவனுசான் மயில் வாகனனும்
முன்னைப் புலவனையும் மூச்சாக வளர்த்துவிட்டு
உலகத்து மேடையிலே உயர்விளக்காய் நிற்கின்றுள்,
ஊரகத்திலொரு கோவில் உயர்ந்த பெருங்கோவில்
வீரகத்தி விநாயகனின் விண்ணேங்கு தனிக்கோவில்,
பாரகத்தைக் காக்கின்ற பார்வதிக்கோர் பூங்கோவில்
தேரகத்திற் பவனிவரும் தெய்வத் திருமாதாம்
மீனுட்சி வாழ்கின்ற மேலான திருக்கோவில்,
ஆலயங்கள் மூன்றுடனே அழகான அஞ்சலகம்,
மங்கையர்கள் நலம்பேணும் மாண்பான கழகமொன்று
சைவக்கலையும் தமிழ்க்கலையும் வளர்க்க வொரு
தெய்வக் கழகமுயர் தேசிய கலைக்கழகம்,
இளைஞர்பலம் பேணும் இனிதான கழகமுடன்
பாலர் படிக்கின்ற பள்ளிகளு மிரண்டாகும்,
சீலம் வளர்ந்து சிந்தைநலம் பெருகும்
கணேசன் பெயராலே கட்டிவைத்த கலைக்கூடம்,
பொன்மலராய்ப் பூத்தொளிரும் பொற்பான கலைக்கூடம்
ஞாலம் விளங்க ஞாயிறுபோல் தான்விளங்கி
காலத்தால் முன்னுதித்த கன்னித் தமிழ்ப்பள்ளி
மேலைச் சமயத்தார் தந்துவைத்த மெருகான தமிழ்க்கூடம் ;
இன்ன பிறவும் எங்களூர்ச் செல்வங்கள்
கல்லைப் பிளந்து கழனி வளங்காணும்
மல்லாகத் திண்தோள் மறவர் முயற்சிகளும்
சான்றேரைப் பெற்றெடுத்து தரணியெலா மனுப்பிவைத்து
தாய்மை வழிகாக்கும் தங்கத் திருநாடு
இராமரனை கட்டி இராவணனை மாய்த்துவிட்ட
பாரமதைத் தீர்க்கப் பவுத்திரமாய்த் தொட்டுவைத்த
தீர்த்த மகிமையுடன் திகழ்கின்ற பொன்னுடு,
இத்தனைக்குமப்பாலே பூத்துக் குலுங்கும் புன்னையொடு
ஏழாலை வடக்காக ஏற்றமிகு சுன்னுகம் மேற்காக
அச்செழுவுடனே அழகான நீர்வை கிழக்காக
அடுத்ததோர் உரும்பிராய் தெற்காக எல்லைகட்டி
நற்கலைகள் கற்றவுயர் நாரியர்கள் மூலைபெருக்கி
கற்பகம்போல் வளர்த்த மக்கள் கடல்கடந்த சீர்மையிலும்
ஏற்றம்பல புரிய இலங்குகின்றுள் ; ஊரெழுவாள்
ஊரெழுவின் புகழ்பாடும் உத்தமர்கள் ஊருராய்

இருக்கின்றூர், உலகமெலாம் உயர்வான பதவிகளில்
வள்ளிக் கிழங்குகல்லி வாகான பால்சேர்த்து
அள்ளிக் கொடுக்கும் அழகான நற்கரங்கள்
தண்ணீர் நிலநலமும் தக்கோர் குணங்கொடையும்
செம்பாட்டு மண்மேலே சேர்ந்தோடும் வெள்ளம்போல்
நம்நாட்டுப் பண்பாடு நமக்கெல்லாம் பண்பாடும்
உழைப்பான இலட்சியத்தால் உயர்ந்தோர்கள் சாட்சியங்கள்
இலட்சியத்தின் பாதையிலே இயங்குகின்ற ஊரெழுவே!
அலட்சியத்தை அகற்றிவிட்டு அறைந்திடுவாய் உன்நாமம்
உன்நாமம் வாழ்க! உலகமுடன் நீ வாழ்க!
பொன்ஞன விழாக்காணும் பொற்பார் பூங்கொடியே!
எந்நாளும் வாழ்க இனிது.

சிங்கை நகர்
"செங்கதிரோன்"

அன்பளிப்பு

ஏ. கே. எஸ்.
நகை மாளிகை

68, கன்ஞதிட்டி,
யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 519

அன்பளிப்பு

# ஸ்ரரார் கிறெசர்

கல்லுடைக்கும் தொழிற்சாலை

அச்செழு, — நீர்வேலி.

# STAR METAL CRUSHER

ACHCHELU,

NEERVELLY.

★ ★ ★

உரிமையாளர்: திரு. நாகமுத்து சகோதரர்கள்

# தொழிற் கல்வியும் நாட்டின் அபிவிருத்தியும்

ஆ. சபாநாயகம் Dip.-in-Com.

இன்று மனித வாழ்வின் பல்வேறு துறைகளிலும் அபிவிருத்தி என்ற எண்ணக் கரு மிக ஆழமான செல்வாக்கினைப் பெற்று விளங்குகின்றது. இலங்கைபோன்ற வளர்முக நாடுகளில் அபிவிருத்தி பற்றிய நடவடிக்கைகளையும், செயல்திட்டங்களையும் நாம் காணமுடியும். அபிவிருத்தி — என்ற எண்ணப்பாங்கும், அதற்கான ஈடுபாடுகளும் அதிகரிக்க அதிகரிக்க, அபிவிருத்திக்கான தேவைகளும் துறைகளும் அதிகரித்த வண்ணமாய் இருப்பது விநோதமானது. கருங்கக் கூறின் நாம் எதிர்பார்க்கும் அபிவிருத்தி பல்வேறு பிரயத்தனங்கள் மத்தியிலும், எமக்குக் கிடடவில்லை என்பதே ஆகும். வறுமையே இதற்குக் காரணமாகலாம் என்ற எடுகோளில், வளர்ந்த நாடுகளிலிருந்து கடனுகப் பணஉதவிஎன்ற போஷாக்கினைப் பலமுறை நாம் பெற்றும், சீர்திருந்திய ஒரு நிலையை நாம் எய்தவில்லை.

இந்த அபிவிருத்திப்பின்னடைவுக்கான பல்வேறு காரணிகளில், நடைமுறையிலிருக்கும் கல்விமுறையே முதன்மைக் காரணி என அண்மைக்கால ஆராய்ச்சிகளிலிருந்து புரிந்துகொள்ளலாம். கல்வி மனித சமுதாயத்தின் இயற்கைப் பண்புகளில் ஒன்று என்ற புதிய எண்ணப்பாங்கினை உள்ளடக்கியது. தமது நாட்டிற்கேற்ப கல்வித் துறையைப் பொருத்தமாக அமைத்த நாடுகளே அபிவிருத்தியடைந்துள்ளன. குறிப்பாகக் கூறினுல், கல்விக்கும் தொழிலுக்கும் நேரடித்தொடர்பு எற்பட்ட நாடுகளில்தான் தொழில்வளர்ச்சி ஏற்பட்டதை வரலாறு உணர்த்துகின்றது. தொழிற்புரட்சி ஏற்பட்ட நாடுகளே இன்று வளர்ந்த நாடுகளாகத் திகழுகின்றன. ஐக்கியராச்சியம், சோவியத் ஒன்றியம், ஐக்கிய அமெரிக்க நாடுகள், யேர்மனி, யப்பான் போன்ற நாடுகளை உதாரணமாகக் கூறலாம்.

இலங்கை போன்ற வளர்முக நாடுகளில் கல்வி அபிவிருத்தித் துறையுடன் இணக்கமான முறையில் பொருந்தாமையினுல் அபிவிருத்திபற்றிய அடைவுகள் சிதைவடைகின்றன. இதனுல் மனிதவளத்துடன் பொருளியல் வளங்கள் இயைபுபெறுமல், வேலையின்மை வறுமை ஆகியவற்றை எதிர்நோக்குகின்ருேம். கல்வி எத்தனங்களுக்கும், சமூகம்கோரும் தேவைகளுக்குமிடையில் பொருத்தமின்மையினுல் விரிவாகும் இடைவெவி நாட்டின் பொருளாதாரத்தைக் சீர்குலேயச்செய்கின்றது. காலத்திற் கொவ்வாத கோட்பாடுகள், வெவ்வேறு நோக்கங்களுக்காக அமைக்கப்பட்ட கல்வி முறையினை நாம் தொடர்ந்தும் கடைப்பிடிப்பதே இப்பின்னடைவின் அடைப்படையாகும், பாடசாலைகள் சமுதாயத்தினின்றும் வேறுபட்ட நிறுவனங்களாக இயங்குவதோடு, பல்கலைக்கழகங்களிலிருந்து வெளியேறுபவர்கள்கூட அச்சுயத்திரங்களிலிருந்து வெளியேறும் அச்சிட்ட காகிதங்களாக, பட்டங்களுடனும் தராதரங்களுடனும் வெளியேறி சமுதாயத்தின் தேவைகளுக்குப் பயன்படாதவர்களாக ஒதுங்கி ஏங்கித் தவிக்கின்றனர். ஒருவகையில் கூறுவதானுல் கற்று வெளியேறுபவர்களைச் சமுதாயம் ஒதுக்கித் தள்ளுகின்ற தென்ருல் அது தவருகாது. இந்நிலையில்தான் தொழிற்கல்வியின் முக்கியத்துவம் அவசியமாகின்றது. கல்வி தொழில்களுடன் இயைவுபட்டிருக்க வேண்டும். கற்று வெளியேறுபவன் சமுதாயம் வேண்டிநிற்கும் சில தொழில்நுட்பங்களையும் நுணுக்கங்களையும் தெரிந்தவனுகவிளங்க வேண்டும். இதற்குக் கல்விச் சாலைகள்

எல்லாம் தொழிற்சாலைகளாகவும் தொழிற் சாலைகள் எல்லாம் கல்விச்சாலைகளாகவும் மலரவேண்டும். தற்போது நடைமுறையி லிருக்கும் ஒன்றிணைந்த கல்வித்திட்டம் இக் கல்விமுறைக்கு மிகவும் வாய்ப்பானது. ஒவ்வொருவனும் பெறும் அனுபவமே கல்வி. வாழ்க்கைக்காகவே கல்வி என்ற உன்னத கோட்பாடுகளின் அடிப்படையில் நோக்குவ தானுல் வாழ்க்கையைக் கொண்டு நடாத்த சில அனுபவங்களைக் கல்விமூலம் பெற்றி ருத்தல் வேண்டும். தொழில்சார்ந்த கல் வியே எமக்குப் பயனுள்ள கல்வியாக வாழ்க் கைக்குகந்த கல்வியாக அமையமுடியும். எமது சமுதாயத்தின் தேவையோடு பொருந் திச் செல்லத்தக்கதாக கல்வித்திட்டத்தை மாற்றியமைக்க வேண்டுமேயொழிய, கல் விச் சீர்திருத்தங்கள் என்ற போர்வையில் மேற்கொள்ளப்பட்ட செயல்கள் எல்லாம் பழைய யந்திரத்திற்கு வெவ்வேறு வர்ணங் கள் பூசி புதியதாக்குவதற்கு ஒப்பாகும்.

தொழில்முறைக் கல்வி என்பது ஒரு புதிய கோட்பாடல்ல. யேர்மனி, யப்பான் போன்ற நாடுகளிலெல்லாம் தொழிற் சாலைக்கும் கல்விச்சாலைக்கும் பேதம் காண முடியாதளவுக்கு கல்வியும் தொழிலும் இணைந்துள்ளன. ''இரத்தத்தாலும் தசை யாலும் உருவாக்கிய யேர்மனியை இரும் பாலும் உருக்காலும் கட்டியெழுப்புவேன்'' என யேர்மனியை வளர்த்துச் செல்கையில் பிஸ்மார்க் கூறியதை வரலாறு சான்றுபக ரும். இலங்கையிலும் காலத்துக்குக் காலம் கல்விச்சீர்திருத்தம் வரும்போது தொழிற் கல்வி பற்றியும் எடுத்துரைக்கப்பட்டது. **1972**–ல் தொழில் முன்னிலைக்கல்வி என விசேடமாகக் குறிப்பிட்டு, மாற்றங்கள் செய்தபோதும் எதிர்பார்த்த விளைவுகளை நாம் பெறவில்லை. அடித்தளத்தில் கல்வி பற்றிய எமதுநோக்கு மாறுபடாதவரை தொழிற்கல்வியின் நடவடிக்கைகள் வெறும் சிபாரிசுகளாக ஏட்டுச் சுரத்துக்களாகவே இருக்கும். நிர்வாக அலுவல்களை உருவாக்கு வதற்காக தமது இலக்குகளை அடைவதற் காக ஒரு நூற்றுண்டிற்குமுன் அன்னியரால் புகுத்தப்பட்ட கல்விமுறையில் மாற்றங்கள் சீர்திருத்தங்களைச் செய்யாது, நாட்டின் தேவைகள், அபிவிருத்திகள் ஆகியவற்றைப் பிரதிபலிக்கக்கூடிய பயனுறு கல்வியாக மாற்ற முழுமையான மாற்றங்களை அரசி யல் ஈடுபாடற்று ஏற்படுத்தப்படவேண்டும். எப்பகுதிகளில் அபிவிருத்தித் திட்டங்களை உற்பத்திகளை உருவாக்க, மூலவளங்கள், மனிதவளம் உண்டோ அங்கு வரப்போகும் மாவட்ட அபிவிருத்திச் சபைகளின் மூலம் நடைமுறைப்படுத்த வேண்டும்.

தொழிற்கல்வி என்ற கோட்பாட்டில் ஏனைய கல்வித்துறைகள் புறக்கணிக்கப்படும் என்பது அர்த்தமல்ல. போதனைமூலம் பெறும் கல்வியைவிட சாதனைமூலம் பெறும் அனுபவமே சிறந்தது. இந்தவகையில் கணிதம், விஞ்ஞானம், அழகியல் போன்ற ஒவ்வொரு கல்வித்துறையும் தொழில்க ளுடன் இணைவுபடுத்திக் கற்பிக்கும்போது பயனுள்ளதாக அமையமுடியும். இன்றைய நிலையில் அனேகர் மேசைநிலைப்பணி தவிர்ந்த தொழில்களைச் செய்யமுடியாதவனுகின்றுன். உதாரணமாக விஞ்ஞானத்துறைப் பட்ட தாரி தனது வீட்டிலுள்ள பித்தளைப் பாத் திரத்திற்கு ஈயம்பூச, சாதாரண தொழி லாளியை நாடினுல், அவர்பெற்ற பட்டம் வெறும்பட்டமே. தொழிற்கல்வியுடன் எல் லாத்துறைகளையும் இணைந்த கல்வியாக மாற்றுவதன்மூலம் இந்நிலைமாறி வாழ்க்கைக் கான கல்வியை வழங்குமென்பதில் ஐய மில்லை.

அடுத்ததாக பொருளாதார ரீதியில் நோக்கினுல், இலங்கை ஒரு விவசாய நாடு. அத்துடன் வளர்முக நாடும்கூட, ''உள வுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய் வோம்'' என்ற பாரதிவாக்கு, விவசாயத் துடன் கைத்தொழிலும் வளர்ந்தால் தான் நாடு அபிவிருத்தியடைய முடியும் என்பது வெளிப்படை. இலங்கை விவசாய நாடாக விருந்தும் உணவிற்காக வெளிநாட்டில் கை யேந்தி நிற்கிறேம். கைத்தொழில்கள் குழந்தை நிலையில்கூட இல்லை, தொழில் களின் விருத்தியையே இலங்கை வேண்டி

நிற்பதென்றால், இலங்கையின் கல்வித்திட்டத்திலும் இது பிரதிபலிக்க வேண்டும். கல்வித்திட்டமென்பது நாட்டின் அடிப்படைத் தேவைக்கேற்றதாக அமைந்தால் தான் பயனுள்ள கல்வி அல்லது வாழ்க்கைக் கல்வி எனலாம்.

பல வளர்முக நாடுகள் கல்வியில் புதிய மாற்றங்களைப் புகுத்தி உள்ளன. இலங்கையும் மாற்றம் ஏற்படுத்த வேண்டுமானால் தொழில்முறை சார்ந்த கல்வியாக இருத்தல் பொருத்தம். தொழில்முறைக் கல்வியின் அமைவும் வெற்றியும் நடைமுறைப் படுத்தலிலேயே தங்கியுள்ளது. அரசியல் இன மொழி வேறுபாடுகளுக்காக அமையாது, நாட்டின் நலனே முக்கியமாக இருத்தல் வேண்டும். விவசாயம் சார்ந்த கைத்தொழில்களுடனும் நாட்டில் தாராளமாகக் கிடைக்கக்கூடிய மூலப்பொருட்களுடன் தொடர்பான தொழில்நுட்ப நுணுக்கமுறைகளை உள்ளடக்கிய கல்விமுறையை உருவாக்கவேண்டும். இளம்சந்ததியினர் கற்று வெளியேறியவுடன் தேக்கமின்றி ஒரு தொழிலில் ஈடுபடக் கூடியதாக அமைய வேண்டும். தொழில்களுக்கு சமுதாயத்தில் மதிப்பு ஏற்படும் வகையில் தொழிலாளர் வர்க்கத்திற்கும் நிர்வாகமட்ட வர்க்கத்திற்கும் சமவேதனம் கிடைக்கவேண்டும். உதாரணமாக மூலப்பொருட்களாக ஏற்றுமதி செய்யாது உற்பத்திப் பொருட்களாக ஏற்றுமதியாகும் நிலை றப்பருக்கு உண்டாக வேண்டும். இதனால் வளர்முக நாடுகளுக்கே உரித்தான அண்டிவாழும் தன்மையைக் குறைத்துக்கொள்ளலாம்.

தொழிற்கல்வியில் நாடு பொருளியல் ரீதியில் அபிவிருத்தி யடைவதோடு, சமூக ரீதியிலும் அபிவிருத்தியடைய முடியும். சமூகரீதி என்னும்போது, இனமொழி வேறுபாடு இன்றி பலநாடுகள் ஐக்கியப்பட்டு வளர்ந்ததையும், சிலநாடுகள் சிதைவடைந்ததையும் நாம் அறிவோம். பொருளியல் தாக்கம் மிகுகின்ற வேளைகளில் தான், இன மொழி ஏன் பிரதேச வேறுபாடுகளும் ஒரு நாட்டில் உருவாகின்றது. பொருளாதார வளம் மிகும்போது, இவ்வேறுபாடுகள் மறைந்து விடுகின்றது. அத்துடன் எல்லோரும் தொழிலில் ஒருமித்து ஈடுபடும்போது ஓரினவர்க்கம் என்ற எண்ணமும் தொழில் மகத்துவமும் ஏற்படுகின்றது. இந்த அடிப்படையிலும் தொழிற்கல்வி நாட்டின் அபிவிருத்திக்கும் சமூக அபிவிருத்திக்கும் வழி வகுக்கின்றது. இலங்கையில் உயர்கல்வி நிலையில் தொழிற்பயிற்சி நிலையங்கள், தொழில்நுட்பக் கல்லூரிகள் உண்டு. பள்ளிப் பருவத்திலேயே தொழில்சம்பந்தமான அனுபவங்களைப் பெற வாய்ப்புகள் உண்டு. நாடு அபிவிருத்தியடைய தொழிற்கல்வி முறை ஒரு சிறந்த வழி.

என்ன வளமில்லை எம் திருநாட்டில்
ஏன் கையை ஏந்த வேண்டும் வெளி
நாட்டில்.

★★
★

100010

# நன்றி மறப்பது நன்றன்று....

★ பொன்விழாக் கருமங்களைச் செவ்வனே நிறைவேற்றும் திருவருளுக்கு

★ பொன்னையும் பொருளையும் வழங்கிய வள்ளல்களுக்கு

★ பொற்புடன் பொலியும் மண்டபந்தந்த மன்னவன் திரு. த. தம்பிராசாவுக்கு

★ குழாய்நீர் வசதிக்குதவிய திருவாளர்கள் கு. ஜெயராசா, க. பேரம்பலம், வி. முத்துவேலு, வை. கிருஷ்ணபிள்ளை, க. இளையதம்பி ஆகியோருக்கு

★ மின்னொளி வழங்கி உதவிய திரு. மா. நாகரத்தினத்துக்கு

★ புதிய அலுவலகம் அமைத்துத்தந்த திரு. சு. மகேந்திரனுக்கு

★ முகப்பு நுழைவாயில் அழகுற அமைப்பதற்கு உதவிய திரு. மு. இரத்தினத்துக்கு

★ பொன்மலருக்குக் கட்டுரை, கவிதைகள் வழங்கிய அறிஞர்களுக்கு

★ பொன்சேர விளம்பரம் தந்தவர்களுக்கும், சேகரித்தோர்க்கும்

★ பொன்விழாக் கலைநிகழ்ச்சிகளுக்கு உதவியோருக்கு

★ பொன்விழாப் போட்டிகளின் நடுவர்களுக்கு

★ பொன்விழா கலை, கதம்ப, விளையாட்டு நிகழ்ச்சிகளில் பங்கு கொண்டவர்களுக்கு

★ பொன்விழாவிற்கு ஆலோசனை வழங்கிய பெரியார்களுக்கு

★ பொன்மலரை அச்சிட்டு உதவிய புனிதவளன் அச்சகத்தாருக்கு

★ பொன்விழாச் சிறப்பாக அமைய முன்னின்றுழைத்த ஆசிரியர்கள், மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச் சபையினர், பழையமாணவர், நலன்விரும்பிகள் அனைவருக்கும்

★ பொன்விழாவுக்குச் சமுகந்தந்து சிறப்பித்தோர்க்கு

★ பொன்னான ஒளி—ஒலி அமைப்புகளை வழங்கியவர்களுக்கு

சேர்ந்து உழைத்த அனைவருக்கும் கனிந்த நன்றி.

சி. பாலசுப்பிரமணியம்
செயலாளர்,
பொன்விழாச் சபை.

With the Best Compliments

of

# M. Nagaratnam & Co.,

**IMPORTERS & EXPORTERS**

**Dealers in Electrical Goods and**

**Contractors**

R. G. BUILDING

62, Stanley Road, — JAFFNA.

அன்பளிப்பு

# ஸ்ரீ முருகன் நகை மாளிகை

புதிய டிசைன்களில் நகை உற்பத்தி செய்வோர்



கே. கே. எஸ். வீதி,

**யாழ்ப்பாணம்**

புனித வளன் கத்தோலிக்க அச்சகம், யாழ்ப்பாணம்